padippakam

# கடாஃபி

மேற்கத்திய மீடியாக்களின் சதிக்கு பலியான தலைவர்



ஆதனூர் சோழன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# கடாஃபி

மேற்கத்திய மீடியாக்களின் சதிக்கு பலியான தலைவர்

ஆதனூர் சோழன்

நக்கீரன்
வெளியீடு

படிப்பகம்

padippakam


**கடாஃபி**

**ஆதனூர் சோழன்**

முதல் பதிப்பு 2011
பக்கங்கள் 144
நூலின் அளவு ( 14X21.5 ) டெமி
விலை ரூ.80/-

வெளியீடு
**நக்கீரன்**
105 ஜானி ஜான்கான் சாலை
இராயப்பேட்டை
சென்னை 14
தொடர்புக்கு 044 43993029

அட்டை வடிவமைப்பு
**ஆர்.சி.மதிராஜ்**
நூலழகு
**ஆதனூர் சோழன்**

கட்டமைப்பு
**ஆர்.எஸ்.பைண்டர்ஸ்**
சென்னை 5

அச்சாக்கம்
**சாருபிரபா பிரிண்டர்ஸ்**
சென்னை 14

**GADAFFI**

**Athanoor Chozhan**

First Edition 2011
Pages 144
Book Size (14X21.5) Demy
Price Rs. 80/-

Published by
**Nakkheeran**
105 Jani JahanKhan Road
Royapettah, Chennai 14
Ph 044 43993029

Wrapper Designed by
**R.C.Mathiraj**
Layout by
**Athanoor Chozhan**

Binding by
**R.S.Binding Works**
Chennai 5

Printed at
**Saaruprabha Printers**
Chennai 14

**ISBN: 978-93-81020-94-4**


படிப்பகம்

# கடாஃபி ஒரு பாடம்!

**19-ஆம்** நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை வல்லாதிக்க நாடான இத்தாலி, லிபியாவை ஆக்கிரமித்து அம்மண்ணின் வளங்களைச் சுரண்டியதோடு மட்டுமல்லாமல், அம்மக்களையும் அடிமைகளாக்கி அல்லலுறச் செய்தது. அடிமைத்தனத்திலிருந்து லிபியா மக்கள் விடுபட புரட்சிப்பதாகை ஏந்திப் புறப்பட்டான் ஓமர்முக்தார் எனும் மாபெரும் புரட்சிக் கிழவன். கொடுங்கரம் கொண்டு மக்கள் புரட்சியை ஒடுக்கியது இத்தாலி. புரட்சிவீரன் ஓமர்முக்தாரையும் கைது செய்தது. அவனை தூக்கிலிடும் முன் 'இறுதி ஆசையைச் சொல்' என்றது இத்தாலியின் சர்வாதிகாரம்.

'நான் கடவுளுக்கு சொந்தமானவன். அவருடைய துணையால் அவருக்காக நாங்கள் மீண்டும் வருவோம்' என்று பிரகடனமாய் ஒலித்தான் அந்த புரட்சிவீரன். இது நடந்தது 1931-ஆம் ஆண்டு.

38 ஆண்டுகளுக்குப் பின், மன்னர் ஆட்சியில் சிக்கிச் சீரழிந்த லிபிய மக்களுக்கு ஆபத்பாந்தவனாய், ஆதர்ஷ நாயகனாய் தனது 27 வயதில் 70 பேர் கொண்ட புரட்சிப் படையினரின் துணையுடன் ரத்தமின்றி -யுத்தமின்றி மன்னர் ஆட்சியை வீழ்த்தி லிபிய மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தான் மும்மர் கடாஃபி. படிப்பறிவில்லாமல், வறுமை மிஞ்சி, வாழ்க்கையே பாழ்பட்டு நின்ற லிபியா மக்களுக்கு வானொலி மூலம் தனது தேசத்தின் சுதந்திரதின பிரகடனமாய்...

"உங்களின் சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, உங்கள் இதயம் விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக இன்று முதல் லிபியா சுதந்திரம் அடைந்துவிட்டது. ஊழல் மலிந்த அரசாங்கத்தை உங்கள் ராணுவம் அகற்றிவிட்டது. இனி யாரும் மன்னரும் இல்லை, அடிமையும் இல்லை. சமத்துவமும் சகோதரத்துவமும் மேலோங்கும். நமது பெருமையை நாமே கட்டுவோம், நமது பாரம்பரியத்தையும் கண்ணியத்தையும் புதுப்பிப்போம். நமது வேலையைத் தொடங்குவதற்கு இதுதான் சரியான நேரம். வாருங்கள் எல்லோரும் முன்னோக்கிப் போவோம்" -இதுதான் ஓமர்முக்தாரின் கனவை நனவாக்கப்

புறப்பட்ட இளைஞன் மும்மர் கடாஃபியின் வார்த்தைகள்.

அன்று ஆரம்பித்த கடாஃபியின் பயணம் லிபியாவின் முன்னேற்றத்திற்காகவே இருந்தது. உலகச் சண்டியர் அமெரிக்கா எத்தனையோ தடவை அவரது உயிருக்கு குறி வைத்தும் சாமர்த்தியமாகத் தப்பி, அமெரிக்காவிற்கே தண்ணிகாட்டியவர் கடாஃபி. லிபியாவின் எண்ணெய் வளத்தின் மீது அமெரிக்கா உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகளுக்கு எப்போதுமே ஒரு ஆங்காரப் பசி. சந்தர்ப்பம் பார்த்து இரைக்கு காத்திருந்த அவர்களுக்கு கடாஃபி குடும்பத்தினரின் பதவி வெறி எனும் பெரும் தீனி அகப்பட்டுக்கொண்டது. அசுர வேகத்தில் கடாஃபியை விழுங்கிவிட்டன வல்லாதிக்க வல்லூறுகள். இதுதான் காரணமே ஒழிய லிபியாவில் மக்கள் புரட்சி ஒன்றும் நடந்துவிடவில்லை. அப்படி ஒரு புரட்சி நடந்ததாக மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி உலக மக்களை நம்ப வைத்ததில் மேற்கத்திய உலக மீடியாக்களுக்குத்தான் பெரும் பங்கு உண்டு.


உள்ளூர் வங்கி முதல் உலகவங்கி வரை, அண்டை நாடு மட்டுமல்ல எந்த நாட்டிடமிருந்தும் ஒரு ரூபாய்கூட கடன் வாங்காமல், லிபியாவை வளம் கொழிக்கும் தேசமாக்கிய அதிபர் கடாஃபியின் வாழ்க்கை வரலாற்றை அற்புதமாக தந்துள்ளார் அண்ணன் ஆதனூர் சோழன். உலகமயமாக்கல் -சந்தைப் பொருளாதாரம் -வல்லரசுகளின் கலாச்சாரப் படையெடுப்பால் வளமான தேசத்தை சிக்கலுக்குள்ளாக்கி, கடாஃபியை எப்படி வீழ்த்தியது அமெரிக்கா என்பதை ஓங்கி ஒலித்து சொல்லியிருக்கிறார் ஆதனூர் சோழன். ஆதிக்க சக்திகளுக்கு சிம்மசொப்பனமாய், அடிமைகளுக்கு ரட்சகனாய் வாழ்ந்த கடாஃபியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

வழக்கம் போல் இந்நூலுக்கும் பேராதரவு தரும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

**என்றென்றும் உங்கள்**
**நக்கீரன் கோபால்**

padippakam





**மனித ஆற்றலுக்கு சாட்சியாக கடாஃபி அரசு கட்டிய 5 செயற்கை ஏரிகளில் ஒன்று. மாபெரும் செயற்கை நதித் திட்டத்தின் ஒரு பகுதி இது**

# எட்டாவது அதிசயம்

*"நம்ம நாட்டோட எண்ணெய் வருமானத்துல பெரும்பகுதி தண்ணீருக்கே செலவாகுது. தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தரமா தீர்வு காணமுடியுமா?"*

*விஞ்ஞானிகளிடம் கேட்டார் லிபியாவின் தலைவர் கடாஃபி.*

*"முடியும் தலைவரே. ஆனால், பணமும் காலமும் நிறைய ஆகும்"*

*"ஆகட்டுமே. எதிர்கால தலைமுறை நிம்மதியாக இருக்குமே. என்ன வழி என்று மட்டும் சொல்லுங்கள். மற்றவற்றை சமாளிக்கலாம்."*

*"1950-களில் சகாரா பாலைவனத்தில் எண்ணெய் வளத்தை ஆராய்ந்தார்கள். அப்போது, பாலைவனத்தின் அடியில் மிகப்பெரிய நன்னீர் கடல் இருப்பதாக மேற்கத்திய விஞ்ஞானிகள் கூறினார்கள். அந்த நீரை முறையாக*

படிப்பகம்

padippakam



பயன்படுத்தினால் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு லிபியாவின் தண்ணீர் தேவையை சமாளிக்கலாம்"

"சரி அதற்கான திட்டத்தை தீட்டுங்கள்"

உத்தரவிட்டார் கடாஃபி.

லிபியாவின் 90 சதவீத நிலப்பரப்பு சகாரா பாலவனத்தில்தான் அமைந்துள்ளது.

ஒரு பாலைவன நாடாக இருந்தாலும் ஆப்பிரிக்கா கண்டத்தில் நான்காவது பெரிய நாடு.

உலகின் 17-ஆவது பெரிய நாடு.

ஆனால், மக்கள் தொகை வெறும் 65 லட்சம்தான்.

ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதியில் மத்திய தரைகடலை ஒட்டி அமைந்துள்ளது லிபியா. மக்கள் வசிக்கும் நகரங்கள் அனைத்தும் கடலோரத்தில்தான் அமைந்துள்ளன. குறிப்பாக வடக்குப்பகுதியில்தான் நகரங்களே அமைந்துள்ளன. நாட்டின் நகரங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

பெட்ரோல் உற்பத்தியில் உலகின் 9 ஆவது பெரிய நாடு லிபியா.

அதாவது சவூதி அரேபியா, கனடா, இராக், ஐக்கிய அரபு எமிரேடுகள், குவைத், ஈரான், வெனிசூலா, ரஷ்யா, ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக லிபியா வருகிறது. பத்தாவது நாடு நைஜீரியா.

ஆனால், குடிதண்ணீருக்கு ரொம்ப ரொம்ப கஷ்டம்.

பெட்ரோல் விலையை விட தண்ணீருக்கு லிபியா அதிகம் செலவழிக்க வேண்டியிருந்தது.


லிபியாவின் தலைவராக 1969-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற முகமது கடாபி அந்த நாட்டை எல்லாவிதத்திலும் முதன்மையான நாடாக மாற்றுவதில் உறுதியாக இருந்தார்.

1950களில் லிபியாவில் எண்ணெய் வளத்தை கண்டுபிடிக்கும்

படிப்பகம்

padippakam






**5 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கு 12 அடி விட்டமுள்ள பைப்புகள் மூலம், வடபகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய செயற்கை நீர்த்தேக்கங்களுக்கு கொண்டு செல்லப்படும் நிலத்தடி நீர்**

ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அப்போதுதான் லிபியாவின் தென்பகுதி பாலைவனத்தின் அடியில் மிகப்பெரிய நீர் ஆதாரம் இருப்பதை கண்டறிந்தார்கள்.

பாலைவனத்துக்கு அடியில் ஒரு மாபெரும் நன்னீர் பரப்பு இருந்தது. 3 லட்சத்து 75 ஆயிரம் கன கிலோமீட்டர் அளவுள்ள மாபெரும் நன்னீர் கடல் அது. 40 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. அதை படிமநீர் என்றே அழைத்தார்கள். லிபியாவின் தண்ணீர் தேவையை அடுத்த 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு சரிக்கட்டும் என்கிறார்கள்.

வடபகுதியில் கடலோர நகரங்களுக்கு தண்ணீர் வழங்கிய நிலத்தடி நீர் வளம் கடல் மாசு காரணமாக பயன்படுத்தவே முடியாத அளவுக்கு கெட்டுவிட்டது.

படிப்பகம்

padippakam



கடல்நீரை சுத்திகரிக்கும் திட்டத்திற்கு செலவிடும் தொகையும் மலைப்பை ஏற்படுத்தியது.

லிபியாவின் தலைவராக லிபிய மக்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்துவிட்ட கடாபி, தண்ணீர் பிரச்சினைக்கு முடிவுகட்ட மிகப்பெரிய திட்டத்தை வகுத்தார்.

உலகிலேயே மிகப்பெரிய செயற்கை நதியை உருவாக்குவதுதான் அவருடைய திட்டம்.

மனிதனால் உருவாக்கப்படும் மிகப்பெரிய செயற்கை நதி என்பது முதலில் காமெடியாகத்தான் தோன்றியது.

அது என்ன செயற்கை நதித் திட்டம்?

லிபியாவின் தென்பகுதியில் சகாரா பாலைவனத்தின் அடியில் ஆயிரத்து ஐநூறு அடி ஆழத்தில் ஆயிரத்து முன்னூறு தண்ணீர் கிணறுகளை தோண்டுவது. அங்கிருந்து சுமாராக 5 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கு 12 அடி விட்டமுள்ள பைப்புகள் மூலம், வடபகுதியில் அமைந்துள்ள திரிபோலி, பெங்காஸி, சிர்ட்டே ஆகிய நகரங்களுக்கு அருகில் மிகப்பெரிய செயற்கை நீர்த்தேக்கங்களில் சேமிப்பது.

இது சாத்தியமாகும் என்று யாராவது நினைப்பார்களா?

இந்த திட்டத்துக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று நிபுணர்கள் சொன்னார்கள்.

“ஓ.கே. செயல்படுத்தலாம்” என்றார் கடாபி.

சரி. எப்படி செயல்படுத்துவது?

திட்டத்தை செயல்படுத்த பொறியியல் வல்லுநர்கள் இல்லையே?

“வெளிநாடுகளின் உதவியைக் கேட்கலாம்”

“எந்த நாடுகளிடம்?”

“தென்கொரியா, துருக்கி, ஜெர்மனி, ஜப்பான், பிலிப்பைன்ஸ், பிரிட்டன்”

கடாஃபி நாடுகளை பட்டியலிட்டார்.

படிப்பகம்

padippakam





**வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தை நம்பியிருந்த கடாஃபி அரசு சொந்தமாகவே பைப்லைன்கள் தயாரிக்கத் தொடங்கியது.**

1984-ஆம் ஆண்டு. தண்ணீரை கொண்டுவர பயன்படும் குழாய்களை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிரெகா நகரில் கடாபி அடிக்கல் நாட்டினார்.

முறைப்படி திட்டம் தொடங்கப்பட்டது.

1991-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திட்டத்தின் முதல்கட்டம் நிறைவடைந்தது. அஸ்-ஸரிர் மற்றும் டாஸெர்போ என்ற இடங்களில் அமைக்கப்பட்ட நிலத்தடி நீர் கிணறுகளில் இருந்து ஆயிரத்து 200 கிலோமீட்டர் பைப் லைன் மூலம் செயற்கையாக உருவாக்கப்பட்ட அஜ்தாபியா நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் விழத் தொடங்கியது.

அங்கிருந்து பெங்காஸி, சிர்ட்டே ஆகிய நகரங்களுக்கு தண்ணீர் வினியோகிக்கப்பட்டது.

வாழ்க்கையில் முதல்முறையாக அந்த நகர மக்கள் குடிக்கவும், குளிக்கவும், துவைக்கவும் தங்கள் வீட்டுக் குழாயில் தண்ணீர் கொட்டும் சந்தோஷத்தை அனுபவித்தார்கள்.

இந்த முதல் கட்டம் நிறைவேற 5 லட்சம் கான்கிரீட்

படிப்பகம்

padippakam





**12 அடி குறுக்களவு உள்ள பிரமாண்டமான பைப்**

பைப்புகள் தேவைப்பட்டது. 25 லட்சம் டன் சிமெண்ட் பயன்படுத்தப்பட்டது. 8 கோடியே 50 லட்சம் கன அடி பள்ளம் தோண்ட வேண்டியிருந்தது. மொத்தத்தில் 68 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகி இருந்தது. நீர்த்தேக்கத்தின் விட்டம் 2 ஆயிரத்து 700 அடி. கான்கிரீட் சுவர், மற்றும் தரைத்தளம் கொண்டது. நாள் ஒன்றுக்கு இந்தத் திட்டத்தின்மூலம் 30 லட்சம் கன அடி தண்ணீர் கிடைத்தது.

இரண்டாவது கட்டம் அடுத்த மூன்று ஆண்டுகளில் நிறைவடைந்தது. ஃபெஸான் என்ற பகுதியிலிருந்து ஜெஃபாரா என்ற விளைநில சமவெளிக்கும் தலைநகர் திரிபோலிக்கும் இந்தத் திட்டத்தின்மூலம் தண்ணீர் கிடைத்தது. சுமார் 84 லட்சம் கன அடி தண்ணீர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் வினியோகிக்கப்பட்டது.

இந்தத் தண்ணீர் சேமிக்கப்படும் நீர்த்தேக்கம் உமர் முக்தார் நீர்த்தேக்கம் என்று பெயரிடப்பட்டது.

மூன்றாவது கட்ட வேலை முக்கியமானது. இது தெற்கு பகுதியில் உள்ள நிலத்தடி கிணறுகளில் இருந்து வடக்கு நோக்கி கொண்டுவரப்பட்டு முந்தைய இரண்டு கட்ட பைப் லைன்

படிப்பகம்

padippakam





**பாலைவனத்தின் ஊடாக 5 ஆயிரம் கிலோமீட்டர் பைப்லைன். அதையொட்டி அருமையான சாலை வசதி**

திட்டத்துடன் இணைக்கப்படுவது. இந்தப் பணிகள் 2007-ஆம் ஆண்டு நிறைவடைந்தது.

அப்போதுதான் கடாபி சொன்னார்...

"இது உலகின் எட்டாவது அதிசயம்"

ஆம். கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற திட்டம் இது. மனித சாதனைக்கு மிகப்பெரிய எடுத்துக் காட்டு இது.

"இந்தத் திட்டம் முழுமை அடைந்தவுடன் லிபியாவின் பாலைவனப் பரப்பு பச்சைப் போர்வை கொண்டு நிரப்பப்படும். ஆம். எங்கள் நாட்டு கொடியின் நிறத்தைப் போல!" என்று பெருமிதத்துடன் சொன்னார் கடாபி.

இந்தத் திட்டத்துக்காக பைப் லைன் நெடுகிலும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்துக்கு பாலைவனத்தின் ஊடாக அருமையான சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாலைகள் புதிய நகரங்கள் உருவாகவும் பயன்படும் என்ற தொலைநோக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

லிபியாவுக்கு கடாபி 42 ஆண்டுகள் தலைமைப் பொறுப்பு

படிப்பகம்

padippakam





**பைப்லைன் பாதைகளில் இதுபோன்ற பிரமாண்டமான கேட்வால்வுகள்**

ஏற்றுள்ளார். இந்த காலகட்டத்தில் லிபியாவை அவர் வழிநடத்திய விதம் மிகவும் அற்புதமானது.

இவ்வளவு பெரிய திட்டத்தை நிறைவேற்றிய அதேசமயத்தில் அவர் தனது மக்களுக்கு என்னென்ன வசதிகளை செய்து கொடுத்து வந்தார் என்பதையும் அறிந்தால் வியப்பு ஏற்படும்.

ஆம்.

லிபியாவில் எல்லா குடிமக்களுக்கும் மின்சாரம் இலவசம். அங்கு மின்கட்டணம் செலுத்த வேண்டியதே இல்லை.

வங்கிகள் அனைத்தும் நாட்டுடைமை என்பதால் குடிமக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வட்டியே இல்லை.

எல்லோருக்கும் வீடு என்பது லிபியாவின் மனித உரிமை பிரகடனம்.

புதிதாக திருமணம் செய்யும் தம்பதிகள் அனைவருக்கும் தங்களுடைய முதல் குடியிருப்பை வாங்குவதற்காக 24 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

கல்வியும், மருத்துவ சிகிச்சையும் எல்லோருக்கும் இலவசம். கடாபி தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கு முன் லிபியாவில் 25 சதவீதம் பேர் மட்டுமே கல்வி அறிவு பெற்றிருந்தனர்.

படிப்பகம்

padippakam







**பிரமாண்டமான கான்கிரீட் செயற்கை ஏரிகள். மூன்றடுக்கு கான்கிரீட் தளத்துடன் கட்டப்பட்ட கடல்போன்ற ஏரிப்பரப்பு. இவ்வளவும் நிலத்தடி நீர்**

இப்போது அங்கு 83 சதவீதம் பேர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.


விவசாயத்தை மேற்கொள்ள விரும்பும் லிபியருக்கு இலவச விளைநிலம் வழங்கப்படும். அத்துடன் பண்ணைவீடு, விவசாய சாதனங்கள், விதைகள், கால்நடைகள் என எல்லாமும் இலவசமாக வழங்கப்படும்.

தாங்கள் விரும்பும் கல்வி அல்லது மருத்துவ வசதி லிபியாவில் இல்லை என்றால், அவர்களுக்கு வெளிநாடு சென்று படிக்கவும் மருத்துவ வசதி பெறவும் பண உதவி செய்யப்படும். அதுமட்டுமின்றி, வெளிநாட்டில் அவர்கள்

படிப்பகம்

padippakam





வறண்ட பாலைவன நாட்டில் தான் நிறைவேற்றிய திட்டத்தால் செயற்கை ஏரியில் கொட்டும் தண்ணீரில் உற்சாகமாக நனையும் மக்களைப் பார்த்து பறக்கும் முத்தம் கொடுக்கிறார் கடாஃபி

தங்குவதற்கும் காரில் செல்வதற்கும் மாதம் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

லிபியர் ஒருவர் சொந்தமாக கார் வாங்கினால் கார் விலையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

லிபியாவில் பெட்ரோல் விலை 6 ரூபாய் மட்டுமே.

இவ்வளவு செய்தும் அந்த நாட்டுக்கு வெளிநாட்டுக்

படிப்பகம்

padippakam



கடன்கள் எதுவுமே இல்லை.

பட்டப்படிப்பு முடித்தபிறகு வேலை இல்லை என்றால், வேலை கிடைக்கும்வரை, அவருக்குரிய வேலைக்கு தகுந்த சம்பளம் இலவசமாக வழங்கப்படும்.

லிபியாவின் எண்ணெய் விற்பனையில் கணிசமான பகுதி லிபிய குடிமக்கள் பெயரிலான கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

குழந்தை பெறும் தாய்மாருக்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

லிபியாவில் 40 ரொட்டித் துண்டுகளின் விலை சுமார் 7 ரூபாய் மட்டுமே.

25 சதவீத லிபியர்கள் பல்கலைக் கழக பட்டம் பெற்றவர்கள்.

கடாபியின் சாதனைகளை வேறு எந்த நாட்டினரும் செய்ததில்லை.

தனது பாலைவன தேசத்தை பசுமையான சோலையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு தலைவனுக்கு எதிராக மக்கள் புரட்சி ஏன் வெடித்தது?

அது தன்னெழுச்சியான புரட்சியா?

திட்டமிடப்பட்டு தூண்டிவிடப்பட்ட கலகமா?

அது எங்கிருந்து தொடங்கி எப்படி முடிந்தது?

பார்க்கலாம்....

படிப்பகம்

padippakam






சிறுவயதில் தனது ஆதர்ஷ நாயகனாக வரித்துக் கொண்ட எகிப்து ஜனாதிபதி நாஸர் லிபியா வந்தபோது வரவேற்ற கடாஃபி

படிப்பகம்

padippakam





வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய லிபியாவில் காணப்படும் பாறைச் சித்திரங்களில் வனவிலங்குள் இருந்ததற்கான சான்றுகள்

# லிபியாவின் கதை

**பா**லைவன நாடுதான்.

ஆனால், இந்த நாட்டின் தனிமனித வளம் ஆப்பிரிக்க நாடுகளில் முதலிடம் பிடித்துள்ளது. ஆப்பிரிக்காவிலேயே தனிமனித வருமானம் அதிகமுள்ள நான்காவது நாடு.

எண்ணெய் உற்பத்தியில் உலகின் 9-ஆவது நாடு. பெட்ரோலிய உற்பத்தியில் உலகிலேயே 17-ஆவது நாடு.

ஆனால், வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய லிபியாவின் கதை வித்தியாசமானது

இன்றைக்கு ஆப்பிரிக்காவின் வடபகுதியில் பறந்து விரிந்து கிடக்கும் சஹாரா பாலைவனம் பத்தாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் பசுமையாகத்தான் இருந்தது.

படிப்பகம்

padippakam





**லிபியாவை ரோமர்களும், கிரேக்கர்களும் ஆண்ட காலங்களில் ஏராளமான புராதன சின்னங்களை கட்டினார்கள். சிரெனேவில் உள்ள ஜீயஸ் கோவிலின் சிதிலங்கள்**

ஏரிகளும் அடர்ந்த வனங்களும் பல்வேறு வகையான விலங்கினங்களும் குளுமையான தட்பவெப்பநிலையுமாக இருந்தது.

புராதன லிபியாவின் கடற்கரை சமவெளிகளில் புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கு ஏராளமான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கி.மு. 8000-ஆம் ஆண்டுகள் வாக்கில் புதிய கற்கால மனிதர்கள் இந்தப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் விலங்குகளை பழக்கப்படுத்தி பயன்படுத்தினர். பாறைகளிலும் குகைகளிலும் அவர்கள் செதுக்கியுள்ள ஓவியங்கள் அந்த காலகட்டத்தின் நிலையை நமக்கு தெளிவுப்படுத்துகின்றன.

ஜெபல் அகாகஸ் என்ற மலைப்பிரதேசத்தில் இத்தகைய ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன.

வராற்றுக் காலத்துக்கு முந்தைய லிபியாவைப் பற்றிய தகவல்கள் ஏராளமாக கிடைக்கின்றன. ஆறுகளும்,

படிப்பகம்

padippakam





**ரோமர்களின் காலத்தில் லெப்டிஸ் மேக்னாவில் கட்டப்பட்ட செப்டிமியஸ் செவரஸ் வளைவு அருமையான நினைவுச் சின்னம்**

புல்வெளிகளும், ஒட்டைச்சிவிங்கி, யானைகள், முதலைகள் உள்ளிட்ட விலங்குகளும் ஓவியங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

இன்றைய நவீன லிபியாவின் பல பகுதிகளிலும் பெர்பர் எனப்படும் பழங்குடி மக்கள் வசிக்கின்றனர்.

ஒரு காலக் கட்டத்தில் இன்றைய ஃபெஸான் பிரதேசத்தில் முடியாட்சி ஒன்றை நிறுவினார்கள். கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட இந்த முடியாட்சி கி.பி.500-ஆம் ஆண்டுவரை நீடித்தது. இந்தக் காலகட்டத்தில்தான் பினிசியர்கள் இந்த முடியாட்சியுடன் தொடர்பு ஏற்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து கிழக்கத்திய நாகரிகம் லிபியாவில் பரவத்தொடங்கியது.

ஆனால் கி.மு. 3900-ஆவது ஆண்டுகளில் தொடங்கி பசுமையாக இருந்த சஹாரா வறட்சியடைய தொடங்கியது.

படிப்பகம்

padippakam





**லிபியாவின் சகாரா பாலைவனத்தில் உள்ள ஆவ்ஜிலா என்ற இடத்தில் கட்டப்பட்ட ஆடிக் மசூதி, மிகப்பழமையானதாக கருதப்படுகிறது**

கொஞ்சம் கொஞ்சமாக இன்றைய சஹாரா உருவானது.

லிபியாவின் பூர்வ குடிமக்கள் தங்கள் அடையாளங்களை இழந்து பினிசியர்கள், கிரேக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டன. லிபியர்களுடன் உடன்பாடுகளை ஏற்படுத்தி அவர்களை ஏமாற்றி லிபியாவில் கிடைத்த உயர்ரக கச்சாப் பொருள்களை தங்களுடைய நாடுகளுக்கு அள்ளிச்சென்றனர்.

பினிசியர்கள் லிபியர்களை சுரண்டிக்கொண்டிருந்த வேலையில் கடலோர பகுதியில் ஒயேயா, லிப்த்தா, சப்ரதா என்ற மூன்று குடியேற்றப்பகுதிகளை உருவாக்கினார்கள். இந்த மூன்று நகரங்களும் இணைந்துதான் பின்னர் திரிபோலிஸ்

படிப்பகம்

padippakam





**1146-ஆம் ஆண்டில் திரிபோலி பிரதேசத்தை கைப்பற்றிய சிசிலி தீவின் நோர்மன் மன்னர் இரண்டாம் ரோஜர்**

ஆகியது. இன்றைய லிபியாவின் தலைநகராக அதுதான் இருக்கிறது.


கி.மு. 630 வாக்கில் கிரேக்கர்கள் லிபியாவின் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்தார்கள் அங்கு சிரெனே என்ற நகரத்தை உருவாக்கினார்கள். அடுத்த 200 ஆண்டுகளில் மேலும் நான்கு முக்கியமான நகரங்களை கிரேக்கர்கள் உருவாக்கினார்கள். பின்னர் அந்த ஐந்து நகரங்களையும் இணைத்து பெண்ட்டாபோலீஸ் என்ற புதிய நகரத்தை உருவாக்கினார்கள்.

அன்றைய கிரேக்க உலேகத்தில் இந்த நகரம் மிகப்பெரிய அறிவுச் சொத்துகளையும் கலை மையங்களையும் கொண்டிருந்தது. இங்கு புகழ்பெற்ற மருத்துவப் பள்ளியில் கட்டுமான கலைப் பயிற்சி நிலையமும் இருந்தன.

படிப்பகம்

padippakam






**1551-ஆம் ஆண்டு ஒட்டாமன் பேரரசின் கடற்படை திரிபோலியை முற்றுகையிட்டது. இதையடுத்து அங்கு ஒட்டாமன் பேரரசின் பிரதிநிதிகள் ஆட்சி நடத்தினார்கள்**

ஒரு கட்டத்தில் எகிப்தியர்கள் கிழக்கிலிருந்தும் கார்தேஜியர்கள் மேற்கிலிருந்தும் கிரேக்கர்களை நெருக்கினார்கள். முடிவில் பெர்சியர்களின் ஆளுமைக்கு கட்டுப்பட நேர்ந்தது.

கி.மு. 331-ல் மகாஅலெக்சான்டர் லிபியா வந்த போது கிரேக்கர்கள் அவரை உற்சாகமாக வரவேற்றார்கள்.

மீண்டும் லிபியாவின் கிழக்குப் பகுதி கிரேக்கர்களின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. ஆனால் தாலமி முடியாட்சியின் ஒரு பகுதியாகவே கிரேக்கர்கள் இயங்கினார்கள்.


கிரேக்கர்கள் சரியான தலைமை இல்லாமல் தங்கள் விருப்பத்திற்கு ஆட்சி நடத்தினார்கள். இது ரோமர்களுக்கு நல்லவாய்ப்பை உருவாக்கித் தந்தது அவர்கள் கார்தேஜை எளிதாக ஆக்கிரமித்தார்கள். ஆனால் லிபியாவின் முக்கியமான பகுதியாக கருதப்பட்ட திரிபோலிடானியாவை அவர்கள் உடனடியாக கைப்பற்றவில்லை.

அந்தப் பகுதியை நுமிடியாவின் மன்னர்கள் வசம் விட்டுவைத்தார்கள். சில காலம் கழித்து கடலோரப் பகுதியில் அமைந்த நகரங்கள் தங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். அப்போதுதான்

படிப்பகம்

padippakam





லிபிய பழங்குடி மக்கள் பாலைவனப் பகுதியில் அமைந்துள்ள ஒயாஸிஸ்களில் ஒட்டகங்களை மேய்ப்பார்கள்

ரோமர்கள் திரிபோலிடானியாவுக்குள் நுழைந்தார்கள். அதைத்தொடர்ந்து தாலமின் மன்னர் சிரனைக்காவை ரோமர்களிடம் ஒப்படைத்தார்.

பின்னர் ரோமர்கள் லிபியாவின் மற்றபகுதிகள் மீதும் கவனம் செலுத்தினார்கள். திரிபோலிடானியா ஆலிவ் எண்ணெய் உற்பத்தியில் புகழ்பெற்றது. அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஆலிவ் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது. யானை தந்தங்களையும், வனவிலங்குகளையும் வியாபாரம் செய்யும் முக்கியமான மையமாக திரிபோலிடானியா மாறியது.

அதேசமயம் சிரனைக்கா ஒயின் வகைகள், மருந்துகள், குதிரைகள் ஆகியவற்றுக்கு புகழ்பெற்றது.

கிராமப்பகுதிகளில் பெர்பர் இனத்தை சார்ந்த விவசாயிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. மேற்குப் பகுதியில் வாழ்ந்த அவர்கள் கிட்டதட்ட ரோமானியர்களை போலவே மாறிவிட்டார்கள்.

கி.பி.5-ஆம் நூற்றாண்டு வாக்கில் வடஆப்பிரிக்கா மீது வண்டல்கள் போர் தொடுத்தனர். அவர்கள் தாங்கள் கைப்பற்றும் பகுதிகளை நாசம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தன அதுவரை உருவாக்கப்பட்ட நகரங்களும் நாகரிகங்களும் சிதைக்கப்பட்டன.

படிப்பகம்

padippakam



வண்டல்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களுக்கு விடுதலை வேண்டுமென்று லிபியாவின் வடபகுதி மக்கள் பழங்குடி தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

லிபியாவின் மற்ற பகுதிகள் வண்டல்களின் பிடியில் இருந்தாலும் சிரனைக்கா பைஸாண்டிய பேரரசின் அவுட்போஸ்டாக நீடித்தது. ஆனால் பைஸாண்டிய பேரரசின் பிரதிநிதிகள் சிரனைக்காவை சீரழித்தனர். பைஸாண்டிய பேரரசின் ஆட்சி ஆப்பிரிக்காவில் ரோமர்களின் அடையாளத்தை மற்றொரு நூற்றாண்டு நீடிக்க செய்தது.

ஆனால் கி.பி.7-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் பைஸாண்டியர்கள் பலமிழந்தனர். பெர்பர் இனத்தினர் பைஸாண்டியர்களுக்கு எதிராக அடிக்கடி கலகத்தில் ஈடுபட்டனர். எனவே இஸ்லாமியர்கள் போர் தொடுத்தபோது அவர்களை எதிர்க்க இயலாமல் தோற்றனர்.

கி.பி. 642-ஆம் ஆண்டு முதல் லிபியாவின் கடலோர நகரங்கள் அரேபிய குதிரைப்படை வீரர்களிடம் மிகச் சுலபத்தில் வீழ்ந்தன.

அமிர் இபின் அல் அஸ் என்பவர் தலைமையில் சிரனைக்காவை இஸ்லாமியர்கள் கைப்பற்றினார்கள். அந்த பகுதியில் இருந்த பெண்டாபோலிஸ் என்ற நகரத்திற்கு பர்கா என்று பெயர் சூட்டினார்கள். அவர்கள் மிக விரைவில் திரிபோலியையும் கைப்பற்றினார்கள். அங்கு ரோமர்கள் உருவாகிய கோட்டைச் சுவர்களை அழித்தார்கள்.

கி.பி.647-ஆம் ஆண்டு 40 ஆயிரம் அரேபியர்கள் வீரர்கள் கொண்ட இராணுவம் அப்துல்லா இபின் ஷாத் தலைமையில் லிபியாவின் மேற்குப் பகுதியைக் கைப்பற்றி பைஸாண்டியர்களை முற்றிலுமாக வெளியேற்றியது.


வடக்கே பர்க்கா நகரிலிருந்து தெற்கே ஃபெஸான் பிரதேசத்தை 663-ஆம் ஆண்டு இஸ்லாமியர்கள் கைப்பற்றினார்கள். லிபியா முழுவதும் இஸ்லாமியர்களின் வசம் வீழ்ந்தது. அடுத்து வந்த நூற்றாண்டுகளில் பல்வேறு இஸ்லாமிய அரசுகள் லிபியாவை ஆட்சி செய்தனர்.

பைஸாண்டியர்களின் ஒடுக்குமுறையிலிருந்து தங்களை விடுவிக்க வந்தவர்களாக அரேபியர்களை லிபிய பழங்குடி

படிப்பகம்

padippakam





**1801-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பார்பரி யுத்தத்தில் அமெரிக்கா நடத்திய மத்தியத் தரைகடல் போர்**

மக்கள் கருதினார்கள். அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதேசமயம் அரேபிய அரசியலை அவர்கள் விரும்பவில்லை.

இஸ்லாமியர்களின் ஆட்சிகாலத்தில் லிபியா முழுவதும் கலாச்சார ரீதியாகவும், மொழி ரீதியாகவும் அரேபிய மயமாக்கப்பட்டது.

இஸ்லாமியர்களின் ஆதிக்கம் வலுவிழக்க தொடங்கியது. கி.பி. 1510-ஆம் ஆண்டு வக்கில் லிபியா மீது சிசிலியில் இருந்து நோர்மர்கள் லிபியாவைத் தாக்கினார்கள்.

ஒட்டாமன் பேரரசும் ஸ்பெயினும் அதிகார போட்டியில் ஈடுபட்டிருந்தன. 1510-ஆம் ஆண்டு திரிபோலியை ஸ்பெயின் கைப்பற்றியது. அங்கு செயின்ட்ஜான் என்பவரின் தலைமையில் நிர்வாகத்தை அமைத்தது. ஆனால், 1551-ஆம் ஆண்டு ஒட்டாமன் பேரரசின் தளபதியான சினன் பாஷா லிபியாவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

1551-ஆம் ஆண்டு முதல் ஒட்டாமன் பேரரசின் ஆளுகைக்கு லிபியா வந்தது. அதன் பிறகு லிபியாவில் பலமுறை ஆட்சி மாற்றங்களும் கலாச்சார மாற்றங்களும் ஏற்பட்டன. ஒட்டாமன் பேரரசின் பிரதிநிதிகளில் பலர் தங்களுடைய சொந்த பாணியில்

படிப்பகம்

padippakam



ஆட்சி நடத்தினார்கள். அவர்களுடைய காலத்திலும் கூட திரிபோலிடானியா, சிரனைக்கா, ஃபெஸான் ஆகிய பகுதிகள் தனித்தனியாகவே நிர்ணயிக்கப்பட்டன. அரேபிய கலாச்சாரம் சீரழிக்கப்பட்டது.

உள்நாட்டுப் போர்களும் அவ்வப்போது நடைபெற்றன. லிபிய பழங்குடி மக்கள் ஒட்டாமன் பேரரசு பிரதிநிதிகளுக்கு எதிராக அவ்வப்போது கிளர்ந்து எழுந்தார்கள்.

19-ஆம் நூற்றாண்டு தொடர்ச்சியான போர்களை சந்திக்க நேர்ந்தது. திரிபோலிடானியா மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அடுத்தடுத்து நடைபெற்ற இந்த யுத்தங்கள் பார்பரி யுத்தங்கள் என்று அழைக்கப்பட்டன.

1819-ஆம் ஆண்டு தொடங்கி நெப்போலியன் நடத்திய போர்கள் திரிபோலிடானியாவின் பொருளாதாரத்தில் சீரழித்தன. ஒட்டாமன் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில் அடிமை வியாபாரம் உச்சத்தில் இருந்தது. 1890-ஆம் ஆண்டு வரை இந்த வியாபாரம் நீடித்தது.

ஒட்டாமன் பேரரசின் கட்டுப்பாடு தளரத் தொடங்கியது. இதையடுத்து ஒட்டாமன் பேரரசின் நேரடி நிர்வாகம் லிபியா மீது திணிக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் லிபியாவின் மூன்று பகுதிகளும் ஒரே பகுதியாக இணைக்கப்பட்டு நிர்வகிக்கப் பட்டது.

இது நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஐரோப்பிய நாடுகள் தங்களுக்கென்று குடியேற்றப் பகுதிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. லிபியாமீது இத்தாலி குறிவைத்தது.

1911 முதல் 1912 வரை துருக்கி ராணுவத்துடன் இத்தாலி மோதியது. முடிவில் லிபியாவின் மூன்று பகுதிகளையும் தனது குடியேற்றப் பகுதிகளாக இத்தாலி அறிவித்தது.

1912 முதல் 1927-ஆம் ஆண்டு வரை லிபியா, இத்தாலிய வடஆப்பிரிக்கா என்றுதான் அறியப்பட்டது. 1927-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை இந்தப் பிரதேசம் இத்தாலிய

படிப்பகம்

padippakam





**1912களில் தொடங்கி லிபியாவை கைப்பற்ற இத்தாலி மேற்கொண்ட போரில், இத்தாலி வீரர்கள் பாலைவனப் பகுதியில் உமர் முக்தாரை தேடி அலைந்தனர்**

சிரனைக்கா, இத்தாலிய திரிபோலிடானியா என்று இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவை இரண்டு குடியேற்றங்களாக உருவாக்கப்பட்டு இத்தாலிய கவர்னர்கள் நியமிக்கப் பட்டனர்.

இத்தாலியின் ஆக்கிரமிப்பை எதிர்த்து லிபியர்கள் கொரில்லா யுத்தம் நடத்தினார்கள். இத்தாலியர்கள் கடலோரப் பகுதிகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. பாலைவனப் பகுதிகளில் அவர்களால் முன்னேற முடியவில்லை.

இத்தாலி ராணுவத்துக்கு எதிராக உமர் முக்தார் என்ற தலைவர் தலைமையில் லிபியர்கள் ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள்.

**உ**மர் முக்தார் 1862-ஆம் ஆண்டு பிறந்தவர். லிபியாவின் சிரெனய்க்கா பிரதேசத்தில் டோப்ரக் என்ற கிராமத்தில் பிறந்த இவர் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தவர். ஷெரீப் எல் கரியானி என்பவர் இவரை தத்தெடுத்து வளர்த்தார். உள்ளூர் மசூதியில் கல்வி பெற்றார். பின்னர் ஜாக்பப் நகரில் உள்ள செனுஸி பல்கலைக் கழகத்தில் எட்டு ஆண்டுகள் படித்தார். செனுஸி இயக்கத்தின் தலைமையகமாக இந்தப் பல்கலைக் கழகம் கருதப்பட்டது.

படிப்பகம்

padippakam



1899-ஆம் ஆண்டு அங்கு பயிற்சி பெற்ற பலருடன் உமர் முக்தாரும் லிபியாவின் அருகில் உள்ள சாட் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டார். பிரான்ஸின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடிக்க சாட் தலைவர் ரபிஹ் அஸ் ஜுபைருக்கு உதவ அவர்கள் அனுப்பப்பட்டனர்.

அங்கு சண்டை முடிந்தவுடன் சிரெனய்க்கா திரும்பிய உமர் முக்தார் குரானை பயிற்றுவிக்கு ஆசிரியராக பணிபுரியத் தொடங்கினார்.

1910-களில் இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்நிலையில் 1911-ஆம் ஆண்டு இத்தாலியின் கப்பல்படை தளபதியான லுய்கி ஃபராவெல்லி லிபியாவின் கடற்கரைக்கு வந்தார். அப்போது அந்தப் பகுதி துருக்கியின் ஒட்டாமன் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்தது.

"உங்கள் பிரதேசத்தை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு சரணடைந்து விடுங்கள். இல்லையென்றால் திரிபோலி நகரை அழிப்போம்"

இத்தாலி தளபதியின் எச்சரிக்கையைத் தொடர்ந்து கடலோரப் பகுதியிலிருந்து துருக்கி ராணுவம் வெளியேறியது. ஆனால், சரணடையவில்லை. கிராமப் பகுதிகளுக்கு சென்றுவிட்டது. இதையடுத்து திரிபோலி நகர் மீது இத்தாலி ராணுவம் மூன்று நாட்கள் குண்டு மழை பொழிந்து அந்த நகரை நாசப்படுத்தியது.

இது திரிபோலிடானியர்களை ஆத்திரப்படுத்தியது. அவர்கள் இத்தாலிக்கு எதிராகப் போர்புரிய முடிவெடுத்தார் கள். அதைத் தொடர்ந்து உமர் முக்தார் தலைமையில் இத்தாலிக்கு எதிரான தொடர் போராட்டம் தொடங்கியது.

உமர் முக்தார் பாலைவன யுத்தத்தில் தேர்ச்சி பெற்றவர். அவருடைய தலைமையில் லிபியர்கள் கொரில்லா யுத்தத்தில் பயிற்சி பெற்றார்கள். அவருடைய தலைமையில் இத்தாலியர் களுக்கு எதிரான போர்களில் லிபியர்கள் பல வெற்றிகளைப்

படிப்பகம்

padippakam





**லிபியாவின் விடுதலைப் போராட்ட வீரர் உமர்முக்தார்**

பெற்றார்கள். இத்தாலியர்களுக்கு பாலைவனத்தில் யுத்தம் நடத்தத் தெரியவில்லை.

உமர் முக்தாரின் படைகள் இத்தாலி ராணுவ முகாம்களை திடீர் தாக்குதல் நடத்தி அழித்தது. அவர்களுக்கு உதவிகள் வரும் வழிகளை அழித்தது. இத்தாலியர்கள் வெளி உலகுடன் தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் பாலைவனத்தின் நடுவில் முடக்கியது. இத்தாலியர்கள் கடுமையான நெருக்கடியில் சிக்கினார்கள்.

1925-ஆம் ஆண்டு இத்தாலி ராணுவமும் கொரில்லா பயிற்சி பெற்ற குழுவை அமைத்தது. இது உமர் முக்தாரின் படைகளுக்கு நெருக்கடியை உருவாக்கியது. உமர் முக்தார் தனது போர்த்

படிப்பகம்

padippakam





**1931-ஆம் ஆண்டு உமர் முக்தாரை கைது செய்த இத்தாலி ராணுவ அதிகாரிகள், அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்**

தந்திரங்களை மாற்றி அமைத்தார். அவருக்கு எகிப்து உதவி செய்யத் தொடங்கியது.

உமர் முக்தாரின் திறமைகளை இத்தாலிய தளபதிகள் வியந்து பாராட்டினர். அவருக்குப் பின்னால் அணிவகுத்த மக்கள் கூட்டம் இத்தாலி ராணுவத்தை மலைக்கச் செய்தது.

ஆனால், குறிப்பிடத் தகுந்த வெற்றி பெற்ற நிலையிலும் உமர் முக்தாருடன் சமரசப் பேச்சுக்கு இத்தாலி ராணுவம் முன்வந்தது. இதை உமர் முக்தார் நிராகரித்தார்.


அதைத் தொடர்ந்து, 1930-ஆம் ஆண்டு இத்தாலி ராணுவத்துக்கு புதிய தளபதி நியமிக்கப்பட்டார். இந்தமுறை இத்தாலி ராணுவத்துக்கு விமானங்கள் வந்திருந்தன. பாலைவனப் பகுதியில் விமானங்கள் துணையுடன் இத்தாலி ராணுவம் முன்னேறத் தொடங்கியது. லிபியர்களில் இத்தாலி ராணுவத்துக்கு உளவு பார்க்கும் கருங்காலிகள் உருவாக்கப்பட்டார்கள்.

கொரில்லா யுத்தம் முன்புபோல இல்லை. மிகுந்த சிரமங்களுக்கு இடையில் உமர் முக்தார் தனது போராட்டத்தை தொடர்ந்தார்.

படிப்பகம்

padippakam





**உமர் முக்தார் மீது இத்தாலி ராணுவ நீதிமன்றத்தில் நடந்த விசாரணை**

1931-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இத்தாலி ராணுவம் நடத்திய திடீர்த் தாக்குதலில் காயமடைந்த உமர் முக்தார் கைது செய்யப்பட்டார். மூன்று நாட்கள் அவருக்கு எதிராக விசாரணை நடைபெற்றது. அமைதிக்கு ஆதரவாக அவர் குரானில் இருந்து பல்வேறு வாசகங்களை குறிப்பிட்டார்.

இருந்தாலும், 1931-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் தேதி பொது இடத்தில் அவரை தூக்கிலிட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பை வாசித்த நீதிபதி,

"கடைசியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்" என்று கேட்டார்.

"நாங்கள் கடவுளுக்குச் சொந்தமானவர்கள். அவருடைய துணையால் அவருக்காக நாங்கள் மீண்டும் வருவோம்" என்று உமர் முக்தார் கூறினார்.

தன்னுடைய ஆதரவாளர்கள் முன்னிலையில் உமர் முக்தார் தூக்கிலிடப்பட்டார். அப்போது அவருக்கு வயது 70.

இப்போது, உமர் முக்தாரின் உருவப்படம் லிபிய தினார் நோட்டுகளில் இடம்பெற்றுள்ளது.

உமர் முக்தார் தூக்கிலிடப்பட்டவுடன் தங்களுக்கு இனி எதிர்ப்பு இருக்காது என்று இத்தாலியர்கள் நிம்மதி

படிப்பகம்

padippakam





**லிபியாவின் பாலைவனப்பகுதியில் நடைபெற்ற இரண்டாம் உலகப்போரில் இத்தாலி மற்றும் ஜெர்மன் ராணுவத்துக்கு எதிராக ஆஸ்திரேலிய படை 240 நாட்கள் சண்டையிட்டது**

அடைந்தார்கள். லிபியா முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள்.

1928 முதல் 1932-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பெதோய்ன் இனத்தை சேர்ந்த மக்கள் தொகையில் பாதிபேரை இத்தாலிய ராணுவம் கொன்று குவித்தது. சுமார் 50 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் எமிலியோ கூறுகிறார்.

அதேசமயம், இந்த காலகட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் இத்தாலியர்கள் லிபியாவில் குடியமர்த்தப்பட்டார்கள். இது அன்றைய லிபிய மக்கள் தொகையில் 20 சதவீதம் ஆகும்.

1934-ஆம் ஆண்டுதான் லிபியா என்ற பெயரை இத்தாலி அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது. அதுவரை லிபியா என்பது எகிப்தை தவிர வடஆப்பிரிக்கா முழுமையும் குறித்து வந்தது. முதன் முறையாக லிபியாவின் சிரெனய்க்கா, திரிபோலி டானியா, ஃபெஸான் ஆகிய மூன்று பிரதேசங்களையும்

படிப்பகம்

padippakam





**விடுதலை பெற்ற லிபியாவின் முதலும் முடிவுமான மன்னர் இத்ரிஸ்**

இணைத்த பகுதிக்கு லிபியா என்று பெயர் சூட்டப்பட்டது.

இத்தாலியின் நிர்வாகத்தில் லிபியா இருந்த சமயத்தில் சிரெனய்க்காவின் எமிராக பொறுப்பு வகித்த இத்ரிஸ் அல்-மஹ்தி அஸ் - செனுசி இத்தாலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடி வந்தார். உமர் முக்தாரின் வழிவந்த செனுஸிகளின் போராட்டம் இரண்டாம் உலகப்போர் நடந்த சமயத்திலும் நீடித்தது.

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அதாவது 1943-ஆம் ஆண்டு முதல் 1951- ஆம் ஆண்டு வரை திரிபோனிடானியாவும் சிரெனய்க்காவும் பிரிட்டனின் நிர்வாகத்தில் வந்தன. ஃபெஸான் பகுதியை பிரான்ஸ் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இந்த காலகட்டத்தில் கெய்ரோவில் தஞ்சம் புகுந்திருந்த இத்ரிஸ் 1944-ஆம் ஆண்டு மீண்டும் லிபியாவுக்கு வந்தார் ஆனால் அவர் தனது சொந்தப் பகுதியான சிரெனய்க்காவுக்கு வர மறுத்துவிட்டார்.

படிப்பகம்

padippakam



ஏனென்றால் 1947 வரை சிரெனய்க்காவில் வெளிநாட்டு நிர்வாகம் நீடித்தது. இரண்டாம் உலகப் போர் சமயத்தில் இத்ரிஸ் நேச படைகளுக்கு ஆதரவாக இருந்தார். எனவே 1947-ஆம் ஆண்டு இத்தாலியுடன் ஏற்படுத்தப்பட்ட அமைதி உடன்பாட்டின்படி லிபியா மீதான தனது உரிமைகளை கைவிடுவதாக இத்தாலி அரசு அறிவித்தது.

லிபியா விடுதலை பெற்றுவிட்டது. இருந்தாலும் 1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதிதான் ஐக்கியநாடுகள் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்த தீர்மானத்தின்படி 1952-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன் லிபியா விடுதலை பெற்ற நாடாக மாறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1951-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ஆம் தேதி ஐக்கிய லிபிய முடியரசாக லிபியா தனது விடுதலையை பிரகடனம் செய்தது.

லிபியாவுக்கு தனியாக அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. வம்சாவளி மன்னர் ஆட்சிக்கு அந்த அரசியல் சட்டம் வகை செய்தது. ஆனால் அதுதான் லிபியாவின் ஒரே ஒரு முடியரசாக முற்றுப்பெறப்போவது அப்போது யாருக்கும் தெரியாது.

படிப்பகம்

padippakam





சகாராவின் பாலைவனப் பகுதியில் உள்ள அந்தக்கால ஓயாஸிஸ் கிராமம். இப்படி ஒரு கிராமத்தில்தான் கடாஃபி பிறந்தார்

# பாலைவனக் குழந்தை

**லி**பியா விடுதலைப் பெற்றதே தெரியாமல், ஏராளமான லிபியர்கள் வாழ்ந்து வந்தனர்.

லிபியாவின் வடக்கு பகுதியில் சிர்ட்டே என்ற சிறிய நகரம் இருக்கிறது. விடுதலைப் பெற்ற காலகட்டத்தில் அந்த நகரம் கிராமம் போலவே இருந்தது. அங்கிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் பாலைவனத்தின் நடுவில் ஒரு குடியிருப்பு இருந்தது.

பாலைவனப் பகுதியில் ஓயாசிஸ் எனப்படும் பாலைவனச் சோலைகள் ஆங்காங்கே இருக்கும். அந்தப் பகுதிகளில்தான் ஒட்டகங்களையும் மற்ற கால்நடைகளையும் மேய்க்கும் பழங்குடி மக்கள் வசித்தனர்.

பெர்பர், பிதாய்ன், கடாஃபா உள்ளிட்ட லிபியாவின் பழங்குடி மக்கள் அங்கு வசித்தனர். சிறு சிறு குடில்கள் அமைத்து மிகவும் கடினமான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தனர்.

இரண்டாம் உலகப்போர் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. லிபியாவை ஆக்கிரமித்து இருந்த

படிப்பகம்

padippakam



இத்தாலிக்கு எதிராக பிரிட்டனும் அமெரிக்காவும் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருந்த சமயத்தில் 1942-ஆம் ஆண்டு பாலைவனச் சோலை ஒன்றில் முஹமது கடாஃபி பிறந்தார்.

அந்த குழந்தை பிறந்த பழங்குடி இனம் கடாஃபா என்று அழைக்கப்பட்டது. கடாஃபா என்றால் எச்சில் துப்பப்பட்டவர்கள், வாந்தி எடுக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம். அந்த அளவுக்கு அந்த இனம் மிகவும் அவமானகரமான நிலையில் வைக்கப்பட்டு இருந்தது.

அப்படிப்பட்ட ஒரு இனப் பிரிவில் முகமது அப்துல் சலாம் பின் ஹமீது பின் முகமது என்பவருக்கும் ஆயிஷா அல் கடாஃபி என்ற பெண்மணிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர்களுக்கு ஏற்கெனவே இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தன.

பெர்பர்கள், சிர்காசியர்கள், துருக்கியர்கள், யூதர்கள் உள்ளிட்ட பல்வேறு இனத்தினரின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு அவர்கள் வாழவேண்டிய நிலை இருந்தது.

ஏழைகளாகவும் கல்வி அறிவற்றவர்களாகவும் வாழ்ந்த கடாஃப்பாக்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு காலம் காலமாக தாங்கள் அனுபவித்துவரும் கொடுமைகளை கதைகளாக சொல்லி வளர்த்தார்கள். அந்நியர்களுக்கு எதிராக தாங்கள் நடத்திய சண்டைகளையும் அவர்கள் கற்பித்தார்கள்.

அடக்குமுறைகளை அனுபவித்து வாழ்ந்தாலும் கடாஃபியின் பெற்றோர் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தன. கால்நடை வளர்ப்பின் மூலம் தாங்கள் சேமித்த சிறிதளவு பணத்தை கொண்டு கடாஃபியை குரான் கற்பிக்கும் தொடக்கப்பள்ளி ஒன்றில் சேர்த்தார்கள். பின்னர் சிர்ட்டே நகரில் உள்ள தொடக்கப்பள்ளியில் சேர்த்தார்கள். இதையடுத்து அந்தக் குடும்பத்தில் முதன்முதலாக எழுதப்படிக்க தெரிந்த நபராக கடாஃபி மாறினான்.

சிர்ட்டே நகரில் ஆரம்பக் கல்வி படித்த நேரத்தில் பகல் முழுவதும் பள்ளியில் இருப்பான். பள்ளி முடிந்தவுடன் நகரில் உள்ள மசூதி ஒன்றில் தங்குவான். அங்கேயே தூங்குவான். வியாழக்கிழமை மாலை சிர்ட்டேயிலிருந்து பாலைவனத்தின்

padippakam





ராணுவப் பயிற்சி கழகத்தில் கடாஃபி தனது நண்பர்களுடன்...

ஊடாக 20 கிலோ மீட்டர் நடந்து தனது பெற்றோரிடம் வருவான்.

வெள்ளிக்கிழமை மாலை அங்கிருந்து புறப்பட்டு சிர்ட்டே வருவான். சின்னவயதில் கடாஃபி தனது கல்விக்காக மிகப் பெரிய துன்பங்களை அனுபவித்தான். அவனுடைய வகுப்பில் அவன்தான் வயதில் மூத்தவன். மற்ற மாணவர்கள் அவனை பூசணிக்காய் என்று கேலி செய்வார்கள். அதற்கு தகுந்தாற்போல் அவன் கொழுகொழுவென்று இருப்பான்.

ஆரம்பப்பள்ளியை முடித்த போது அவனுக்கு 14 வயது ஆகியிருந்தது. அவனுடைய படிப்புக்காகவே ஸெப்பா நகருக்கு குடிபெயர்ந்தார்கள். இந்த நகரம் சஹாராவின் தெற்குப் பகுதியில் உள்ள ஃபெஸான் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அங்கு உயர்நிலைப்பள்ளி ஒன்றில் கடாஃபியை சேர்த்தார்கள்.

உயர்நிலைப்பள்ளியில் படித்த சமயத்தில் கடாஃபி, ஏராளமான நண்பர்களை கவர்ந்தான். அவர்களில் பலர் அவனுடன் நீண்ட காலம் தொடர்ந்து வந்தனர்.

லிபியா விடுதலைப் பெற்ற தொடக்க காலம் அது. இத்ரிஸ் மன்னரின் தலைமையில் சுதந்திர அரசாங்கம் பொறுப்பேற்று இருந்தது. தொடக்கத்தில் அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம்

படிப்பகம்

padippakam



அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் 1952-ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலிலேயே எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறின.

அதை தொடர்ந்து மன்னர் இத்ரிஸ் அரசியல் கட்சிகளுக்கு தடை விதித்தார். அவருடைய விருப்பம் போலவே நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. அவர் மேற்கத்திய நாடுகளின் கைப்பாவையாக செயல்பட்டு வந்தார். மத்திய கிழக்கு ஆசிய நாடுகளிலும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் அரபு தேசியவாதம் அல்லது ஒரே அரபுதேசம் என்ற முழக்கம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் ஆதரவுடன் அரபு சோசலிசம் என்ற முழக்கமும் வலுப்பெற்று கொண்டிருந்தது.

இந்தக் கோட்பாடுகள் அனைத்துமே மேற்கத்திய நாடுகளுக்கு எதிரானவை. ஆசிய நாடுகளில் மேற்கத்திய நாடுகளின் தலையீடுகளை தடுக்கும் நோக்கம் கொண்டவை.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு இனி ஒரு உலகப்போர் ஏற்பட்டு விடக்கூடாது என்ற சிந்தனை மேலோங்கியது. எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டின்மீது நேரடியாக போர் தொடுக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மேற்கத்திய நாடுகள் ஒரு அணியாகவும் சோவியத் யூனியன் ஒரு அணியாகவும் தங்கள் ஆதரவு பெற்ற அரசாங்கங்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தன.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் மேற்கத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களுக்கு சோவியத் யூனியன் ஆதரவு அளித்தது. அந்த நாடுகளில் அமைந்துள்ள தங்களுடைய ஆதரவு அரசாங்கங்களை பாதுகாக்கும் முயற்சியில் மேற்கத்திய நாடுகள் ஈடுபட்டிருந்தன.

இது மறைமுகப் போராக கருதப்பட்டது. இதைத்தான் பனிப்போர் என்று அழைத்தார்கள்.

லிபியாவின் பக்கத்து நாடான எகிப்தில் கமால் அப்துல் நாசர் தலைமையில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மிகப்பெரிய கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. அரபு நாடுகளிலும் வடக்கு

padippakam





**எகிப்து மன்னரின் ராணுவத்தில் சேர்ந்த நாஸர் ராணுவ அதிகாரிகளை ஒருங்கிணைத்து பின்னர் ஆட்சியைப் பிடித்தார்**

ஆப்பிரிக்க நாடுகளிலும் நாசர் மிகப்பெரிய ஹீரோவாக கருதப்பட்டார். மேற்கத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான இளைஞர்கள் நாசரை தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

லிபியாவிலும் நாசர் ஆதரவாளர்கள் ஏராளமாக இருந்தனர். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் லிபியாவில் இருந்த பல்வேறு தலைவர்கள் எகிப்தில் தஞ்சம் புகுந்தனர். லிபிய மன்னராக பொறுப்பேற்ற இத்ரிஸும் எகிப்தில் 21 ஆண்டுகள் தஞ்சம் புகுந்தவர்தான்.

லிபியா விடுதலைப் பெற்றவுடன் எகிப்தை சேர்ந்த நாசர் ஆதரவு கல்வியாளர்களும் புரட்சியாளர்களும் லிபியாவில் குடியேறினர். அவர்கள் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களி

படிப்பகம்

padippakam



லும் ஆசிரியர்களாக சேர்ந்தார்கள். மாணவர்களுக்கு அரபு தேசியவாதத்தை போதித்தார்கள். புரட்சிகரமான சிந்தனை களை விதைத்தார்கள்.

லிபியா விடுதலைப் பெற்ற அடுத்த ஆண்டே, எகிப்தில் நாசர் தலைமையிலான புரட்சிக்குழு மன்னராட்சியை தூக்கி எறிந்தது. அங்கு நாசர் தலைமையிலான அரசுப் பொறுப் பேற்றது. லிபியாவுக்குள் எகிப்து நாளிதழ்கள் தாராளமாக கிடைத்தன. அரபு தேசியவாதம் தொடர்பான புத்தகங்கள் இளைஞர்களிடம் வரவேற்பைப் பெற்றன.

எகிப்து வானொலி லிபியாவில் தெளிவாக கேட்கத் தொடங்கியது. மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கத்திய நாடுகளின் சுரண்டல்கள் அம்பலமாகின. அவற்றுக்கு எதிராக இளைஞர்களும் மாணவர்களும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். லிபியாவில் மாணவராக இருந்த கடாஃபி தலைமையில் அடிக்கடி எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெற்றன.

1956-ஆம் ஆண்டு சூயஸ் கால்வாயை எகிப்து அரசு தேசியமயமாக்கியது. அதைத் தொடர்ந்து அந்த கால்வாயில் பிரிட்டனுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் இருந்த உரிமை பறிபோனது.

அதற்கு முந்தை ஆண்டு சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்க ஆதரவு பெற்ற 15 நாடுகள் ஐ.நா. சபையில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டன. சூயஸ் கால்வயை நாசர் தேசியமயமாக்கிய உடன் லிபியாவில் தேசியவாதம் தீவிரமடைந்தது.

எகிப்துக்கு எதிராக போர் தொடுக்க பிரிட்டன் முடிவு செய்தது. ஆனால் லிபியாவில் அமைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் ராணுவ முகாம்களில் இருந்து எகிப்து மீது போர் தொடுக்க கூடாது என்று பிரிட்டனை லிபியா வற்புறுத்தியது. இதை முதலில் பிரிட்டன் ஏற்றுக் கொண்டது.

மறுநாள் பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்து மீது போர் தொடுத்தன. இது லிபியாவில் மிகப்பெரிய கிளர்ச்சிகளை உருவாக்கியது. மேற்கத்திய எதிர்ப்பு தீயாய் பரவியது. பிரிட்டன் மற்றும் அமெரிக்க ராணுவ முகாம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திரிபோலியில் அந்த

படிப்பகம்

padippakam





**எகிப்தில் முடியாட்சியை தூக்கியெறிந்த நாஸர் தனது ராணுவ நண்பர்களுடன் பொறுப்பேற்க வருகிறார்**

நாட்டு வங்கிக் கிளை ஒன்றில் குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் 10 லிபியர்கள் காயமடைந்தனர். அதைத் தொடர்ந்து திரிபோலி நகரில் இருந்து பிரிட்டிஷ் குடும்பங்கள் வெளியேறத் தொடங்கின.

நாசரை மாபெரும் தலைவராக அரபு மக்கள் கொண்டாடி வந்தனர். ஆனால் அவரை இன்னொரு ஹிட்லராகவும், முசோலினியாகவும் மேற்கத்திய நாடுகள் சித்தரிக்கத் தொடங்கின.

நாசருடைய ராணுவத்தை அழித்து அவருடைய அரசாங்கத்தை தூக்கி எறிவோம் என்று சர்ச்சில் ஆவேசமாக கூறினார். இதற்கு லிபியாவில் உள்ள பிரிட்டிஷ் ராணுவ முகாம்களில் இருந்து தாக்குதல் நடத்த வேண்டியது அவசியம் என்று அதிகாரிகள் கூறினார்கள். அதைத் தொடர்ந்து லிபியாவுக்கு பிரிட்டன் அளித்திருந்த உறுதிமொழி காற்றில் பறக்க விடப்பட்டது. லிபியாவின் செரனாய்கா பிரதேசத்திற்கும் எகிப்து எல்லைக்கும் இடையில் மிகப்பெரிய தாக்குதலுக்கு

படிப்பகம்

padippakam



பிரிட்டன் தயாரானது. லிபியர்கள் ஆவேசமடைந்தார்கள். லிபிய அரசாங்கத்திற்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெற்றன.

எகிப்துக்கு எதிரான யுத்தத்தில் லிபிய அரசின் ஆதரவுக்காக மேற்கத்திய நாடுகள் பல்வேறு தந்திரங்களை கையாள தொடங்கின. ஆனாலும் இந்த யுத்தம் தோல்வியடைந்தது.

இரண்டாம் உலகப்போர் முடிந்து விட்டாலும் லிபியாவின் முக்கியமான வர்த்தக நிறுவனங்கள் இத்தாலியர்களிடம் இருந்தது. அவர்களை அங்கிருந்த வெளியேற்ற வசதியாக புதிய சட்டம் ஒன்றை இயற்றும்படி பிரிட்டனும் அமெரிக்காவும் லிபிய அரசை வற்புறுத்தின. லிபியாவில் எண்ணெய் வளங்களை கண்டுபிடிக்க அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் லிபிய அரசாங்கம் அனுமதி அளித்தது.

இந்த நிலையில் தான் 1958-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் தேதி இராக் நாட்டில் ஏற்பட்ட திடீர் புரட்சி அங்கு மன்னர் ஆட்சியை தூக்கி எறிந்தது. உடனே அந்த நாட்டில் விவகாரத்திலும் பிரிட்டன் தலையிட்டது. தனது ராணுவத்தை சிரனாய்கா பிரதேசத்தில் கொண்டு வந்து இறக்கியது. தனது நடவடிக்கைக்கு பிரிட்டன் ஒரு காரணத்தை கூறியது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலைமை மோசமடைந்து வருவதாகவும் அதை சரிசெய்ய வேண்டிய கடமை தனக்கு இருப்பதாகவும் பிரிட்டன் தெரிவித்தது.

பிரிட்டனின் இந்த நடவடிக்கை காரணமாக இராக் நாட்டில் அமைந்த புதிய அரசாங்கத்திற்கு லிபியா அங்கீகாரம் அளிக்க மறுத்து விட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு எதிராக லிபியாவில் எதிர்ப்பு வலுத்தது. அதைத் தொடர்ந்து தனது நாட்டு மக்களை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் மன்னர் இத்ரிஸுக்கு ஏற்பட்டது. எனவே இராக்கில் அமைந்த புதிய அரசை லிபியா அங்கீகரித்தது.

பின்னர் எகிப்து அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பையும் அனுப்பினார் மன்னர் இத்ரிஸ்.

"அரபு தேசம் என்ற அமைப்பில் லிபியா தன்னை இணைத்து கொள்கிறது. மத்திய கிழக்கு நாடுகளில் வெளிநாட்டு தலையீடுகளை லிபிய அரசு தொடர்ந்து எதிர்க்கும்"

படிப்பகம்

padippakam





**தன்னை சந்தித்து குறைகளைத் தெரிவித்த ஊனமுற்ற இளைஞர் ஒருவரை பரிவுடன் விசாரித்து அவருக்கு வேலை வழங்கினார் நாஸர்**

லிபிய அரசாங்கம் மட்டுமின்றி அரேபிய நாடுகளில் இருந்த அரசாங்கங்கள் அனைத்துமே தங்களுடைய நாடுகளில் உருவான அரபு தேசியவாத உணர்வுகளுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அரேபிய மக்கள் மத்தியில் மேற்கத்திய எதிர்ப்பு உணர்வு அதிகரிப்பதற்கு எகிப்து நாட்டின் இணையில்லா தலைவரான நாசரின் வழிகாட்டுதல் முக்கியமான அம்சமாக இருந்தது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்த மாணவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவது வழக்கமாக இருந்தது.

படிப்பகம்

padippakam



உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் சமயத்தில் கடாஃபியை சுற்றி ஏராளமான இளைஞர்கள் எப்போதும் இருப்பார்கள். கடாஃபியின் உணர்ச்சிகரமான பேச்சு அவர்களை ஈர்த்தது. அவர் எங்கு சென்றாலும் ஒரு கூட்டம் கூடிவிடும். அவர்கள் மத்தியில் உடனே அரசியல் நிலைமைகளை விளக்கிப் பேசுவார்.

இதற்கு வசதியாக அவருடைய நண்பர்கள் கையில் ஒரு மர ஸ்டூலை எடுத்து செல்வார்கள். கடாஃபி பேச விரும்பினால் அந்த ஸ்டூல் மீது ஏறி நின்றுதான் பேசுவார்.

மாணவ பருவத்தில் கடாஃபி தனது நோட்டு புத்தகத்தில் மூன்று கேள்விகளை குறித்து வைத்து இருந்தார். அந்த கேள்விகளை தனது ஆசிரியர் மகமுது எஃபே என்பவரிடம் கேட்டார்.

1. ஒரு அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கு தேவைப்படும் முக்கோண அமைப்பு எது?

2. லிபியாவில் புரட்சி ஏற்பட வாய்ப்பிருக்கிறதா?

3. அப்படி ஒருவேளை லிபியாவில் புரட்சி ஏற்பட்டால் லிபிய மக்களுக்கு உதவ எகிப்து அரசாங்கம் முன் வருமா?

இந்த கேள்விகள் கடஃபியின் ஆசிரியரை கவர்ந்தன. கடாஃபி மீது அவர் அனுதாபம் கொண்டார்.

"உனது கேள்விகள் உன்னைப் போலவே நல்ல கேள்விகள். வெற்றிகரமான புரட்சியை நடத்த வேண்டும்மென்றால் அதற்கு ராணுவத்தின் ஆதரவு தேவை".

ஆசிரியரின் இந்த பதில் கடாஃபிக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

1961-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கடாஃபியின் வாழ்க்கையில் முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியது.

எகிப்து நாட்டுடன் இணைந்து செயல்படுவதாக சிரியா அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால் 1961-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அந்த ஒப்பந்தத்தை முறித்து கொண்டது. சிரியா அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து அக்டோபர் 5-ஆம் தேதி ஸெப்பா நகரின் மையப்பகுதியில் கடாஃபி மிகப் பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்.

படிப்பகம்

padippakam





எகிப்து கொடிகளையும் நாசரின் உருவப்படங்களையும் கையில் ஏந்தி லிபியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஸ்டூல் மீது நின்றுகொண்டு லிபியாவில் வெளிநாட்டு ராணுவம் முகாம்கள் நீடிப்பதை கண்டித்து ஆவேசமாக உரையாற்றினார்.

மக்களிடம் நிதி வசூல்செய்து நாசருக்கு ஆதராவக தந்திகளை அனுப்பினார். இதையடுத்து கடாஃபி உள்பட 20 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பள்ளியில் இருந்து வெளியேற்றப்படலாம் என்று அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால் அடுத்த சில நாட்களில் கடாஃபியும் அவருடைய நண்பர்களும் ஒரு ஹோட்டலுக்குள் புகுந்து ஜன்னல்களையும் பொருட்களையும் சேதப்படுத்தினார்கள். அங்கு இஸ்லாம் போதனைகளுக்கு மாறாக மது விநியோகிக்கப்பட்டது என்பதால் அவர்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன.

இதற்கு அடுத்த ஒரு மாதத்தில் கடாஃபியை பள்ளியில் இருந்து நீக்கும் உத்தரவு கல்வி அமைச்சரின் கையெழுத்துடன் பள்ளி நிர்வாகத்திற்கு வந்து சேர்ந்தது. இந்த நடவடிக்கை

படிப்பகம்

padippakam



கடாஃபியின் வாழ்க்கையை திசைதிருப்பியது.

"முகமது கடாஃபி பள்ளியில் இருந்து நீக்கப்படுவதுடன் நாட்டின் வேறு எந்த பள்ளியிலும் சேர முடியாது" என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. கடாஃபியுடன் முஸ்கட் என்ற நண்பனும் பள்ளியில் இருந்து நீக்கப்பட்டான்.

கடாஃபி மீது எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை அவருடைய தந்தைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

"தயவுசெய்து எனது மகனை வேறு ஒரு பள்ளியில் சேர்க்க அனுமதிக்கும்படி வேண்டுகிறேன்" என்று கடாஃபியின் தந்தை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தார். அவருடைய கோரிக்கை ஏற்கப்பட்டது. ஆனால் கடாஃபி இன்னொரு பள்ளியில் சேருவதற்கு மற்றொரு முட்டுக்கட்டை உருவானது.

ஆம். கடாஃபிக்கு அப்போது 19 வயது முடிந்து இருந்தது. எனவே உயர்நிலைப்பள்ளியில் சேருவதற்கான வயது வரம்பு கடந்து விட்டது. கடாஃபி மீது அனுதாபம் கொண்ட அரசு அதிகாரி ஒருவர் உதவி செய்ய முன் வந்தார். கடாஃபியின் பிறந்த தேதிக்கான சான்றிதழில் பிறந்த தேதியை மாற்றிக் கொடுத்தார். அந்த போலியான சான்றிதழைக் கொண்டு மிஸ்ரட்டா நகரில் உள்ள ஒரு பள்ளியில் சேர்ந்தார்.

அந்த பள்ளியிலும் அவருடைய அரசியல் போராட்டங்கள் தொடரத்தான் செய்தன.

படிப்பகம்

padippakam





ராணுவத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிரான நண்பர்களுடன் கடாஃபி

## ரத்தமின்றி ராணுவப் புரட்சி!

புதிய பள்ளியில் சேர்ந்துவிட்டான். ஆனால் அவனுடைய பழைய போராட்ட குணம் மாறவே இல்லை.

அந்த பள்ளியிலும் அவன் ஏராளமான நணர்பர்களை கவர்ந்தான். அவனை தலைவராக ஏற்றுக்கொள்ள மாணவர்கள் போட்டி போட்டு முன் வந்தனர். அவனுடைய பேச்சில் அனல் தெறிக்கும் ஆவேசம் கொப்பளிக்கும்.

அந்த பள்ளியல் பணிபுரிந்த ஜான்சன் என்ற ஆங்கிலமொழி ஆய்வாளரை கடாஃபி ஒருநாள் நேருக்குநேர் எதிர்த்துப் பேசினார்.

"நீங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்ட்தானே"

கொஞ்சம் கூட பயமில்லாமல் ஒரு ஆங்கிலேய ஆசிரியரை எதிர்த்துப் பேசிய கடாஃபியின் துணிச்சல் சக மாணவர்களை ஈர்த்தது.

படிப்பகம்

padippakam



மிஸ்ரட்டா நகரில் செயல்பட்டு வந்த புரட்சியாளரான ஓமர் மெஹேசி என்பவர் கடாஃபியின் துணிச்சலை கேள்விப்பட்டு அவனை சந்திக்க விரும்பினார். அதன் பிறகு மிஸ்ரட்டாவில் ஒரு புதிய புரட்சிகர குழுவானது.

அந்த குழு நாசரை மட்டுமே தலைவராக பின்பற்ற முடிவு செய்தது. அரபு தேசியவாதத்தை ஆதரிப்பது மட்டுமே குழுவின் ஒரே நோக்கமாக இருந்தது.

குழுவின் உறுப்பினர்கள் மது அருந்தக் கூடாது, சூதாட கூடாது, பெண்கள் பின்னாள் சுற்றக்கூடாது, தொழுகையும் படிப்பும் மட்டுமே குறிக்கோளாக இருக்க வேண்டும், அரசியல் கூட்டங்களில் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என்று விதிகள் வகுக்கப்பட்டன.

உயர்நிலைப்பள்ளியில் படிப்பை முடித்தவுடன் கடாஃபி தனது ஆசிரியரான மகமுது எஃபே கூறிய அறிவுரையை நினைத்துப் பார்த்தான். லிபியாவில் புரட்சி ஏற்பட வேண்டும் என்றால் ராணுவத்தின் ஆதரவு வேண்டும் என்று அவர் கூறியிருந்தார். அந்த அடிப்படையில் லிபிய ஆயுதப்படையில் சேர முடிவெடுத்தான்.

லிபியாவின் அரசியல் சிந்தனைகளில் எகிப்து குறிப்பிடத் தகுந்த விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. இரண்டாம் உலகப்போர் சமயத்திலும் லிபிய விடுதலைப் போராட்ட சமயத்திலும் எகிப்து முக்கியமான ஆதரவு மையமாக இருந்தது. லிபியா விடுதலைப் பெற்ற பிறகு அந்த நாட்டிலுள்ள பள்ளிகளில் எகிப்து ஆசிரியர்கள் ஏராளமானோர் பணியில் சேர்ந்தனர். லிபிய ஆசிரியர்களைவிட எகிப்து ஆசிரியர்கள் தான் அதிகமாக இருந்தனர். மாணவர்களுக்கு எழுச்சிகரமான சிந்தனைகளை விதைத்தார்கள்.

லிபியாவின் ராணுவத்தில் பொறுப்பேற்ற முதல் அதிகாரிகளுக்கு இராக் அரசும் எகிப்து அரசும்தான் பயிற்சி அளித்தன. பிரிட்டனும் இந்தப் பயிற்சிகளில் பங்களித்தது.

இராக் மற்றும் எகிப்து நாடுகளில் உருவான குடியரசு சிந்தனைகள் லிபியர்களை பெரிய அளவில் கவர்ந்தது.

கடாஃபி இத்தகைய சிந்தனைகளில்தான் தன்னை உருவாக்கி கொண்டான். ராணுவ பயிற்சி கலகத்தில்தான் சேர வேண்டும்

padippakam





**லிபியா முழுவதும் கடாஃபி அமைத்த ராணுவ நண்பர்களின் எண்ணிக்கை வெகு வேகமாக அதிகரித்தது.**

என்ற அவனுடைய முடிவுக்கு லிபியாவை ஆட்டிப்படைத்த வெளிநாட்டு சக்திகள்தான் காரணம்.

விடுதலைப் பெற்ற தொடக் காலத்தில் லிபியா ஏழ்மையின் பிடியில் சிக்கியிருந்து. ஆனால், அமெரிக்காவும் பிரிட்டனும் லிபியாவில் மேற்கொண்ட எண்ணெய் வள ஆராய்ச்சிகள் அந்த நாட்டை வேறு திசையில் திருப்பத் தொடங்கியது. அமெரிக்காவை சேர்ந்த எஸ்ஸா என்ற எண்ணெய் வள நிறுவனம் தனது முதல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியது. அதைத் தொடர்ந்து லிபியாவின் வளர்ச்சி படுவேகமாக இருந்தது.

ஆனால் எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைத்த வருவாய் லிபிய மக்களுக்கு சேராமல் மன்னர் இத்ரிஸ், அவருடைய உறவினர்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பயனளித்தது. இது லிபிய மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு உணர்வை உருவாக்கியது. அங்கு சமூக அளவில் புரட்சிகரமான சிந்தனைகள் பரவத் தொடங்கின.

லிபியாவின் பொருளாதாரம் வளரத் தொடங்கியது. அங்கு வெளிநாட்டினர் வந்து குடியேறத் தொடங்கினர். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் லிபியர்களைக் காட்டிலும் மேம்பட்டு இருந்தது. இது அப்பட்டமாக மக்களுக்குப் புரிந்தது.

படிப்பகம்

padippakam



தங்கள் நாட்டின் உற்பத்தியை வெளிநாடுகள் சுரண்டுவதை கண்கூடாகவே பார்த்தனர்.

இந்நிலையில் லிபிய மண்ணில் வெளிநாட்டு ராணுவ முகாம்கள் அதிகரித்து வந்தன. மன்னர் இத்ரிஸ் அமெரிக்க மற்றும் பிரிட்டனின் கைப்பாவையாக மாறி வந்தார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் அரபு நாடுகளில் சோசலிசம் வளர்வதை விரும்பவில்லை. எகிப்தும் இராக்கும் அவற்றின் கண்களை உறுத்திக்கொண்டே இருந்தன. அந்த நாடுகளின் அரசாங்கங்களை கவிழ்ப்பதில் கவனம் செலுத்தின. ஆனால் அரபு மக்கள் மத்தியில் மேற்கத்திய எதிர்ப்பு சிந்தனை மிகவும் ஆழமாக பதிந்து இருந்தது.

இந்த சிந்தனையை அரேபிய இளைஞர்கள் தூண்டிக் கொண்டே இருந்தனர்.

எகிப்து அதிபர் நாசர் அரபு கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினார். இந்த அமைப்பு அரபு நாடுகளின் எண்ணெய் வளங்களை மக்கள் நலனுக்கு பயன்படுத்துவதில் அக்கறை செலுத்தியது. இந்த நடவடிக்கைகள் மேற்கத்திய நாடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறிக் கொண்டிருந்தது. அவை அரபு மக்களின் நலன்களை கருத்தில் கொள்ளவில்லை. அரபு நாடுகளில் பொம்மை அரசாங்கங்களை உருவாக்கி அவற்றை தங்கள் விருப்பப்படி ஆட்டுவிக்கவே விரும்பின.

மேற்கத்திய நாடுகளின் இந்த சதிகளில் ஒரு பகுதியாக 1961-ஆம் ஆண்டு எகிப்தின் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மத்திய கிழக்கு நாடுகளின் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. லிபியாவில் தொழிற் சங்கங்களும் மாணவர் அமைப்புகளும் மிகப்பெரிய கிளர்ச்சி யில் ஈடுபட்டன. தலைநகர் திரிபோலியிலும் மற்ற நகரங்களிலும் வெளிநாட்டினருக்கு சொந்தமான சொத்துகளை மக்கள் சூறையாடினார்கள். யூதர்களின் சொத்துகள் அழிக்கப்பட்டன. ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

லிபியாவில் நிறுவப்பட்ட அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ராணுவத் தளங்களுக்கு எதிராக மக்கள் கோபம் திரும்பியது. எண்ணெய் நிறுவனங்களில் வேலைபார்த்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் அறிவித்தன. எண்ணெய் உற்பத்தி

படிப்பகம்

padippakam





லெப்டினன்ட் கர்னலாக கடாஃபி

ஸ்தம்பித்தது. லிபியாவில் புரட்சி வெடிக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு வலுத்தது. அந்த நாட்டில் குடியேறிய வெளிநாட்டு குடும்பங்கள் அவசர அவசரமாக வெளியேறத் தொடங்கின.

போராட்டம் தீவிரமடைந்த நிலையில் தொழிற் சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புகளை சேர்ந்த முன்னனி தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். மன்னர் ஆட்சிக்கு எதிரான போராட்டக் குழுவினர் ஒடுக்கப்பட்டனர்.

இந்த ஒடுக்குமுறை தான் லிபியாவில் ராணுவ புரட்சிக்கு வித்திட்டது. தனது மக்களின் உணர்வுகளை மன்னர் இத்ரிஸ் புரிந்து கொள்ளவில்லை. மேற்கத்திய நாடுகளின் அரவணைப் பில் ஆட்சி நடத்த அவர் விரும்பினார். நிதியுதவி என்ற பெயரில் அமெரிக்காவும் பிரிட்டனும் லிபியாவை தங்களுடைய அடிமையாக மாற்றிவிட்டன.

படிப்பகம்

padippakam



இந்த நிலையில் தான் 1963-ஆம் ஆண்டு பெங்காஸி நகரில் உள்ள ராயல் ராணுவ பயிற்சிக் கழகத்தில் கடாஃபி சேர்ந்தார்.

கடாஃபியின் அரசியல் நிலைப்பாடுகள் ராணுவ அதிகாரிகளுக்கும் போலீஸ் துறையினருக்கும் நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் கடாஃபியை ராணுவ பயிற்சிக் கழகத்தில் எப்படி சேர்த்தார்கள் என்பது புரியாத புதிராகவே கருதப் பட்டது. ஆனால் அதில் புதிர் ஒன்றுமில்லை. ஏனென்றால் போலீஸ் துறையிலும் ராணுவத்திலும் அரபு தேசியவாத உணர்வுமிக்கவர்கள் ஏராளமாக இருந்தனர். அவர்களுக்கு கடாஃபி போன்ற இளைஞர்கள்தான் தேவை.

ராணுவ பயிற்சி கழகத்தில் கடாஃபி மட்டுமின்றி அவருக்கு நெருக்கமான நண்பர்கள் பலரும் சேர்ந்தனர். அங்கு பயிற்சி அளித்த அதிகாரிகள் அனைவரும் ஆங்கிலேயர்கள்.

அவர்கள் லிபிய ராணுவதிற்கு பயிற்சி அளிப்பதற்காக மட்டும் வரவில்லை. மாறாக ராணுவத்தில் என்ன நடக்கிறது என்பதை கண்காணிக்கவும் வந்திருந்தார்கள்.

ஆங்கிலேயர் அதிகாரி ஒருவர் கடாஃபியை எந்த நேரமும் கண்காணித்துக் கொண்டு இருந்தார். கடாஃபியின் நடவடிக்கைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. எந்நேரமும் அவரை மட்டம் தட்டிக்கொண்டே இருந்தார். சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் கடாஃபியை தண்டிப்பார். ஆனாலும் கடாஃபி எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு தனது நோக்கத்தில் முன்னோக்கி சென்று கொண்டிருந்தார்.

ராணுவ பயிற்சி கழகத்தில் பயிற்சி பெற்று கொண்டிருந்த ஏழை நடுத்தர இளைஞர்களை அவர் ஒருங்கிணைத்தார். அரபு தேசியவாத சிந்தனை கொண்ட இளைஞர்களை இணைத்து ஒரு ரகசிய அமைப்பை உருவாக்கினார். அந்த அமைப்புக்கு சுதந்திர அதிகாரிகள் இயக்கம் என்று பெயர் வைத்தார்.


எகிப்து அதிபரான நாசர் மன்னர் ஆட்சிக்கு எதிராக உருவாகிய அமைப்புக்கும் இதே பெயர்தான் சூட்டியிருந்தார்.

லிபியாவில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அங்கு தனிநபர் வருமானம் அதிகரித்தது. ஆனால் வருவாய் அனைத்தும் ஒரு சிலரின் பைகளில் நிரம்பியது. பெரும்பகுதி யான மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியிருந்தனர். அரசாங்க

படிப்பகம்

padippakam





**மன்னருக்கு எதிரான புரட்சியை வெற்றிகரமாக நடத்திய கடாஃபி தனது நெருங்கிய நண்பர்களுடன்**

மட்டத்தில் ஊழல்கள் மலிந்தன. மன்னர் இத்ரிஸின் கட்டுப் பாட்டின் அராசங்கம் இல்லை. அதேசமயம் வெளிநாட்டு சக்திகளின் கட்டுப்பாட்டில் அவர் இருந்தார்.

அரசு அதிகாரிகள் அனைவரும் மேற்கத்திய முதலாளிகள் சொல்வது அனைத்தையும் வேதவாக்காக கருதிச் செயல்பட்டனர்.

மன்னர் இத்ரிஸுக்கு ஆண் வாரிசு இல்லை. தனக்கு அடுத்தபடி யாரை வாரிசாக நியமிப்பது என்பதில் அவர் குழம்பிப் போயிருந்தார். ஆண் வாரிசு வேண்டும் என்பதற்காக அவர் ஐந்து திருமணங்களை செய்து கொண்டார். ஆனாலும் ஆண் வாரிசு இல்லை. மன்னரின் உறவினர்கள் எல்லோருமே அரசாங்கத்தை கைப்பற்றும் விருப்பத்தில் இருந்தனர்.

மக்களை பற்றி யாருமே கவலைப்படவில்லை. மக்களிடம் இருந்து மன்னர் வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டார். தங்கள் எதிர்காலம் குறித்து லிபிய இளைஞர்கள் கவலை கொண்டனர்.

அவர்களுடைய கவலைகளை கடாஃபி நன்கு அறிந்திருந்தார்.

படிப்பகம்

padippakam





**1960-களில் மன்னர் இத்ரிஸ்**

மன்னர் ஆட்சியை தூக்கியெறிய விரும்பும் இளைஞர்களை அவர் தேடிக் கண்டுபிடித்தார்.

1966-ஆம் ஆண்டு ராணுவ பயிற்சி கழகத்தில் பயிற்சியை முடித்த கடாஃபி பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டார். சாந்தர்ஸ்ட் நகரிலுள்ள ராணுவ அதிகாரிகளுக்கான கல்லூரியில் சிறப்பு பயிற்சி பெற்றார். அங்கு பயிற்சி முடிந்தவுடன் நேரடியாக லெஃப்டிணன்ட் அந்தஸ்துக்கு உயர்ந்தார்.

லிபியா திரும்பிய அவர் பெங்காஸி நகருக்கு வெளியில் பொறுப்பேற்றார்.

அதேசமயம் கடாஃபியும் அவருடைய புரட்சிகர நண்பர்களும் ராணுவத்திற்குள் மேலும் மேலும் ஆதரவாளர்களை சேர்த்துக் கொண்டியிருந்தனர்.

"மன்னருக்கும் மக்களுக்கும் தொடர்பு இல்லாத நிலை

படிப்பகம்

padippakam





ராணுவ அதிகாரியாக கடாஃபி

உருவாகிக் கொண்டு இருக்கிறது. எண்ணெய் உற்பத்தி வழியாக ஏராளமான பணம் லிபியாவுக்குள் கொட்டிக் கொண்டு இருக்கிறது. சிலர் மட்டும் பணத்தைக் குவிக்கிறார்கள். பெரும் பகுதி மக்கள் வறுமையில் தவிக்கிறார்கள். மன்னரின் ஊழல் நிர்வாகம் தான் தங்கள் வறுமைக்கு காரணம் என்று மக்கள் புரிந்துள்ளனர். அரசாங்க அதிகாரிகள் செல்வச் செழிப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள். சாதாரன லிபிய குடிமகன் வாழவே போராட வேண்டியுள்ளது."

இதுதான் புரட்சி நடத்த சரியான நேரம் என்று கடாஃபி யின் குழு முடிவு செய்தது.

1969-ஆம் ஆண்டு லிபியாவின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்த புரட்சிகர குழுக்கள் மாற்றத்திற்கு தயாராகி வந்தனர். ராணுவப் புரட்சி ஏற்படப் போகிறது என்ற தகவல் வதந்தியாக மக்கள் மத்தியில் பரவியது. ஆனால் இந்த வதந்தி பெரிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தவில்லை. ராணுவ புரட்சி நடந்தால் அதை ஆதரிக்கும் மனநிலைக்கு மக்கள் தயாராகி விட்டார்கள்.

படிப்பகம்

padippakam



இந்நிலையில் தான் 1969-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மன்னர் இத்ரிஸ் மருத்துவ சிகிச்சைக்காக கிரீஸ் நாட்டுக்கு சென்றார். அவர் இல்லாத சமயத்தில் ஆட்சிப் பொறுப்பை கவனிக்க தனது சகோதரரின் மகன் ஹஸன் அர் - ரிடாவை மன்னர் இத்ரிஸ் நியமித்தார்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்ற கடாஃபி திட்டமிட்டார்.

1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி கடாஃபியின் ஆதரவாளர்கள் தலைநகர் திரிபோலிக்கு வெளியே பயிற்சியில் ஈடுபட அனுமதி கேட்டனர். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி நகருக்கு அருகே பீரங்கிகளை நிறுத்தும் வாய்ப்பு கிடைத்தது.

மன்னர் ஊரில் இல்லாத சமயத்தில் கடாஃபியும் அவருடன் 70 வீரர்களும் கிட்டத்தட்ட எதிர்ப்பே இல்லாமல் அரண்மனைக்குள் நுழைந்தனர்.

அரண்மனையைக் கைப்பற்றிய உடன் கடாஃபியின் ஆதரவாளர்கள் போலீஸ் நிலையங்களையும் விமான நிலையங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தலைநகர் திரிபோலியிலும் பெங்காஸியிலும் ஆதரவாளர் களுக்கு எதிர்ப்பே இல்லை.

நாட்டின் எதிர்காலத்திற்கு எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைக்கும் வருவாய்தான் மிகவும் முக்கியம் என்பதை கடாஃபி புரிந்து வைத்து இருந்தார். ஆனால் எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் வெளிநாட்டினருக்கு சொந்தமானவையாக இருந்தனர். எண்ணெய் உற்பத்தி தொடர்பான அனைத்தும் தனது ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதில் கடாஃபி உறுதியாக இருந்தார்.


அரண்மனையையும் முக்கியமான மையங்களையும் புரட்சிக் குழுக்கள் கைப்பற்றி விட்டன. அடுத்தபடியாக புரட்சி நடந்திருக்கும் விசயத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

மிகவும் முக்கியமான இந்த காரியத்திற்கு செய்தித் தாள்களை பயன்படுத்தலாம் ஆனால் லிபியாவில் 80 சதவீதம் மக்கள்

படிப்பகம்

padippakam





புரட்சி வெற்றிபெற்ற பிறகு மக்களிடம் பேசுகிறார் கடாஃபி

படிப்பறிவு இல்லாதவாகள். எனவே வானொலி மூலம் தகவலை தெரிவிப்பதுதான் சரியாக இருக்கும்.

கடாஃபியின் ஆதரவாளர்கள் ரேடியோ நிலையம் இருந்த பெங்காஸி நகருக்கு அணிவகுத்தார்கள். ரேடியோ நிலையத்தில் பணிபுரிந்த யாரும் தங்கள் உயிரை இழக்க விரும்பவில்லை.

1969-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி அதிகாலை 6 மணி.

ராணுவப் புரட்சி தொடங்கி 4 மணி நேரம் கழித்து லிபிய மக்களுக்கு வானொலி மூலம் கடாஃபி ஒரு செய்தியை அனுப்பினார்.

“உங்களுடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, உங்கள் இதயம் விரும்பிய மாற்றத்தை கொண்டு வருவதற்காக, நம்மை இதுவரை துன்புறுத்தி வந்த ஊழல் மலிந்த அரசாங்கத்தை உங்கள் ராணுவம் அகற்றிவிட்டது. இன்று முதல் லிபியா சுதந்திரம் அடைந்து விட்டது. இனி ஒடுக்குமுறை இருக்காது. அநீதி ஒழிக்கப்பட்டு விட்டது. இனி யாரும் மன்னரும் இல்லை, அடிமையும் இல்லை சகோதரத்துவமும்

படிப்பகம்

padippakam



சமத்துவமும் மேலோங்கும் நமது பெருமையை நாமே கட்டுவோம். நமது பாரம்பரியத்தையும் கண்ணியத்தையும் புதுப்பிப்போம். பெதோய்ன் இனத்தை சேர்ந்த குழந்தைகளும், பாலைவன குழந்தைகளும் பழமையான நகரங்களில் வாழும் குழந்தைகளும் கிராமங்களில் வாழும் குழந்தைகளும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நமது வேலையைத் தொடங்குவதற்கு இதுதான் சரியான நேரம். வாருங்கள் எல்லோரும் முன்னோக்கி பயணிப்போம்"

கடாஃபியின் இந்த வானொலி செய்தியை கேட்டவுடன் லிபிய மக்கள் வீதிகளில் உற்சாகமாக கொண்டாடத் துவங்கினர். ராணுவத்துடன் இணைந்து அவர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். உயிர் சேதம் இல்லாமல், ரத்தம் சிந்தாமல் ஒரு ஆட்சி தூக்கி வீசப்பட்டது. மக்களுக்கான ஒரு புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

உலகின் கவனத்தை லிபியாவின் மீது திரும்ப செய்த கடாஃபிக்கு, அப்போது வயது 27.

1799-ஆம் ஆண்டு நெப்போலியன் பதவி ஏற்றபோது அவருக்கு வயது 30.

1917-ஆம் ஆண்டு சோவியத் நாட்டின் அதிபராக பெறுப்பேற்றபோது மாமேதை லெனினுக்கு வயது 47.

1949-ஆம் ஆண்டு சீனாவின் தலைவராக மா-சே-துங் பெறுப்பேற்றபோது அவருக்கு வயது 56.

1952-ஆம் ஆண்டு எகிப்து அதிபராக நாசர் பெறுப்பேற்றபோது அவருக்கு வயது 34.

1959-ஆம் ஆண்டு கியூபாவின் அதிபராக பெறுப்பேற்றபோது காஸ்ட்ரோவின் வயது 33.

மொத்தத்தில் உலகில் மிகவும் குறைந்த வயதில் மிகவும் எளிதாக மக்கள் புரட்சியில் ஆட்சி பெறுப்புக்கு வந்தவர் கடாஃபி.

படிப்பகம்

padippakam





லிபியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு கடாஃபி மக்களைச் சந்தித்தார்

# புதிய அடையாளம்

**லி**பியாவில் முடியாட்சி ஒழிந்து விட்டது.

ராணுவப் புரட்சி முடிந்து விட்டது.

ஏழை, நடுத்தர, கிராமப்புற பின்னணி கொண்ட ராணுவ அதிகாரிகளும் கேப்டன்களும் அடங்கிய குழுக்கள் மக்கள் விருப்பத்தை நிறைவேற்றி விட்டனர். இந்த குழுக்களில் இடம்பெற்ற யாருமே முந்தைய அரசாங்கத்துடன் எந்த வகையிலும் தொடர்பு இல்லாதவர்கள்.

புரட்சி வெற்றி பெற்ற உடன் சில நாட்களில் ஆட்சி பொறுப்பில் இருந்த இளவரசர் ஹஸன் தனக்கு ஆட்சி பொறுப்பு தேவையில்லை என்று அறிவித்து விட்டார்.

கிரீஸ் நாட்டில் தங்கியிருந்த மன்னர் இத்ரிஸ் வெளிநாட்டு உதவியை கோரப் போவதில்லை என்று பிரகடனம் செய்தார். தனது மன்னர் பதவியை மீட்டுத் தரும்படி பிரிட்டனிடம் உதவி கோரியிருப்பதாக செய்திகள் வெளிவந்ததை அவர் மறுத்தார்.

படிப்பகம்

padippakam



ராணுவப் புரட்சி நடத்திய தலைவர்கள் மன்னர் இத்ரிஸுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர்.

அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தனர். ஆனால் மன்னர் இத்ரிஸ் லிபியாவுக்கு திரும்ப விரும்பவில்லை. எகிப்தில் வசிக்கவே விரும்பினார்.

லிபியா முழுவதும் புரட்சி குழுக்களின் கட்டுப்பாட்டில் வந்தது. புரட்சி குழுக்களை சேர்ந்த அதிகாரிகள் புரட்சிகர நிர்வாக குழு ஒன்றை உருவாக்கினார்கள். 12 உறுப்பினர் கொண்ட இந்த குழு நாட்டின் தலைவருக்கு ஆலோசனைகளை வழங்கும்.

1969-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் தேதி லிபியாவின் தலைவராக கடாஃபி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாட்டை கைப்பற்றி விட்டாலும் ஆட்சி நடத்துவதில் குழுவினருக்கு போதுமான அனுபவம் இல்லை. கடாஃபி மெருகேற்றப்பட்ட அரசியல்வாதி அல்ல. ஆனால் மனதில் பட்டதை எந்தவித அச்சமும் இல்லாமல் பளிச்சென்று பேசக் கூடியவர். எதிரிகளையும் நண்பர்களையும் அனுசரித்து போக வேண்டும் என்கிற சிந்தனை இல்லாதவர். யாரும் சொல்ல தயங்குகிற விசயங்களை கூட அச்சமின்றி கூறியவர்.

ஆட்சியைக் கைப்பற்றிய உடன் லிபியாவின் அமைச்சரகங்களை வழிநடத்திய உயர் அதிகாரிகளை கடாஃபி நீக்கி உத்தவிட்டார். ஒரே ஆண்டில் எல்லா அமைச்சரகங்களும் புரட்சிகர குழு உறுப்பினர்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

ஆனால் எண்ணெய் வள அமைச்சரகம் மட்டும் விட்டு வைக்கப்பட்டது. அந்த அமைச்சரகத்தை இயக்குவதற்கு குழு உறுப்பினர்களுக்கு போதுமான அனுபவம் இல்லை.

இப்போது புதிய அரசாங்க அமைப்பை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் கடாஃபிக்கு ஏற்பட்டது.

குடிமக்கள் அனைவருக்கும் பொருளாதார சமத்துவம் வழங்கும் சோசலிச அடிப்படையிலான அரசாங்க அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

படிப்பகம்

padippakam





உற்பத்தியையும் விநியோகத்தையும் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. எனவே ஏழை, பணக்காரர் வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

தனக்கு பொருத்தமான வேலையை எல்லோரும் செய்ய வேண்டும். அதற்கு பதிலாக தங்களுடைய வாழ்க்கை தேவை களை எல்லோரும் பெற வேண்டும்.

தொழிற்சாலைகள் அனைத்தும் நாட்டுடமை ஆக்கப்பட் டன. தனியாருக்கு சொந்தமான நிறுவனங்களையும் அரசாங்கம் கைப்பற்றியது. முதலாளித்துவ அமைப்பில் தொழிற்சாலைகள் தனியாருக்கு சொந்தமாக இருக்கும். உற்பத்தி பொருள்களை விற்று முதலாளி ஏராளமான பணம் சம்பாதிப்பார். வேலை செய்யும் தொழிலாளி மிகக்குறைந்த ஊதியம் பெறுவார்.

அத்தகைய ஏற்ற தாழ்வு லிபியாவில் இருக்காது. என்று கடாஃபி அறிவித்தார். தனது அரசு மக்களுக்கான அரசு என்று அவர் பிரகடனம் செய்தார். கடாஃபியை தங்களில் ஒருவராக மக்கள் கருதத் தொடங்கினர்.

படிப்பகம்

padippakam



ஆனால் இதற்காக கடாஃபியும் அவரது குழுவினரும் மிகுந்த சிரமங்களை சந்திக்க வேண்டி இருந்தது.

கடாஃபி தலைமையிலான அரசுக்கு எகிப்தும் இராக்கும் முதன் முதலில் அங்கீகாரம் அளித்தன.

1969-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எகிப்து அதிபர் நாசர், சூடான் அதிபர் நுமெய்ரி ஆகியோரை லிபியா வரும்படி கடாஃபி அழைப்பு விடுத்தார். எகிப்து, சூடான், லிபியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து செயல்படுவது என்று ஒப்பந்தம் ஏற்பட்டது. 1969-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

அன்றைய நிலையில் எகிப்தும் சூடானும் சோவியத் யூனியனின் ஆதரவுப் பெற்ற நாடுகளாக இருந்தன. இது லிபியாவுக்கு முதல் கட்டப் பாதுகாப்பை அளித்தது.

இந்த பாதுகாப்பு வழங்கிய தைரியத்தில் லிபியாவில் இயங்கி வந்த மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாகத்தில் கடாஃபி தலையிட்டார். கச்சா எண்ணெயின் விலையை உயர்த்த வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்கும்படி உத்தரவிட்டார்.

அமெரிக்காவை சேர்ந்த எஸ்ஸோ உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்கள் கடாஃபியின் உத்தரவை ஏற்க மறுத்தன. அதைத் தொடர்ந்து எண்ணெய் நிறுவனங்களின் தலைவர்கள் மத்தியில் கடாஃபி பேசினார்.

"ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக லிபிய மக்கள் பெட்ரோலிய வருமானம் இல்லாமல்தான் வாழ்ந்தனர். இப்போதும் தேவைப்பட்டால் அந்த வாழ்க்கையை வாழ லிபிய மக்கள் தயாராக இருக்கிறார்கள்"

கடாஃபியின் இந்த பேச்சு எண்ணெய் நிறுவன முதலாளிகளை அதிர வைத்தது. சமரச பேச்சுவார்த்தை நீடித்தது. ஆனாலும் தோல்வியடைந்து. எனவே கடாஃபிக்கு அடுத்த நிலையில் செயல்பட்ட புரட்சி குழுவின் தலைவர் ஜல்லுத் அதிரடி நடவடிக்கையில் இறங்கினார். லிபியாவி லிருந்து அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் ராணுவத் தளங்களை காலி செய்தவர் இவர்தான்.

padippakam





லிபியாவில் புரட்சி ஏற்பட்ட பிறகு அங்கு வந்த எகிப்து ஜனாதிபதி நாஸர் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார். லிபிய வரலாற்றில் பெண் ஒருவர் பொது மேடையில் நாட்டின் தலைவருடன் கைகுலுக்குகிறார்

அமெரிக்க கோடீஸ்வரரான ராக்பெல்லருக்கு சொந்தமானது எஸ்ஸோ எண்ணெய் நிறுவனம். அந்த நிறுவனம் உள்பட பல்வேறு பெரிய நிறுவனங்களின் உற்பத்தியை குறைக்கும்படி லிபிய அரசு உத்தரவிட்டது.

இந்நிலையில்தான் 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் எகிப்து அதிபர் நாசர் லிபியாவின் பெங்காஸி நகருக்கு வந்தார். அப்போது அவர் மக்கள் மத்தியில் கடாஃபியை தனது வாரிசாக அறிவித்தார்.

"அரேபிய தேசிவாதத்தின் பிரதிநிதியாகவும் அரேபிய ஒற்றுமை மற்றும் அரேபிய புரட்சிக்கு எனது சகோதரர் முகமது கடாஃபியை பிரதிநிதியாக அறிவிக்கிறேன். எனக்கு பிறகும் அவர் பரந்த அரேபியாவை உருவாக்கும் முயற்சியில் எனது வாரிசாக செயல்படுவார்"

நாசர் இவ்வாறு அறிவித்தது கடாஃபியின் தலைமையை அரேபிய மக்கள் மத்தியில் உறுதிப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து சூயஸ் கால்வாயை நாசர் நாட்டுடமை

படிப்பகம்

padippakam



ஆக்கியதை போல லிபியாவில் உள்ள வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்கள் முழுவதையும் கடாஃபி அரசு நாட்டுடைமை ஆக்கப்போவதாக ஒரு தகவல் பரவியது. உடனே எண்ணெய் நிறுவனங்கள் இறங்கி வந்தன. நாசரின் லிபிய பயணம் கடாஃபி அரசுக்கு ஒரு தார்மீக பலத்தை கொடுத்தது.

லிபிய அரசுக்கு எண்ணெய் உற்பத்தி மூலம் வருமானம் பலமடங்கு அதிகரித்தது. கடாஃபியின் அரசு மக்கள் நலத்திட்டங்களை அறிவிப்பதற்கு இந்த வருமானம் பெரும் உதவியாக இருந்தது.

லிபியாவில் இருந்து நாசர் எகிப்து திரும்பியவுடன், ஜோர்டான் மன்னர் ஹுசேன் அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஜோர்டானில் தங்கி பாலஸ்தீன விடுதலைக்காக போராடி வந்த குழுக்கள் தனது அரசுக்கு சர்வதேச நெருக்கடியை உருவாக்குவதாக அவர் கவலை தெரிவித்து இருந்தார்.

1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ஆம் தேதி ஜோர்டான் மீது பறந்த நான்கு சர்வதேச விமானங்களை பாலஸ்தீன போராளிகள் சுட்டு வீழ்த்திவிட்டதாக மன்னர் ஹுசேன் குற்றம் சாட்டினார். அதைத்தொடர்ந்து ஜோர்டான் நாட்டிலிருந்து பாலஸ்தீன போராளிக் குழுக்களை வெளியேறும்படி உத்தரவிட்டார். மறுத்த குழுக்களை ராணுவத்தின் உதவியோடு வெளியேற்றினார். இதில் ஏற்பட்ட மோதலில் ஏராளமான பாலஸ்தீன போராளிகளும் மக்களும் மரணம் அடைந்தனர்.

இது வரலாற்றில் கருப்பு செப்டம்பர் என்று பதிவு பெற்றது. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து இந்த விசயத்தில் நாசர் தலையிட வேண்டும் என்று மன்னர் ஹுசேன் வற்புறுத்தினார்.

அதைத்தொடர்ந்து அரபு நாடுகளின் மாநாட்டை நாசர் கூட்டினார். செப்டம்பர் 27-ஆம் தேதி நடைபெற்ற அந்த மாநாட்டில் ஜோர்டான் மன்னர் ஹுசேனும் பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத்தும் பகை உணர்வை கைவிட வேண்டும் என்று நாசர் கேட்டுக் கொண்டார். மாநாட்டின் முடிவில் இரு தலைவர்களும் அமைதி உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டனர்.

அடுத்தநாள் செப்டம்பர் 28-ஆம் தேதி மாநாடு நிறைவடைந்தது. ஆனால் நாசருக்கு திடீரென மாரடைப்பு

படிப்பகம்

padippakam





**1967 ஆம் ஆண்டு இஸ்ரேல் நடத்திய போரின்போது, எகிப்தில் மாபெரும் மக்கள் கூட்டத்தின் முன் ஆவேசமாக உரையாற்றுகிறார் நாஸர்**

ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவர் மரணம் அடைந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

அரபு மக்களின் மிகப்பெரிய நம்பிக்கையாக திகழ்ந்த நாசரின் திடீர் மரணம் மத்திய கிழக்கு நாடுகளில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எகிப்து வீதிகளில் வயது வித்தியாசம் இல்லாமல் மக்கள் கதறி அழுதனர். நாசரின் இறுதி ஊர்வலத்தில் 50 லட்சம் பேர் பங்கேற்றனர். அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கமால் அப்துல் நாசர் மசூதி கட்டப்பட்டது.

அதே பெயரில் திரிபோலி நகரிலும் ஒரு மசூதி உருவாக்கப்பட்டது. ஆனால் அது புதிதாக கட்டப்படவில்லை. ஏற்கெனவே கிறிஸ்தவ தேவாலயமாக இருந்த கட்டடத்தை கடாஃபி அரசு மசூதியாக மாற்றியது.

படிப்பகம்

padippakam



நாசரின் மரணம் கடாஃபியின் பயணத்தில் சிறு தடங்கலை ஏற்படுத்தியது. நாசரின் ஆதரவு பெற்றவர் என்ற தகுதி புரட்சி குழுவினர் மத்தியில் கடாஃபிக்கு தனி மரியாதையை அளித்திருந்தது. இப்போது குழுவினர் மத்தியில் கடாஃபிக்கு எதிர்ப்பு உருவாகத் தொடங்கியது. ஆனால் அந்த எதிர்ப்பு வலுப்பெறவில்லை.

புரட்சி வெற்றிப் பெற்ற தொடக்க மாதங்களில் தேசியவாதம், இஸ்லாம், அரபு சோசலிசம் உள்ளிட்ட முழக்கங்களை தவிர்த்து தெளிவான திட்டம் எதுவும் கடாஃபி அரசிடம் இல்லை. இருந்தாலும் இந்தக் குறைபாடு மேற்கத்திய எதிர்ப்பு உணர்வு என்ற முகமூடியால் மறைக்கப்பட்டது. முதல் ஒரு வருடம் ஊழல் நிர்வாகத்தை சீரமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன. முந்தைய அரசாங்கத்தின் அதிகாரிகள் அனைவரும் மாற்றப்பட்டனர். புரட்சி குழுவிடம் ஆட்சி அதிகாரம் முழுமையாக வந்துசேர ஒரு ஆண்டு ஆகிவிட்டது.

1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி புரட்சி குழு புதிய கட்சியை தொடங்கியது. அரபு சோசலிஸ்ட் யூனியன் என்று கட்சிக்கு பெயரிடப்பட்டது. மக்கள் மத்தியில் புரட்சிகர உணர்ச்சிகளை உருவாக்குவதற்கு கட்சி முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கட்சியும் எகிப்தில் நாசர் உருவாக்கிய கட்சியின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டது. அதேசமயம் லிபியாவில் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பே இல்லை என்று கடாஃபி திட்டவட்டமாக அறிவித்தார். மக்கள் புரட்சிக்கு எதிராக பேசுகிறவர்கள் மக்களுக்கு எதிரானவர்கள் என்று கடாஃபி பிரகடனம் செய்தார்.

கிட்டத்தட்ட ஒரு ஆண்டுகாலம் கடாஃபி தனது வாதத்தை நியாப்படுத்த முயற்சி செய்தார். கடைசியில் வெற்றிப் பெற்றார். கட்சியில் அவருடைய ஆளுமை அதிகரித்தது.

1972-ஆம் ஆண்டு சிரியா தலைநகர் லெபனானில் நூற்றுக்கணக்கான லிபிய இளைஞர்கள் கொரில்லா பயிற்சி பெற்றனர். அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிராக முஸ்லிம்கள் போராட வேண்டும் என்று கடாஃபி பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தார்.

படிப்பகம்

padippakam





**சோவியத் யூனியனின் ஜனாதிபதி பிரெஸ்நேவை கடாஃபி சந்தித்தார்**

அமெரிக்காவில் கருப்பு இனப்புரட்சிக் குழுக்களுக்கும் அயர்லாந்தில் ஐஆர்ஏ போராளிக் குழுக்களுக்கும் கடாஃபி ஆதரவு அளித்தார். பாலஸ்தீனத்தை விடுவிக்கவும் பிலிப்பைன் ஸில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு விடுதலைப் பெற்று தரவும் அரேபியர்கள் போராட வேண்டும் என்று கடாஃபி வற்புறுத்தினார். தனது இந்த கொள்கைக்கு மூன்றாவது பிரபஞ்ச கோட்பாடு என்று கடாஃபி பெயரிட்டார். கடாஃபியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்கா மற்றும் பிரிட்டிஸ் தூதர்கள் வெளியேறினார்கள்.

1972-ஆம் ஆண்டு ஜூலை மாதம் லிபியாவில் முதல் கொரில்லா பயிற்சி முகாம் தொடங்கப்பட்டது. மிஸ்ரட்டா நகரில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராகப் போராடுவதற்காக பயிற்சி பெற்றனர்.

1972-ஆம் ஆண்டு மியூனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வந்த இஸ்ரேலிய தடகள வீரர்கள்

படிப்பகம்

padippakam



கொல்லப்பட்டனர். 1973-ஆம் ஆண்டு சூடான் நாட்டின் அமெரிக்க தூதர் கொல்லப்பட்டார். இந்த இரண்டு சம்பவங்களிலும் பிதாயின் என்ற லிபிய கொரில்லா அமைப்பினரின் பங்கு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

அதன்பிறகு லிபியாவின் பல்வேறு இஸ்லாமிய தீவிரவாத குழுக்கள் பயிற்சி பெறத் தொடங்கினர். பாலஸ்தீன விடுதலை போராளிகள் இஸ்ரேலுக்கு எதிரானப் போராட்டத்திற்காக லிபியாவில் பயிற்சி பெற்றனர்.

அயர்லாந்து விடுதலைப் போராட்டத்திற்கு லிபியா ஏராளமான ஆயுதங்களை அனுப்பியது. ஒருமுறை அப்படி அனுப்பப்பட்ட ஆயுதங்களை ஏற்றிச் சென்ற கப்பல் இடைமறிக்கப்பட்டது.

பல்வேறு நாடுகளில் இயங்கிய விடுதலை குழுக்களுக்கு லிபியா நூறுகோடி டாலர் வரை உதவி செய்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இத்தகைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி ஒரு புதிய புரட்சியை கடாஃபி தொடங்கி வைத்தார். அதற்கு மக்கள் புரட்சி என்று பெயரிட்டார்.

இது சீனாவில் மாவோ தொடங்கிய கலாச்சாரப் புரட்சிக்கு நிகராக இருந்தது.

அரபு சோசலிசத்துக்கு எதிரான அரசு அமைப்புகளை மக்கள் விரட்டி அடித்தனர். மேயர்கள், மேனேஜர்கள், கவர்னர்கள் என்று உயர் பதவியில் இருந்த அனைத்து செல்வந்தர்களையும் பதவியில் இருந்து நீக்கினார்கள். அவர்களுடைய சொத்துகள் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பிரித்துத் தரப்பட்டன. அவர்கள் வகித்த பொறுப்புகளில் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் கொள்கைகளை பொதுமக்களே உருவாக்கும் இந்த புரட்சிக்கு மக்கள் உற்சாகமான ஆதரவு அளித்தனர்.

ஆனால், கடாஃபி தொடங்கி வைத்த இந்தப் புரட்சிக்கு அவருடைய குழுவில் இருந்த உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு

படிப்பகம்

padippakam





சோவியத் யூனியனுடன் பல்வேறு ஒப்பந்தங்களை ஏற்படுத்தினார் கடாஃபி

தெரிவித்தனர். அந்த எதிர்ப்பையும் மீறி மக்களுடைய ஒருமித்த ஆதரவை கடாஃபி பெற்றார்.

மக்கள் ஆதரவுடன் லிபியாவில் இயங்கிய எண்ணெய் நிறுவனங்களை 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11-ஆம் தேதி நாட்டுடமையாக்கினார்.

தனது இந்த முடிவு இஸ்ரேலை ஆதரித்த அமெரிக்காவின் முகத்தில் அறையும் நடவடிக்கை என்று கடாஃபி அறிவித்தார். லிபியாவில் இயங்கிய அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் சொத்துகளில் 51 சதவீதம் அளவுக்கு லிபிய அரசு கை வசப்படுத்தியது. நிறுவனங்களின் பெயர்கள் மாற்றப்பட்டன.

எண்ணெய் ஏற்றுமதிக்காக மேற்கத்திய நாடுகள் பயன்படுத்தி வந்த சிர்ட்டே வளைகுடாவில் கடாஃபி அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அந்த வளைகுடாவில் மரணக்கோடு என்று கடாஃபி அழைத்தார். கடாஃபியின் இந்த முடிவை அமெரிக்கா ஏற்க மறுத்தது. ஆனால் அதற்கு வேறு வழி எதுவும் இல்லை.

1973-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ஆம் தேதி இஸ்ரேலுக்கு 220 கோடி டாலர் அளவுக்கு ஆயுத உதவியை அமெரிக்கா அறிவித்தது. அரபு நாடுகளுக்கு எதிராக யுத்தம்

படிப்பகம்

padippakam





விழா ஒன்றில் கடாஃபி

நடத்துவதற்காகவே இந்த உதவி அறிவிக்கப்பட்டது. இதற்கு பதிலடியாக அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதியை லிபியா நிறுத்தியது. லிபியாவை பின்பற்றி சவுதி அரேபியாவும் மற்ற அரபு எண்ணெய் உற்பத்தி நாடுகளும் ஏற்றுமதிக்கு தடைவிதித்தன.

மக்கள் மத்தியிலும் அரபு நாடுகள் மத்தியிலும் கடாஃபியின் செல்வாக்கு வெகு வேகமாக அதிகரித்தது. இது குழுவினரில் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. கடாஃபியின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்று குரல் எழுப்பினார்கள்.

1975-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கடாஃபியின் நண்பரான கர்னல் அல் - முகாய்ஷி திடீர் புரட்சியில் ஈடுபட்டார். ஆனால் அது முறியடிக்கப்பட்டது. அதன்பிறகு புரட்சிக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 12-லிருந்து 5 ஆக குறைக்கப்பட்டது. முழுக்க முழுக்க கடாஃபியின் நம்பிக்கையை பெற்றோர்கள் மட்டுமே குழுவில் இடம் பெற்றார்கள்.

கடாஃபிக்கு எதிரான ராணுவப் புரட்சிக்கு உதவிய சில அதிகாரிகள் மீது விசாரணை நடத்தப்பட்டது. குற்றஞ்சாட்டப் பட்ட 22 அதிகாரிகள் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் 5-ஆம் தேதி பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டனர்.

படிப்பகம்

padippakam





சதிகளை முறியடிக்க சோஷலிஸ்ட் நாடுகளுக்கு உதவிய கார்லோஸ்

# சதிகளின் தொடக்கம்

மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடாக லிபியா மாறிக் கொண்டிருந்தது.

ஆனால் அந்த நாட்டின் எண்ணெய் வளம் அமெரிக்காவுக்கு பயன்படவில்லை. அங்கு முதலீடு செய்து இருந்த அமெரிக்க நிறுவனங்கள் கடாஃபி அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன.

பொதுவாக லிபியாவை சுரண்டி லாபம் சம்பாதித்து வந்த மேற்கத்திய நாடுகள் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தன. அவை சிஐஏ உதவியுடன் லிபியாவுக்கு எதிரான சதித்திட்டங்களை வகுத்து வந்தன. சோவியத் ஆதரவு பெற்ற லிபியா அந்த சதிகளை முறியடிக்க எதிர் சதிகளை திட்டமிட்டு அரங்கேற்ற தொடங்கியது.

லிபியாவிலிருந்து வெளியேறி மேற்கத்திய நாடுகளில் அடைக்கலம் புகுந்த கடாஃபி எதிர்ப்பாளர்களை பயன்படுத்தி

படிப்பகம்

padippakam



கடாஃபி அரசாங்கத்தை கவிழ்க்க சிஐஏ திட்டங்களை தீட்டி வந்தது. அதேசமயம் எண்ணெய் உற்பத்தி நாடுகள் கூட்டமைப்பில் அமெரிக்காவின் ஆதரவு பெற்ற சவூதி அரேபியா, அமெரிக்காவின் கைப்பாவையாக செயல்பட்டு வந்தது.

பத்து ஆண்டுகளுக்கு மேல் எண்ணெய் விலை உயர்த்தப்படாமல் தவிர்க்கப்பட்டு வந்தது. அமெரிக்காவிடம் வேறு வகையில் உதவிகளைப் பெற்றுக் கொண்டு எண்ணெய் விலையை உயர்த்த சவூதி அரேபியா மறுத்து வந்தது. இதனால் சோவியத் ரஷ்யா, ஈரான், லிபியா உள்ளிட்ட ஏழு எண்ணெய் உற்பத்தி நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

எண்ணெய் விலையை உயர்த்துவதற்கு சவூதி அரேயியாவை நிர்ப்பந்தம் செய்ய சோவியத் ரஷ்யாவும் லிபியாவும் ஒரு திட்டத்தை வகுத்தன.

அதற்காக சர்வதேச அளவில் கடத்தல் வேலைகளில் திறமை பெற்றிருந்த கார்லோஸ் உதவியை அந்த நாடுகள் கேட்டன.

கார்லோஸின் கதை உலகப் புகழ்பெற்றவை. யார் இந்த கார்லோஸ்?

இவனது உண்மையான பெயர் இல்யிச் ராமிரெஸ் சாஞ்செஸ்.

தென்அமெரிக்கவில் உள்ள வெனிசூலா நாட்டில் பிறந்தவன் இவன். பாலஸ்தீன போராட்டத்துக்கு ஆதரவாளன்.

இவனுடைய தந்தை கம்யூனிஸ்ட் இயக்கத்தை சேர்ந்தவர். இவன் பிறந்த போது இவனுக்கு கிறிஸ்தவ பெயர்தான் சூட்ட வேண்டும் என்று இவனுடைய தாயார் விரும்பினார். ஆனால் சோவியத் யூனியனை உருவாக்கிய மாமேதை லெனினுடைய நிஜப் பெயரான இல்யிச் என்பதை கார்லோஸுக்கு சூட்டினார்.

இவனுக்கு அடுத்து பிறந்த இரண்டு மகன்களில் ஒருவனுக்கு லெனின் என்றும் மற்றவனுக்கு விளாடிமிர் என்றும் பெயர் சூட்டினார். ஆக, மூன்று மகன்களுக்குமே லெனினுடைய பெயரைத்தான் அவர் சூட்டியிருந்தார்.

கராகஸ் நகரில் படித்த இவன் கம்யூனிஸ்ட் கட்சியின்

padippakam





மாறுபட்ட தோற்றத்தில் கார்லோஸ். தோற்றங்களை மாற்றுவதில் தேர்ந்தவர்

இளைஞர் பிரிவில் சேர்ந்து பணியாற்றினான். 1966 ல் ஒரு மாநாட்டில் பங்கேற்பதற்காக கியூபா சென்ற இவன் அங்கு கொரில்லா பயிற்சி அளிக்கும் பள்ளியில் சேர்ந்தான். அடுத்த ஆண்டு இவனுடைய பெற்றோர் விவாகரத்து பெற்றனர். அதைத் தொடர்ந்து இவனது தாயார் குழந்தைகளுடன் லண்டன் சென்றுவிட்டார். அங்கு கார்லோஸ் பொருளாதாரம் படித்தான்.

1968-ஆம் ஆண்டு இவனையும் இவனுடைய தம்பியையும் பாரீஸில் உள்ள கல்லூரியில் சேர்க்க விரும்பினார். ஆனால் எதிர்பாராமல் மாஸ்கோவிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் இருவருக்கும் இடம் கிடைத்தது. 1970-ஆம் ஆண்டு இவன் லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு சென்றான். அங்கு பாலஸ்தீன விடுதலைப் போராட்டக் குழுவில் சேர்ந்தான்.

அந்த அமைப்பில் கொரில்லா பயிற்சி முடித்தவுடன் ஜோர்டான் நாட்டின் பாலஸ்தீன போராளியாக செயல்பட்டான். ஒரு கட்டத்தில் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட அவன் மீண்டும் பெய்ரூட் வந்தான். அதன் பிறகு அங்கிருந்து படிக்கும் நோக்குடன் மீண்டும் லண்டன் வந்தான். இருந்தாலும் பாலஸ்தீன விடுதலைக் குழுவுக்காக தொடர்ந்து வேலை செய்தான்.

படிப்பகம்

padippakam



1973-ஆம் ஆண்டு பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர்களில் ஒருவரான முகமது பவ்டியா என்பவரை இஸ்ரேலின் மொசாத் கூலிப்படை கொன்றது. பாரீஸில் நடைபெற்ற இந்த படுகொலைக்கு பழிவாங்கும் வகையில் லண்டனில் யூத அமைப்பின் துணைத் தலைவராக இருந்த ஜோசப் ஷீஃப் என்பவரை கொலை செய்ய கார்லோஸ் முயற்சி செய்தான். ஆனால் அந்த முயற்சி தோற்றுவிட்டது.

அதன் பிறகு 1975-ஆம் ஆண்டு வரை பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளில் கார்லோஸ் ஈடுபட்டான்.

1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் தேதி பிரான்ஸ் நாட்டில் உளவுத்துறை இவனை கைது செய்தது. ஆனால் மிகத் தந்திரமாக தன்னை கைது செய்த உளவுத்துறை அதிகாரிகளை சுட்டுக்கொன்றுவிட்டு பெய்ரூட் நகருக்கு தப்பிச் சென்றான்.

இந்த கார்லோஸின் உதவியைத்தான் லிபியாவும் சோவியத் ரஷ்யாவும் சவூதி அரேபியாவுக்கு எதிராக பயன்படுத்த முடிவு செய்தன. கார்லோஸ் லிபியாவுக்கு வந்தான்.

1975-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி ஆஸ்திரியா தலைநகர் வியன்னா நகரில் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் தலைமையகம் இருக்கிறது. அங்கு எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டம் தொடங்கி நடைபெற்றது.

அந்த கூட்டத்தில கார்லோஸ் ஆறு பேர் உதவியுடன் திடீரென்று தாக்குதல் நடத்தினான். அங்கிருந்து 60 பேரை பிணைக் கைதிகளாக பிடித்தான். அவர்களை தனது பிடியில் வைத்திருந்த கார்லோஸ் ஆஸ்திரிய அரசாங்கத்திற்கு ஒரு நிபந்தனை விதித்தான்.

“ பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் நோக்கம் தொடர்பான ஒரு அறிக்கையை ஆஸ்திரிய வானொலியில் 2 மணி நேரத்துக்கு ஒருமுறை வாசிக்க வேண்டும்” என்று அவன் வற்புறுத்தினான்.

பிணைக் கைதிகளை கொன்று விடுவோம் என்று கார்லோஸ் மிரட்டியதால் வேறு வழியின்றி அந்த அறிக்கை வானொலியில் வாசிக்கப்பட்டது. பின்னர் கார்லோஸ் கேட்டபடி டிசம்பர் 22-ஆம் தேதி ஒரு விமானத்தை ஆஸ்திரிய

படிப்பகம்

padippakam





புரட்சி வெற்றிபெற்ற தொடக்கத்தில் நாஸர், சூடான் அதிபர் ஆகியோருடன்

அரசாங்கம் கொடுத்தது. அந்த விமானத்தை பெற்றுக் கொண்டு 42 பிணைக் கைதிகளை விடுவித்தான்.

பின்னர் முக்கியமான 11 பிணைக் கைதிகளுடன் விமானத்தில் அல்ஜீரியா நாட்டின் தலைநகரான அல்ஜீயர்ஸ் சென்றான்.

இந்த 11 பிணைக் கைதிகளில் சவூதி அரேபியாவின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் அகமது ஜாகி யாமனியும் ஈரான் நாட்டின் நிதி அமைச்சர் ஜம்ஷித் அமுஸ்கரும் முக்கியமானவர்கள்.

இந்த இரண்டு அமைச்சர்களையும் கொன்றுவிட கார்லோஸ் திட்டமிட்டான். பிணைக் கைதிகளை காப்பாற்றும் முயற்சியில் அல்ஜீரியா ஜனாதிபதி தீவிரமாக ஈடுபட்டார். அமைச்சர்களை கொலை செய்தால் கார்லோஸ் இருந்த விமானம் தகர்க்கப்படும் என்று கூறினார். எனவே, பணையத் தொகையாக 50 லட்சம் அமெரிக்க டாலரை பெற்றுக் கொண்டு அவன் சோவியத் ரஷ்யாவுக்கு சென்று விட்டான்.

ஆனால், விரைவில் அங்கிருந்து அவன் லிபியாவுக்கு திரும்பி அங்கேயே தங்கியதாக மேற்கத்திய உளவாளிகள் கூறினார்கள்.

அவனுக்காக லிபிய கடற்கரை பகுதியில் ஆடம்பரமான வீடு ஒன்றையும் 1 கோடி டாலர் அன்பளிப்பும் கொடுத்ததாக

படிப்பகம்

padippakam



கடாஃபி மீது அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

கொஞ்சநாள் கழித்து, கார்லோஸின் நடவடிக்கை முழுமைக்கும் கடாஃபிதான் மூளையாக இருந்தார் என்று மேற்கத்திய நாடுகள் செய்திகளை பரப்பின.

வியன்னாவில் நடைபெற்ற எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டத்தில் எண்ணெய் விலை உயர்வுக்கு சவூதி அரேபியா எதிர்ப்பு தெரிவிக்க கூடாது. மீறினால் அந்த நாட்டின் எண்ணெய் வள அமைச்சர் யாமனியை கொன்று விடுவோம் என்று மிரட்டுவதற்காகத்தான் கார்லோஸுக்கு லிபியா உதவி செய்தது. வியான்னாவில் கார்லோஸுடன் கடத்தலில் ஈடுபட்டவர்கள் லிபியாவில் உளவுத்துறை ஏஜெண்டுகள். முதலிலேயே வியன்னாவுக்கு அனுப்பப்பட்ட கார்லோஸுக்கு லிபிய அரசாங்கமே ஆயுதங்களை பத்திரமாக அனுப்பி வைத்தது.

இப்படியெல்லாம் செய்திகள் பரவின. ஒருவகையில் இது உண்மையாகவும் இருக்கலாம். ஏனென்றால் 5 சதவீதத்துக்கு மேல் எண்ணெய் விலையை உயர்த்த அனுமதிக்கக் கூடாது என்று சவூதி இளவரசர் தனது அமைச்சருக்கு உத்தரவிட்டு இருந்தார். எனவேதான் இந்த கடத்தல் நாடகம் அரங்கேற்றப்பட்டது என்றும் மேற்கத்திய நாடுகள் தெரிவித்தன.

கடாஃபிக்கு இந்த கடத்தல் சம்பவத்தில் நிச்சயமாக பங்கிருக்கும் என்று கூறப்பட்டது. இது ஒருவகை மிரட்டல்தான் என்று கருதப்பட்டது.

ஏனென்றால் 1976-ஆம் ஆண்டு இந்தோனேசிய நகரமான பாலியில் மீண்டும் எண்ணெய் உற்பத்தி நாடுகள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திலும் எண்ணெய் விலையை உயர்த்த லிபியா முயற்சி செய்தது. லிபியாவுடன் ஈரான் மற்றும் ஏழு நாடுகள் இணைந்து '20 சதவீதம் எண்ணெய் விலையை உயர்த்த வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தன.

ஆனால் "ஆறு மாதங்களுக்கு எண்ணெய் விலையை உயர்த்தக் கூடாது" என்று சவூதி அரேபியா கூறியது.

சவூதி அரேபியாவின் மேற்கத்திய ஆதரவுக் கொள்கையை

படிப்பகம்

padippakam





இரண்டாவது முறையாகவும் கடாஃபி சோவியத் யூனியன் சென்றார்

இராக் எண்ணெய் வள அமைச்சர் கடுமையாக தாக்கினார். ஆனாலும் சவூதி அரேபியாவின் முடிவு ஏற்கப்பட்டது. ஆறு மாதங்கள் கழித்து 1977-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 சதவீதம் எண்ணெய் விலை உயர்த்தப்பட்டது. ஜூலை மாதம் மேலும் 5 சதவீதம் உயர்த்தப்பட்டது.

இந்த எண்ணெய் விலை உயர்வு லிபியாவின் வருமானத்தை அதிகரித்தது. அந்த நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டது. லிபியாவில் இயங்கிய மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை குறைத்துக் கொண்டன. என்றாவது ஒருநாள் தாங்கள் லிபியாவிலிருந்து வெளியேற வேண்டியிருக்கும் என்று அவை கருதத் தொடங்கின.

சோவியத் ரஷ்யாவுக்கும் லிபியாவுக்கும் இடையிலான உறவு ஆழமானது.

1976-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடாஃபி முதன் முறையாக மாஸ்கோ சென்றார். அப்போது 1200 கோடி டாலர் அளவுக்கு சோவியத் ரஷ்யாவிடம் ஆயுதங்கள் வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இப்படி வாங்கப்பட்ட ஆயுதங்களை அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் போராடிய விடுதலைக் குழுக்களுக்கு

படிப்பகம்

padippakam



பிரித்து அனுப்பி உதவி செய்தார்.

கடாஃபியின் செல்வாக்கை குறைப்பதற்கு லிபியாவில் எதிர்ப்பை உருவாக்க சி.ஐ.ஏ. சதிகளை வகுத்தது. அது மாணவர்களை கடாஃபிக்கு எதிராகத் தூண்டிவிட்டது.

திரிபோலி மற்றும் பெங்காஸி நகரங்களில் உள்ள பல்கலைக் கழக மாணவர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டத்தை தொடங்கினார்கள். அதைத் தொடர்ந்து இத்தகைய போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று கடாஃபி அறிவித்தார்.

திரிபோலி பல்கலைக் கழகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட 40 மாணவர்கள் நீக்கப்பட்டனர். பல்கலைக் கழக வளாகத்தில் அரசுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய போஸ்டர்கள் இருந்தன. அவை கிழித்தெரியப்பட்டன. கடாஃபியின் நண்பரான ஜல்லுத் திரிபோலி பல்கலைக் கழகத்திற்கு நேரடியாகவே வந்தார். அப்போது மாணவர்கள் இரண்டு பிரிவினராகப் பிரிந்து கோஷங்களை எழுப்பினார்கள்.

கடாஃபிக்கு ஆதரவாகவும் எதிராகவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். பெங்காஸியிலும் மாணவர்கள் போராட்டம் அரசுக்கு தலைவலியை ஏற்படுத்தியது. இந்த போராட்டங்களை ஒடுக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. எதிர்ப்புரட்சி மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை தூண்டும் தலைவர்கள் பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டனர்.

தண்டனை நிறைவேற்றப்படும் காட்சிகள் லிபிய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டன. 1984-ஆம் ஆண்டு வரை இந்த கைது நடவடிக்கைகளும் தண்டனைகளும் நீடித்தன.

வெளிநாட்டு தூண்டுதல்கள் அதிகரித்தன. எனவே மக்கள் மனநிலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் கடாஃபிக்கு ஏற்பட்டது. புரட்சியின் பலன்கள் சரியான வழியில் மக்களை சென்றடையவில்லை. இதை உணர்ந்த கடாஃபி அதிகாரங்களை மக்களுக்கு பிரித்தளிக்கும் வகையில் புதிய மாற்றத்தை அமுல்படுத்த முடிவு செய்தார்.

படிப்பகம்

padippakam





நண்பர்களுடன் எதிர்காலத் திட்டங்களுக்காக லிபிய வரைபடத்தை ஆய்கிறார்

*1977-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ஆம் தேதி லிபியாவின் அதிகாரப்பூர்வ பெயரை மாற்றினார். மக்கள் சமத்துவ லிபிய குடியரசு என்று பெயர் மாற்றப்பட்டது. கட்டுப்படுத்தும் அரசாங்கம் இல்லாமல் மக்கள் வழிகாட்டுதலில் இயங்கும் புதிய அரசு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு லிபிய மொழியில் ஜமாஹிரியா என்று பெயர் சூட்டினார்.*

*1976 முதல் 1980-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட 5 ஆண்டுகாலத்தில் லிபியா அடைய வேண்டிய இலக்குகளை கடாஃபி வரிசைப்படுத்தினார். 1980-ஆம் ஆண்டுக்குள் அனைத்து காய்கறிகளும் பால் பொருள்களும் உள்ளூரிலேயே உற்பத்தி செய்யும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளில் பழங்கள், மாமிசம், தானிய வகைகளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து தன்னிறைவு பெறும் வகையில் அவர் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.*

*இதன் மூலம் வெளிநாட்டை சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் தவிர்க்கப்படும். லிபியாவின் ஏழை மக்களின் வாழ்க்கை தரம் உயரும் என்று கடாஃபி அறிவித்தார்.*

*ஆண்டுக்கு 30000 ஆயிரம் புதிய வீடுகள் கட்டப்படும் என்று அவர் தெரிவித்தார்.*

*வெறும் அறிவிப்புகளாக மட்டும் இல்லாமல் பசுமைப்*

படிப்பகம்

padippakam



புரட்சியை நனவாக்கும் வகையில் 1976-ஆம் ஆண்டு விவசாயத்திற்காக பெருமளவு கடன்கள் வழங்கப்பட்டன. அவற்றுக்கு வட்டி எதுவும் இல்லை.

கடாஃபியின் இந்த திட்டங்களை முடக்கும் வகையில் எண்ணெய் ஏற்றுமதியில் மேற்கத்திய நாடுகள் சதிகளை அரங்கேற்றின. ஒருபுறம் வெளிநாடுகளுக்கு உதவிகளை அதிகரித்து வந்தார். இன்னொருபுறம் லிபிய பாதுகாப்புக்காக ஏராளமான தொகை செலவிடப்பட்டது. இவற்றோடு பசுமைப் புரட்சிக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எண்ணெய் விலையை உயர்த்த விடாமல் மேற்கத்திய நாடுகள் முட்டுக்கட்டை போட்டன. அதிலிருந்து விடுபடு வதற்காக லிபியாவும் மற்ற எண்ணெய் உற்பத்தி நாடுகளும் முயற்சி செய்தன.

லிபியாவில் புரட்சியால் ஏற்பட்ட பலன்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று கடாஃபி விரும்பினார். நாடு முழுவதும் மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த குழுக்கள் லிபியாவின் அரசியலை சீரமைக்க உதவி செய்தன. லிபிய மக்களை புரட்சிக்கு ஆதரவாக ஒருங்கிணைத்தன.

1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இஸ்லாமிய காலண்டரை கி.பி. 632-ஆம் ஆண்டு முதல் தொடங்கும் வகையில் திருத்தி அமைத்தார். அதுவரை கி.பி. 622-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் வகையில் இஸ்லாமிய காலண்டர் இருந்தது.

கடாஃபியின் இந்த முடிவுக்கு இஸ்லாமிய உலமாக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் அதைப்பற்றி கடாஃபி கவலைப்படவில்லை.

தொழிலாளர்கள் தொழிற்சாலைகளின் பங்குதாரர்களே தவிர, அடிமைகள் அல்ல. எல்லா குடிமக்களும் உணவு, உடை, வீடு பெற வேண்டும். யாருக்காவது ஒரு வீட்டுக்கு அதிகமாக இருந்தால் அதை அரசு கைப்பற்றி வீடு இல்லாதவருக்கு கொடுக்கும்.

தனியார் நிறுவனங்களை மக்கள் குழுக்கள் கைப்பற்ற வேண்டும். அந்த நிறுவனங்களில் சம்பளம் இல்லாமல்

படிப்பகம்

padippakam





பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத்துடன் கடாஃபி

பங்குதாரர்களாக தொழிலாளர்களை மாற்ற வேண்டும் என்று கடாஃபி அறிவித்தார்.

1979-ஆம் ஆண்டு முதல் இந்த அறிவிப்புகள் நடைமுறைக்கு வந்தன. அந்த ஆண்டு ஆகஸ்டு முதல் மக்கள் சூப்பர் மார்க்கெட்டுகள் திறக்கப்பட்டன. தனியார் வர்த்தகம் தவிர்க்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டன. ராணுவத்திலும் மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன.

1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மக்கள் நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தின் கடாஃபியும் அவருடைய புரட்சிக் குழுவினரும் பங்கேற்கவில்லை. அவர்கள் இப்போது அரசாங்க அமைப்புக்கு

படிப்பகம்

padippakam



வெளியே வந்திருந்தன. கடாஃபியின் சார்பில் நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர், "லிபியா இப்போது மக்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்றார்.

வெளிநாடுகளில் உள்ள லிபிய தூதரகங்கள், மக்கள் குழுக்களாக அறிவிக்கப்பட்டன.

ஏற்கெனவே லிபியாவை மேற்கத்திய நாடுகள் தனிமைப்படுத்தி வந்தன. இந்நிலையில் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி தலைநகர் திரிபோலியில் இருந்த அமெரிக்க தூதரகம் திடீரென்று தாக்கப்பட்டது. தீயிட்டு கொளுத்தப்பட்டது. இதைக் காரணமாக கொண்டு லிபியாவை பயங்கரவாதத்துக்கு துணைபோகும் நாடுகள் பட்டியலில் அமெரிக்கா இணைத்தது.

இந்தத் தாக்குதல் கூட அமெரிக்காவின் சதிதான் என்று கூறப்பட்டது. லிபியாவை தனிமைப்படுத்த அமெரிக்கா இந்த நாடகத்தை அரங்கேற்றியதாக கருதப்பட்டது. கடாஃபிக்கு எதிரான லிபியர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று அங்கிருந்து அவருக்கு தொல்லைகளை கொடுத்து வந்தனர். அவர்களை வெறி நாய்கள் என்று கடாஃபி அழைத்தார்.

அந்த வெறி நாய்களை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தார். அதைத் தொடர்ந்து 1980-ஆம் ஆண்டு மே மாதம் லிபியாவுக்கான தனது தூதரகத்தை அமெரிக்கா மூடிவிட்டது.

அதே ஆண்டு அக்டோபர் மாதம் செய்தித் தாள்களையும், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களையும் புரட்சிக் குழுக்கள் கைப்பற்றின. அவை கடாஃபி அரசுக்கு எதிராக தொடர்ந்து மக்கள் மத்தியில் குழப்பமான தகவல்களை பரப்பி வந்தன.

தனக்கு எதிரான மேற்கத்திய சதிகளை முறியடிக்க லிபியா பெருமளவு ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. அணு ஏவுகணைகளை தயாரிக்கவும் லிபியா முயற்சி மேற்கொண்டது. லிபியாவுக்கு புளூடோனியத்தை விற்க அர்ஜென்டினா முன் வந்தது.

படிப்பகம்

padippakam





நாஸர் மற்றும் அரபு நாடுகளின் தலைவர்களுடன் கடாஃபி

# அமெரிக்காவின் ஆத்திரம்

*"லிபியாவுக்கு கட்டுமான பொருள்களை அனுப்பாதீர்கள்"*

*அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து ஜிம்மி கார்ட்டர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.*

*சோவியத் யூனியனுடன் கடாஃபி நெருக்கமாக இருந்ததை அவர் விரும்பவில்லை. கடாஃபி தங்களை எரிச்சலூட்டுகிறார் என்று அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கூறி வந்தன. ஆனால் 1979 முதல் 1983-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனிடம் இருந்து ஆயிரத்து 200 கோடி டாலர் அளவுக்கு கடாஃபி ஆயுதங்களை வாங்கினார்.*

*இந்நிலையில் 1979-ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக ரொனால்டு ரீகன் பொறுப்பேற்றார்.*

*"கடாஃபி நமக்கு எரிச்சலூட்டுகிறவர் மட்டுமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவர் நம்முடைய எதிரி என்பதை உணர வேண்டும்"*

*இதுதான் ரொனால்டு ரீகனின் நிலைப்பாடு.*

*இதற்கு காரணம் இருந்தது. உலகம் முழுவதையும் தனது*

படிப்பகம்

padippakam



கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று அமெரிக்கா விரும்பியது. ஆனால் அமெரிக்காவிற்கு போட்டியாக சோவியத் யூனியன் வளர்முக நாடுகளுக்கு நம்பிக்கையான தோழனாக மாறிக் கொண்டிருந்தது.

லிபியா சோவியத் யூனியனிடம் நெருக்கமாக இருந்தது. ரீகன் பொறுப்பேற்ற சமயத்தில் கடாஃபி மாஸ்கோ சென்றார். இது அவருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அதன் விளைவாக 1981-ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவுக்கான லிபிய தூதரகத்தை மூடும்படி ரீகன் உத்தரவிட்டார்.

அத்துடன் அவர் விட்டுவிட வில்லை. அடுத்த மூன்ற மாதங்களில் சிர்ட்டே வளைகுடாவை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர ரீகன் நடவடிக்கை எடுத்தார். அந்த வளைகுடாவை லிபியா தன்னுடையது என்று பிரகடனம் செய்தது. ஆனால் அந்த வளைகுடா மீது பரந்த இரண்டு லிபிய போர் விமானங்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது.

இரு நாடுகளுக்கும் இடையே மோதல் தீவிரமடைந்தது.

அமெரிக்க அதிகாரிகளை சிலரைக் கொலை செய்ய லிபியா முயற்சி செய்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஜனாதிபதி ரீகனுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. 1981-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி முதல் லிபியா மீது அமெரிக்கா பொருளாதார தடைவிதித்தது. லிபியாவுக்கு செல்ல விரும்பிய அமெரிக்கர்களின் பாஸ்போர்ட்டுகள் ரத்து செய்யப்பட்டன.

சோவியத் ரஷ்யாவுடன் உறவு வைத்ததற்காக மட்டும் அமெரிக்கா ஆத்திரப்படவில்லை. லிபியா தனது எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானத்தை பயன்படுத்தி மிகப்பெரிய திட்டம் ஒன்றுக்கு தொடக்க விழா நடத்த முடிவு செய்தது. அது மிகப்பெரிய திட்டம். பாலைவன நாடுகள் அனைத்திற்கும் முன்மாதிரியான திட்டம்.

அதுதான் மாபெரும் செயற்கை நதியை உருவாக்கும் திட்டம். இந்த திட்டம் குறித்து கடாஃபி விஞ்ஞானிகளுடனும் பொறியாளர்களுடனும் தீவிரமாக ஆலோசனை நடத்தி வந்தார். இது அமெரிக்காவுக்கு பிடிக்கவில்லை. லிபியாவின் குடிநீர் தேவையை மட்டுமின்றி விவசாயத்திற்கும் பயன்படும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

படிப்பகம்

padippakam





கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவுடன் கடாஃபி

அது நிறைவேறினால் அரபு நாடுகள் மட்டுமின்றி வடக்கு ஆப்பிரிக்க நாடுகளும் லிபியாவை பின்பற்றத் தொடங்கிவிடும் என்று அமெரிக்கா கருதியது. ஏழை நாடுகளும் வளர்முக நாடுகளும் சுயசார்பு நிலைக்கு உயர்ந்து விடக்கூடாது என்பதுதான் அமெரிக்காவின் நோக்கம். அந்த நாடுகளுக்கு தேவையான உதவிகளையும் செய்யாது. அவை தாங்களே முன்னேறினாலும் பிடிக்காது.

லிபியாவின் வளர்ச்சியை தடுப்பதற்கு ஒரே வழி அதன் எண்ணெய் வருவாயை குறைப்பதுதான் என்று அமெரிக்கா நினைத்தது. எனவே லிபியாவுக்கு எதிரான சதி வேலைகளை தீவிரப்படுத்தியது.

1980-ஆம் ஆண்டு வரை லிபியாவின் எண்ணெய் வருமானம் அதிக அளவில் இருந்தது. 1980-ஆம் ஆண்டு நைஜீரியா நாடு தனது எண்ணெய் விலையை தன்னிச்சையாக குறைத்தது. இதையடுத்து மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதி நாடான அமெரிக்கா லிபியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தியது.

1981-ஆம் ஆண்டு முதல் லிபியாவின் எண்ணெய் வருமானம் வீழ்ச்சியடைந்தது. அடுத்த மூன்று ஆண்டுகள் லிபியா மீது

படிப்பகம்

padippakam



அமெரிக்கா கொடூரமான தடைகளை சுமத்தியது.

உணவு மற்றும் மருந்துகள் மட்டுமே அமெரிக்காவிலிருந்து லிபியாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் மற்ற பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றால் லைசென்ஸ் பெறவேண்டும். அதாவது மற்ற பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு லைசென்ஸ் கிடைக்காது என்பதுதான் இதன் பொருள்.

இத்தகைய சூழலில் சிர்ட்டே வளைகுடா அருகில் இரண்டு அணு உலைகளை கட்டுவதற்கு லிபியா முடிவு செய்தது. ஆனால், அமெரிக்கா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த முயற்சியை லிபிய அரசு கைவிட்டது.

லிபியா எதை செய்தாலும் அதை சீர்குலைக்கும் முயற்சியில் அமெரிக்காவின் உளவுத்துறை அமைப்பான சி.ஐ.ஏ. நடவடிக்கை மேற்கொண்டது. லிபியாவை பயங்கரவாத நாடாக சித்தரிக்க அமெரிக்கா முயற்சி செய்தது.

1984-ஆம் ஆண்டு லண்டனில் லிபிய தூதரகம் முன் ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பிரிட்டிஷ் பெண் போலீஸ் ஒருவர் கொல்லப்பட்டார். இந்த கொலைக்கு லிபிய அரசுதான் பொறுப்பு என்று சிஐஏ கூறியது.

கடாஃபியை தூக்கி எறிந்தால்தான் இத்தகைய கொலைகளை தடுக்க முடியும் என்று சிஐஏ பிரச்சாரம் செய்தது. உள்நாட்டில் கடாஃபிக்கு எதிராக எதிர்ப்புரட்சியை தீவிரப்படுத்த மாணவர்களை அது குறிவைத்தது.

இஸ்லாமிய கோட்பாடுகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று லிபிய மக்கள் அனைவரும் கட்டாயப்படுத்தப்பட்டனர். மது அருந்துவது, மேற்கத்திய இசையை கேட்பது, பார்களில் நடனமாடுவது உள்ளிட்ட கேளிக்கைகள் தடை செய்யப்பட்டன. மாணவர்கள் மத்தியில் இது அதிருப்தியை உருவாக்கி இருந்தது.

சி.ஐ.ஏ. இதை பயன்படுத்தி கொண்டது. கடாஃபியின் இத்தகைய நடவடிக்கைகளை சர்வாதிகார நடவடிக்கை என்று சில மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் பிரச்சாரம் செய்தனர்.

விரும்புகிற கல்வியை இலவசமாக படிக்க கடாஃபி அரசு

படிப்பகம்

padippakam





புரட்சி தின நிகழ்ச்சியில் ஆவேசமாக பேசுகிறார் கடாஃபி

உரிமை அளித்திருந்தது. வெளி நாடுகளில் சென்று கூட படிப்பதற்கு அரசு முழுமையாக உதவி செய்தது. ஆனால் மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரத்தை விரும்பிய சில மாணவர்கள் கடாஃபி அரசுக்கு எதிராக சக மாணவர்களிடம் பிரச்சாரம் செய்தனர்.

இதை தடுத்து நிறுத்தும்படி அரசு உத்தரவிட்டது. அந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தப் பிரச்சாரத்தை தூண்டிய முகமது இஹ்றஃபாப் என்ற மாணவர் திரிபோலி பல்கலைக் கழக வளாகத்தில் தூக்கிலிடப்பட்டார். இந்த தண்டனை 10 ஆயிரம் மாணவர்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது.

"புரட்சியின் எதிரிகளை நாங்கள் விரும்பவில்லை" என்று மாணவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். இது லிபிய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

இதே காலகட்டத்தில் 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி மாநாடு நடைபெற்ற ஹோட்டலில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. அயர்லாந்து விடுதலைப் போராட்ட உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். பேட்ரிக் மேகீ என்ற அந்த நபருக்கு

படிப்பகம்

padippakam



லிபியாவில் பயிற்சி அளிக்கப்பட்டதாக உடனே செய்திகள் பரப்பப்பட்டன.

1984-ஆம் ஆண்டு பிரிட்டனில் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை லிபியா ஆதரித்தது. இந்த நிலையில்தான் அந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இந்த சமயத்தில் அதாவது குண்டு வெடிப்பு நடந்த 15 நாட்களில் பி.பி.சி. தொலைக்காட்சி ஒரு புகைப்படத்தை ஒளிபரப்பியது. அதில் பிரிட்டிஷ் சுரங்கத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிநிதியான ரோஜர் வின்ட்சரை லிபியா தலைவர் கடாஃபி கட்டித் தழுவியபடி எடுக்கப்பட்ட அந்தப் படத்தை கடாஃபிக்கு எதிரான ஆதாரமாக பிரிட்டன் பயன்படுத்தியது.

குண்டு வெடிப்பு ஏற்படுத்திய சந்தோஷத்தை இருவரும் பகிர்ந்து கொள்வதாக அந்தப் படத்தை கொண்டு செய்திகள் வெளியாகின.

சின்னச்சின்ன விஷயங்களை கூட கடாஃபிக்கு எதிராக திசைதிருப்பும் வேலையில் சிஐஏ ஈடுபட்டது. அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை ஒடுக்குவதில் கடாஃபி கொடூரமான வழிகளை பின்பற்றுகிறார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

1984-ஆம் ஆண்டு வெளி நாடுகளில் வசித்துக் கொண்டு லிபியாவுக்கு எதிராக செயல்பட்ட 4 லிபியர்கள் கொல்லப் பட்டனர். உள்நாட்டில் அரசுக்கு எதிராக செயல்பட்ட 120 பேர் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் 1986 வரை வெளி நாடுகளில் வசித்த லிபிய எதிர்ப்பாளர்கள் 20 பேர் கொல்லப்பட்டனர் என்று சிஐஏ பட்டியல் வெளியிட்டது.

கடாஃபி கொடூரமானவர். மனித உரிமைகளுக்கு எதிரானவர். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவானவர் என்று சித்தரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொடக்கத்தில் இருந்தே இந்தப் பிரச்சாரம் முதலாளித்துவ மீடியாக்களில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டன.

1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரோம் மற்றும் வியன்னா விமானநிலையங்களில் திடீர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலை நடத்திய அபு நிடால் என்பவருக்கும்

படிப்பகம்

padippakam





ஒரு ஆலோசனைக் கூட்டத்தில்

லிபியாவுடன் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. 1986-ஆம் ஆண்டு லிபியா மீதான தடைகளை அமெரிக்கா விரிவுபடுத்தியது.

அதன்படி லிபியாவுக்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தடை செய்யபட்டது. வணிக ஒப்பந்தங்களும் பயணமும் தடை செய்யப்பட்டன. லிபியாவுடன் நிதி பரிமாற்றமும் தடை செய்யப்பட்டது. கடாஃபி தனது போக்கை மாற்றிக் கொள்ள தவறினால் இன்னும் பயங்கரமான நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக ஜனாதிபதி ரீகன் மிரட்டல் விடுத்தார்.

ஆனால் சில மாதங்களில் ஜெர்மனி தலைநகர் பெர்லின் நகரில் உள்ள இரவு விடுதி ஒன்றில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இந்த இரவு விடுதியில் அமெரிக்க ராணுவ வீரர்கள் கேளிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம். அவர்களை குறிவைத்தே இந்த குண்டு வெடிப்பு நடத்தப்பட்டதாக கூறப்பட்டது. குண்டு வெடிப்பில் மூன்று பேர் உயிர் இழந்தனர் 230 பேர் காயமடைந்தனர்.

இதற்கும் கடாஃபியை குற்றம் சாட்டினார் ரீகன்.

“மத்திய கிழக்கு நாடுகளின் பைத்தியக்காரன்” என்று கடாஃபியை ரீகன் கடுமையாகச் சாடினார். அரேபியர்களை

படிப்பகம்

padippakam



'நாய் மகன்' என்று திட்டுவது மிகப்பெரிய அவமானமாகக் கருதப்படும்.

ஆனாலும் பெர்லின் குண்டு வெடிப்புக்கும் லிபியாவுக்கும் தொடர்பு இல்லை என்று கடாஃபி திட்டவட்டமாக மறுத்தார். லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் உலகம் முழுவதும் அமெரிக்கர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரித்தார்.

"ரீகன் உலகத்தை திரையரங்கு போல கருதக் கூடாது" என்று கடாஃபி கிண்டல் செய்தார்.

ஆனால், அடுத்த சிலநாட்களில் அதாவது 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி மற்றும் 16-ஆம் தேதிகளில் திரிபோலி மற்றும் பெங்காஸி நகரங்களின் மீது அமெரிக்க விமானப்படை சரமாரியாக குண்டுவீசி தாக்குதல் நடத்தியது. இதில் கடாஃபியின் வளர்ப்பு மகள்களில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்க விமாணப் படையின் 32 விமானங்கள் ஈடுபட்டன. லிபியாவின் கவனத்தை வளர்ச்சிப் பதையில் இருந்து திசைதிருப்ப வேண்டும். அமெரிக்காவுக்கு பணிய வேண்டும் என்பதுதான் இந்தத் தாக்குதலின் ஒரே நோக்கம். ஆனால், கடாஃபி இந்தத் தாக்குதலைப் பற்றி கவலைப்படவில்லை. லிபியாவின் வருமானம் 2 ஆயிரத்து 100 கோடியில் இருந்து 600 கோடியாக வீழ்ச்சியடைந்தது.

விமானப்படைத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்களில் இருந்து 1987-ஆம் ஆண்டு திரிபோலியும் பெங்காஸியும் மீண்டன. பல வாரங்கள் கடாஃபி வெளியில் வரவில்லை. ஒருவழியாக அவர் பொது இடங்களுக்கு வரத் தொடங்கினார்.

"லிபியா தனது இதுவரையான பாதையில் இருந்து விலகுகிறது"

இனியும் இதுபோன்ற தாக்குதலை எதிர்கொள்ள வேண்டாம் என்ற முடிவுக்கு கடாஃபி வந்துவிட்டார்.

லிபியா மீதான வெளிநாடுகளின் தோற்றத்தை மாற்ற கடாஃபி முடிவு செய்தார். இதற்காக பிரிட்டனில் லிபியாவின் தூதராக இருந்த டாக்டர் உமர் முன்டாசெர் என்பவரை புதிய

படிப்பகம்

padippakam





**அமெரிக்கா நினைத்தால் ஏதேனும் ஒரு காரணத்தாக் கூறி எந்த நாட்டின் மீதும் குண்டுகளை வீசும். உயிர்களைக் கொல்லும்**

பிரதமராக கடாஃபி நியமித்தார்.

அரசாங்கத்தில் தனக்கு பெறுப்புத் தேவையில்லை என்று கடாஃபி ஒதுங்கியே இருப்பார். கர்னல் கடாஃபி என்ற அழைப்பதையே அவர் விரும்புவார். ஆனால் லிபியாவின் தலைவராக அவர்தான் செயல்பட்டார். புதிய பிரதமரும் கடாஃபி விரும்புவதைத்தான் செயல்படுத்தினார்.

1988-ஆம் ஆண்டு லிபியாவுக்கு எதிராக இன்னொரு பயங்கரமான குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்தியது. லிபியா ரசாயன ஆயுதங்களை தயாரிப்பதாகவும், பேரழிவு ஆயுதங்களை உருவாக்குவதாகவும் அமெரிக்கா கூறியது.

இந்நிலையில் 1988-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உலகையே உலுக்கிய அந்த விபத்து நிகழ்ந்தது. அமெரிக்காவுக்கு சொந்தமான பயணிகள் விமானம் ஸ்காட்லாந்து மீது பறந்து கொண்ருந்தது. லாக்கர்பீ என்ற இடத்தின் மீது அது பறந்தபோது நடுவானில் வெடித்துச் சிதறியது.

இந்த விபத்து லிபியாவை சர்வதேச அளவில் ஓரங்கட்ட அமெரிக்காவுக்கு உதவியாக இருந்தது.

படிப்பகம்

padippakam





ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமையாக இருந்தால் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை என்றார் கடாஃபி

படிப்பகம்

padippakam





**லாக்கர்பீ மீது பறந்த அமெரிக்க பயணிகள் விமானம் நடுவானில் வெடித்துச் சிதிறி 250க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்**

# வலையைக் கிழித்த கடாஃபி

அது ஒரு போயிங் 747 ரக விமானம்.

அமெரிக்க விமான நிறுவனத்திற்கு சொந்தமானது. ஜெர்மனி தலைநகர் பிராங்க்பர்ட்டிலிருந்து 1988-ஆம் ஆண்டு 21-ஆம் தேதி இந்த விமானம் புறப்பட்டது. நியூயார்க் செல்ல வேண்டிய அந்த விமானம் லண்டன் ஹீத்ரூ விமானநிலையத்தில் வந்திறங்கியது. அங்கு சில பயணிகளை ஏற்றியது. இந்த விமானத்தில் பயணிகள் யாரும் லக்கேஜ்களை தங்களுடன் எடுத்துச் செல்ல முடியாது. எல்லா லக்கேஜ்களும் விமானத்திற்குள் நேரடியாக ஏற்றப்படும்.

கிறிஸ்துமஸுக்கு இன்னும் 4 நாட்கள்தான் இருந்தன. ஹீத்ரு விமான நிலையத்திலிருந்து நேரடியாக நியூயார்க் நகரில்தான் இந்த விமானம் தரையிறங்கும் என்பதால் பயணிகள் அனைவரும் தங்களை தயார்படுத்திக் கொண்டார்கள்.

மாலை 6.25 மணிக்கு அந்த விமானம் புறப்பட்டது. விமானத்தில் 243 பயணிகளும், 16 விமானக் குழுவினரும்

படிப்பகம்

padippakam



இருந்தனர். இன்னும் 38 நிமிடங்கள்தான் உயிருடன் இருக்கப் போகிறோம் என்பதை அறியாத அவர்கள் பயணத்தைத் தொடங்கினார்கள்.

மாலை 6.56 மணிக்கு அந்த விமானம் 31 ஆயிரம் அடி உயரத்திற்கு எழும்பியது. ஸ்காட்லாந்து நகரமான லாக்கர்பீ மீது பறந்து கொண்டிருந்தது. 7.03 மணிக்கு திடீரென்று அந்த விமானம் வெடித்துச் சிதறியது. விமானத்தின் பாகங்கள் நகரின் குடியிருப்புப் பகுதி மீது விழுந்தன.

தீப்பிழம்புகளாக விழுந்த விமானத்தின் பாகங்கள் சில வீடுகளையும் சேதப்படுத்தின. நகரவாசிகள் 11 பேரும் இதில் உயிரிழந்தனர். பயணகளின் சிதறிய உடல்கள் நகரின் பல பகுதிகளில் வந்து விழுந்தன. விமானத்தின் மூக்குப் பகுதி பிரமாண்டமான மீன் போல லாக்கர்பீ வயல் ஒன்றில் விழுந்தது.

மொத்தத்தில் 50 சதுர கிலோமீட்டர் பரப்புக்கு அந்த விமானத்தின் பாகங்களும் பயணிகளின் உடல்களும் சிதறின. இந்த விபத்தில் 270 பேர் உயிரிழந்தனர்.

விமானம் அமெரிக்காவுக்கு சொந்தமானது. ஆனால், அதில் 21 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பயணித்தனர். இருந்தாலும் அமெரிக்காவுக்கு இது மிகப்பெரிய காயத்தை ஏற்படுத்தியது. 179 அமெரிக்கர்கள் உயிரிழந்ததால் மட்டும் இந்த காயம் ஏற்படவில்லை. அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பையே இது அசைத்திருந்தது. இது ஒருவகையான பயங்கரவாதம் என்றே அமெரிக்கர்கள் கருதினார்கள்.

லிபியா மீது அமெரிக்கா நடத்திய கொடூரமான விமான தாக்குதலுக்கு பழி தீர்க்கும் வகையில் இந்த விமானம் தகர்க்கப்பட்டு இருக்கலாம் என்று உடனடியாக செய்திகள் வெளியாகின.

அதைத் தொடர்ந்து, இன்னொரு யூகமும் செய்தியாக வெளியானது.

1988-ஆம் ஆண்டு ஈரான் நாட்டின் பயணிகள் விமானம் ஒன்று 1988-ல் அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் வீழ்த்தப் பட்டது. அந்தத் தாக்குதலில் 290 பயணிகள் உயிரிழந்தனர். அந்த விமானத்தை ஈரானின் எஃப்-14 போர் விமானம் என்று தவறாக கருதி தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா விளக்கம்

படிப்பகம்

padippakam





இஸ்லாமிய நாடுகளில் லிபியாவில் மட்டுமே பெண்களுக்கு ராணுவப் பயிற்சிக்காக அரசு தனியாக ஒரு நிறுவனத்தை உருவாக்கியது

அளித்தது. அந்தத் தாக்குதலுக்கு பரிகாரம் எதுவும் செய்ய வில்லை. உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடும் வழங்கவில்லை.

லாக்கர்பீ விமான விபத்துக்கு ஈரானும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று அந்த யூகச் செய்தி தெரிவித்தது.

லாக்கர்பீ விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கியது. 15 ஆயிரம் பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. 1 லட்சத்து 80 ஆயிரம் விமானத் துண்டுகள் ஆதாரங்களாக சேகரிக்கப்பட்டன. அவற்றை 40 நாடுகளில் ஆய்வு செய்தனர்.

அதன் முடிவில், விமானம் எப்படி தகர்க்கப்பட்டது என்பது தெளிவானது.

விமானத்தைத் தகர்க்கப் பயன்படுத்திய குண்டு பிளாஸ்டிக் கினால் செய்யப்பட்டு இருந்தது. அது குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும்படி டைமர் வைத்து செய்யப்பட்டிருந்தது. அது, தோஷிபா ரேடியோ மற்றும் ஆடியோ கேஸட் பிளேயரில் வைக்கப்பட்டு இருந்தது. பிரவுன்கலர் சாம்ஸோனைட் சூட்கேஸில் அந்த ரேடியோ இருந்தது.

ஆனால், இந்த ரேடியோ இருந்த சூட்கேஸை எப்படி, யார்

படிப்பகம்

padippakam



விமானத்துக்குள் வைத்தது என்ற விபரம் தெரியவில்லை.

இருந்தாலும், லாக்கர்பீ நகரிலிருந்து 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வனப்பகுதியில் தனது நாயுடன் ஒருவர் நடந்து சென்றபோது ஒரு முக்கியமான தடயம் சிக்கியது. அவர் ஒரு டி-ஷர்ட்டை கண்டுபிடித்தார். அதற்குள் டைமர் இருந்ததால் அது துண்டுகளாக சிதறி இருந்தது.

அந்த டி-ஷர்ட் யாருடையது, குண்டு வெடிக்கச் செய்த டைமரை செய்தவர் யார் என்று தேடத் தொடங்கினர். இறுதியில் விமானத்தில் குண்டு வைத்தது அப்துல்பாஸெட் அலி முகமது அல்-மெக்ராஹி, அல் அமின் கலிஃபா ஃபிமாஹ் என்ற இருவர் என்று விசாரணை அதிகாரிகள் அறிவித்தனர்.

அவர்கள் இருவரும் லிபியாவில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் அமெரிக்கா அல்லது பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் விசாரணை நடத்த ஒப்படைக்கும்படி இரு நாடுகளும் லிபியாவை வற்புறுத்தின. ஆனால், லிபியாவின் தலைவர் கடாஃபி இதற்கு சம்மதிக்கவில்லை.

கடாஃபியின் இந்தப் பிடிவாதத்தை பயன்படுத்தி அந்த நாட்டுக்கு சர்வதேச நெருக்கடியைத் தர அமெரிக்காவும் பிரிட்டனும் முடிவு செய்தன. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அவை புகார் செய்தன. லிபியாவை சம்மதிக்கச் செய்வதற்காக அந்த நாட்டின்மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது. தடை விதிக்கப்பட்டாலும் லிபியா அந்த இருவரையும் ஒப்படைக்க மறுத்தது.

நீண்ட இழுபறிக்குப் பிறகு நெல்ஸன் மண்டேலா உள்ளிட்ட ஆப்பிரிக்க தலைவர்கள் மத்தியஸ்தம் செய்தனர். லிபியாவின் எண்ணெய் வளம் தேவைப்படும் நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தடையை நீக்க மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தின. தடையை மீறி அந்த நாட்டுக்கு விமான சேவையையும் தொடங்கப் போவதாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் அறிவித்தன.

இதையடுத்து, அந்த இருவரையும், சர்வதேச நீதிமன்றத்தில் சர்வதேச நீதிபதிகளிடம் ஒப்படைக்க லிபியா சம்மதித்தது. ஆனால், அமெரிக்காவும் பிரிட்டனும் இதை ஒப்புக்கொள்ள வில்லை. மீண்டும் இழுபறி நீடித்தது. 1998-ஆம் ஆண்டு

padippakam





எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குடன் 90களில் கடாஃபி

அமெரிக்காவும் பிரிட்டனும் வேறு ஒரு சமரசத் திட்டத்தை முன்வைத்தன.

சர்வதேச நீதிமன்றத்தில் ஸ்காட்லாந்து நீதிபதிகளைக் கொண்டு அந்த இருவரையும் விசாரிக்கலாம் என்று அவை தெரிவித்தன. ஒருவழியாக 1999-ஆம் ஆண்டு இந்த திட்டத்துக்கு லிபியா ஒப்புக் கொண்டது.

இருவர் மீதும் விசாரணை தொடங்கியது. ஆனால், அவர்களுக்கு எதிரான ஆதாரங்களில் ஏராளமான ஓட்டைகள் இருந்தன. இருவரையும் குற்றவாளிகள் என்று சொல்வதற்கு திட்டவட்டமான ஆதாரம் எதுவும் இல்லை. இருந்தாலும், மெக்ராஹியை குற்றவாளி என்று 2001-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதி சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவருக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டது. ஃபிமாஹ் விடுதலை செய்யப்பட்டார்.

2009-ஆம் ஆண்டு மெக்ராஹிக்கு புற்றுநோய் இருப்பதை அறிந்த நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. அவர் லிபியா திரும்பி தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து மரணமடைந்தார்.

லாக்கர்பீ விமான விபத்து நிகழ்ந்த அந்த நாளில் இருந்து

படிப்பகம்

padippakam



விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியான நாள்வரை லிபியா அனுபவித்த துன்பங்கள் அளவிட முடியாதவை.

அமெரிக்காவும் பிரிட்டனும் நிர்பந்தம் செய்ததால் விதிக்கப்பட்ட ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தடையை சமாளிக்க கடாஃபி மேற்கொண்ட முயற்சிகளுக்கு அளவே இல்லை. தனது கனவுத் திட்டமான செயற்கை நதித் திட்டத்தை அவர் கைவிட விரும்பவில்லை. தடைகளால் ஏற்பட்ட இழப்பை சரிக்கட்ட அவர் வட ஆப்பிரிக்க நாடுகளை இணைத்து அராபிய மேக்ரெப் என்ற கூட்டமைப்பை உருவாக்க முயன்றார். இது வட ஆப்பிரிக்க நாடுகளுடனான பொருளாதார உறவை மேம்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டது.

1969-ஆம் ஆண்டு புரட்சிக்கு பிறகு அவர் பல்வேறு அரேபிய கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொண்டார். அத்தனையும் அமெரிக்க தலையீட்டால் தோல்வி அடைந்தது. இஸ்ரேலுக்கு எதிராக கடாஃபி மேற்கொண்ட கூட்டமைப்பு முயற்சிகளுக்கு அரேபிய நாடுகளே ஒத்துழைப்பு தரவில்லை.

தனது பக்கத்து நாடான சாட் மீது கடாஃபி மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் காரணமாக ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பை பகைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால், 1997-ல் கடாஃபி அந்த அமைப்பின் தலைவர்களுடன் இணக்கமான உறவைப் புதுப்பித்தார்.

"ஐ.நா. தடைகளை நீக்குவதற்கு ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் முயற்சி செய்யவேண்டும்" என்று கடாஃபி வேண்டுகோள் விடுத்தார். அதைத் தொடர்ந்து, ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலின் தடைகள் லிபியாவின் பக்கத்து நாடுகளைச் சேர்ந்த ஆப்பிரிக்கர்களை கடுமையாக பாதிக்கின்றன. லிபியர்களை மிகவும் பாதிக்கின்றன. எனவே, தடைகளை நீக்க வேண்டும்"

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, 1997-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நெல்சன் மண்டேலா லிபியா தலைநகர் திரிபோலிக்கு பயணம் மேற்கொண்டார். இந்தச் சமயத்தில்தான் லாக்கர்பீ

படிப்பகம்

padippakam





பிரான்ஸ் ஜனாதிபதி ஜாக்கஸ் சிராக்குடன் கடாஃபி

குண்டுவெடிப்பில் தொடர்புடையதாக குற்றம்சாட்டப்பட்ட இருவரை சர்வதேச நீதிமன்றத்தில் சர்வதேச நீதிபதிகளின் முன்னிலையில் விசாரணைக்கு ஒப்படைக்கும் வகையில் ஒரு சமரசத் திட்டம் வெளியிடப்பட்டது.

இதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் மறுப்பு தெரிவித்தன. அதேசமயம், வடக்கு ஆப்பிரிக்காவில் வறுமையில் வாடும் சுமார் 20 லட்சம் ஆப்பிரிக்கர்கள் லிபியாவில் குடியேற கடாஃபி அரசு அனுமதி அளித்தது. அவர்களுக்காக தனது எல்லையைத் திறந்துவிட்டது. அதாவது, ஆப்பிரிக்க மக்களை ஐ.நா. தடைகளை மீறும்படி செய்தது.


ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று அமெரிக்கா உருவாக்கியதைப்போல ஆப்பிரிக்க ஐக்கிய நாடுகள் என்ற கூட்டமைப்பை உருவாக்கலாம். லிபியாவின் வளங்களை ஆப்பிரிக்கா முழுமையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற யோசனையை கடாஃபி முன்மொழிந்தார்.

இதைத் தொடர்ந்து, 1998-ஆம் ஆண்டு ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு மாநாட்டில் ஐ.நா.தடைகளை நீக்க மறுத்தால் ஆப்பிரிக்க நாடுகள் அந்தத் தடைகளை மீறப்போவதாக தீர்மானம் நிறைவேற்றின. எண்ணெய்க்கு உணவுத் திட்டத்தின்

படிப்பகம்

padippakam





அடிப்படையில் லிபியாவுக்கு இந்தியாவும் உணவுப் பொருட்களை அனுப்பியது. ஐ.நா.தடைகளை நீக்குவதற்கு முன்னரே ஆப்பிரிக்க நாடுகள் தடைகளை மீறி லிபியாவுக்கு உதவிகளை செய்யத் தொடங்கிவிட்டன.

தங்களுடைய பிடிவாதம் கடாஃபிக்கு ஆதரவாக ஆப்பிரிக்க நாடுகளைத் திருப்பத் தொடங்கியதை அறிந்த அமெரிக்காவும் பிரிட்டனும் புதிய சமரசத் திட்டத்தை அறிவித்தன. தி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் ஸ்காட்லாந்து நீதிபதிகள் முன்னிலையில் லாக்கர்பீ விமான விபத்து விசாரணையை நடத்த அவை ஒப்புக் கொண்டன.

ஒருவழியாக பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. லிபியாவுக்கு எதிராக ஐ.நா.பிறப்பித்த தடைகள் நீக்கப்பட்டன. மீண்டும் லிபியா சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பை பெறத் தொடங்கியது. அதேசமயம், அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் லிபியாவுக்கு எதிரானத் தடைகளை விலக்கவில்லை.

2000-ஆம் ஆவது ஆண்டு ஜூலை மாதம் 30 ஆப்பிரிக்க நாடுகள் ஒரே கூட்டமைப்பாக செயல்பட ஒப்புக் கொண்டன. கடாஃபியின் முயற்சி வெற்றிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது.

2001-ஆம் ஆண்டு லாக்கர்பீ விமான விபத்து வழக்கில்

padippakam



மெக்ரஹிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு 2 ஆயிரத்து 700 கோடி டாலர் அளவுக்கு லிபியா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

அமெரிக்காவுக்கு இது பெரிய வெற்றி என்று சொல்ல முடியாது. ஏனெனில் குற்றம்சாட்டப்பட்ட இருவரில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஐ.நா.வை ஆப்பிரிக்க நாடுகள் நிர்ப்பந்தம் செய்து அமெரிக்காவைப் பணிய வைத்தன. லிபியா மீண்டும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணித்தது. அந்த நாட்டில் மீண்டும் வெளிநாட்டு முதலீடுகள் குவியத் தொடங்கின. துன்பங்கள் நீங்கின. கடாஃபிக்கு இது மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது.

லாக்கர்பீ குண்டுவெடிப்பில் லிபியாவுக்கு தொடர்பு இல்லை. அந்த விபத்துக்கு ஈரான் அல்லது பாலஸ்தீன விடுதலை அமைப்புதான் காரணம் என்ற கருத்து பரவலாக இருந்தது. ஆனால், லிபியாவை அமெரிக்கா பழிதீர்த்தது. கடாஃபிக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்த அது போட்ட திட்டம் நிறைவேறியது. ஆனால், சர்வதேச தடைகள் மூலம் லிபிய மக்களை கடாஃபிக்கு எதிராக திருப்பி விடும் அதன் திட்டம் தோல்வியடைந்தது.

அந்தவகையில் அமெரிக்காவின் வலையை அறுத்து லிபியாவை விடுவித்தார் கடாஃபி. இந்த விவகாரத்தில் ஆப்பிரிக்காவில் கடாஃபியை மிகப்பெரிய ஹீரோவாக உருவாக்கவே அமெரிக்காவின் சதிகள் உதவின. இது அமெரிக்காவுக்கு மறக்க முடியாத அடியாக இருந்தது.

படிப்பகம்

padippakam





படிப்பகம்

padippakam





ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தடையை தகர்க்க தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்ஸன் மண்டேலா கடாஃபிக்கு உதவினார்

# வேதனைகளைச் சாதனைகளாய்...!

**லி**பியாவின் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றிய ஆண்டு முதல் 34 ஆண்டுகள் மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து நெருக்கடிகள் கொடுத்தன.

22 ஆண்டுகள் லிபியா மீது அமெரிக்கா கடுமையான பொருளாதார தடைகளை விதித்தது.

போதாக்குறைக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தனது பங்கிற்கு 11 ஆண்டுகள் பொருளாதார தடைகளை சுமத்தியது.

ஒரு நாட்டை இதற்கு மேல் தனிமைப்படுத்த முடியாது. அந்த அளவுக்கு லிபியா துன்பங்களை அனுபவித்தது. மேற்கத்திய நாடுகளின் தடைகளைக் கூட லிபியா சமாளித்து விட்டது. ஆனால், சர்வதேச நாடுகளின் எந்தவிதமான ஒத்துழைப்பும் இல்லாமல் லிபியா அனுபவித்த கஷ்டங்கள் வார்த்தைகளில் விவரிக்க முடியாதவை.

ஆனாலும் கடாஃபி தனது நாட்டின் கௌரவத்தை விட்டுக்

படிப்பகம்

padippakam



கொடுக்காமல் தாக்குப்பிடித்தார். அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து தீட்டிய சதித்திட்டங்களை சமாளிக்க ஆப்பிரிக்க நாடுகளை அணி சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். லிபிய மக்கள் வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் சிரமத்தில் வாடினார்கள். அவர்களுடைய கஷ்டத்தை ஆப்பிரிக்க நாடுகள் உணரும்படி செய்தார்.

லிபியாவின் எண்ணெய் வளம் முழுவதையும் அந்த நாட்டு மக்களே முழுமையாக அனுபவிக்கும் வகையில் கடாஃபி திட்டமிட்டுச் செயல்பட்டார். ஆப்பிரிக்க நாடுகளை ஒருங்கிணைத்து ஐக்கிய ஆப்பிரிக்க நாடுகள் என்ற விரிவான அமைப்பை உருவாக்கும் முயற்சியில் கடாஃபி முன்னேறினார். இதன்மூலம் அமெரிக்காவையும் மேற்கத்திய நாடுகளையும் அதிர வைத்தார்.

ஆப்பிரிக்க நாடுகளின் வளங்களை ஆப்பிரிக்க மக்கள் பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்த அமைப்பின் நோக்கத்தை கடாஃபி வடிவமைத்தார். ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் லிபியா மற்றும் இதர ஆப்பிரிக்க நாடுகளின் எண்ணெய் வளத்தை அமைதியான வழியில் பயன்படுத்த விரும்பினார்கள். அவர்களை அந்த அளவுக்கு கடாஃபி சமரசம் செய்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாகத்தான் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தடைகளை மீறி லிபியாவுக்கு மனிதாபிமான உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்க முன்வந்தன. ஐ.நா. அமைப்பே தகர்ந்துவிடும் அபாயம் உருவானது. இரண்டு நாடுகளின் விருப்பத்துக்காக ஒரு நாட்டையும் அதன் மக்களையும் அழித்தொழிக்கும் வகையில் ஐ.நா. செயல்படுவதை உலக நாடுகள் கடுமையாக எதிர்த்ததை அப்போது பார்க்க முடிந்தது.

கடாஃபியின் இந்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தினார். இதன் விளைவாகத்தான் லாக்கர்பீ விமான விபத்து விவகாரத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்தின.

அந்த விபத்தின் குற்றம் சுமத்தப்பட்ட இருவரை லிபியா சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைத்தது.

அந்த வழக்கு முடிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு

படிப்பகம்

padippakam





**லாக்கர்பீ விமான விபத்து விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பிறகு மேற்கத்திய நாடுகளுடன் சுமுகமான உறவை விரும்பினார் கடாஃபி. பிரிட்டிஷ் பிரதமராக இருந்த டோனி பிளேர் லிபியா வந்தார்**

இழப்பீடையும் நீதிமன்ற உத்தரவுப்படி லிபியா வழங்கியது. இதைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தடைகள் விலக்கப்பட்டன.

2001-ஆம் ஆண்டு லிபியா நிம்மதி பெருமூச்சு விட்டது. அதே ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்கா மீது அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானத் தாக்குதல் நடத்தினார்கள். உலகை உலுக்கிய அந்த தாக்குதலை கடாஃபி கண்டித்தார். பயங்கரவாதத்துக்கு ஆதரவான நாடு என்று அமெரிக்கா முத்திரை குத்தியிருந்தது. அந்நிலையில் கடாஃபி கண்டனம் வெளியிட்டது சர்வதேச அளவில் லிபியாவின் மதிப்பை உயர்த்த உதவியது.

2002-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆப்பிரிக்க யூனியன் உருவானது. ஐரோப்பிய நாடுகள் இணைந்து உருவாக்கிய ஐரோப்பிய யூனியன் என்ற அமைப்பைப்போல ஆப்பிரிக்க யூனியன் உருவானது. இதை உருவாக்குவதில் கடாஃபி

படிப்பகம்

padippakam



முக்கியமான பங்காற்றினார். இதேபோல மத்திய கிழக்கு ஐக்கிய நாடுகள் என்ற அமைப்பும் உருவாக வேண்டும் என்று கடாஃபி விருப்பம் தெரிவித்தார்.

இந்த காலகட்டத்தில் இராக்கிற்கு எதிராக அமெரிக்கா கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்தது. பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாக இராக் மீது அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் தொடர்ந்து புகார் கூறிவந்தன. சதாம் உசேனை ஒழிக்க வேண்டும் என்பதில் அந்த நாடுகள் உறுதியாக இருந்தன. இராக் மீது போர் தொடுக்க வேண்டும் என்று ஐ.நா.வை அவை வற்புறுத்தி வந்தன.

ஆனால், ஐ.நா.வின் முழு ஆதரவு கிடைக்கவில்லை. இத்தகைய நிலையில் 2002-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஐ.நா. மனித உரிமை கமிஷன் கூட்டத்திற்கு தலைமை ஏற்க லிபியா தேர்வு செய்யப்பட்டது. கடாஃபி கூட்டத்துக்கு தலைமை ஏற்று பேசினார். அப்போது அமெரிக்காவின் சிறைத்துறை அமைப்பை அவர் கடுமையாக தாக்கிப் பேசினார். ஆப்பிரிக்க யூனியன் சார்பில் கடாஃபிக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. இதுவும் அமெரிக்காவின் விருப்பத்திற்கு மாறாகவே நடந்தது.

ஐ.நா. தடைகள் நீக்கப்பட்ட போதும் தொடர்ந்து லிபியா மீது அமெரிக்காவின் தடைகள் நீடித்தன. லிபியாவை பயங்கரவாத ஆதரவு நாடு என்ற பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்கவில்லை.

2003-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-ஆம் தேதி இராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்குதலை தொடங்கின. ஐ.நா. சபையின் சம்மதம் இல்லாமல் இந்தத் தாக்குதல் தொடங்கப்பட்டது. உலகநாடுகளின் எதிர்ப்பை மீறி இராக்கின் எண்ணெய் வளத்தை கபளீகரம் செய்வதற்காகத்தான் இந்த போர் தொடுக்கப்பட்டது.

இராக் வெகு விரைவில் வீழ்ந்துவிட்டது. அங்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் படைகள் குவிக்கப்பட்டன. பொம்மை அரசு உருவாக்கப்பட்டது. அமைதியாக இருந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாக கூறி அப்பாவி மக்களை கொன்று குவித்தன.

இந்நிலையில் 2003-ஆம் ஆண்டு ஜூன் மாதம் லிபியாவை புதிய பாதையில் கடாஃபி திசைத் திருப்பினார். கடாஃபியின்

படிப்பகம்

padippakam





கடாஃபியுடன், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கண்டோலிஸா ரைஸ்

விருப்பப்படி புதிய பிரதமராக டாக்டர் சுக்ரி கானெம் தேர்ந்தெடுக்கப்பட்டார். லிபியாவின் வர்த்தகம் மற்றும் பொருளாதார துறை அமைச்சராக செயல்பட்டிருந்த இவரது நியமனம் லிபியாவை வளர்ச்சிப் பாதையில் திருப்ப உதவியது.

பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாக இராக் மீது குற்றம் சுமத்திய அதே காலகட்டத்தில், லிபியா மீதும் அத்தகைய குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்தியது.

ராப்டா என்ற இடத்தில் பூமிக்கு அடியில் ரசாயன ஆயுதங்களை தயாரிக்கும் ஆய்வுக்கூடத்தை லிபியா உருவாக்கி இருக்கிறது. அணு ஏவுகணைகளை தயாரிப்பதற்காக லிபியா தொழில்நுட்ப உதவிகளை பெற்று வருகிறது என்றெல்லாம் அமெரிக்காவும் பிரிட்டனும் 1999 முதல் குற்றம் சுமத்தி வந்தன.

இராக் மீது போர்தொடுத்து அந்த நாட்டை நாசப்படுத்திய நிகழ்வுக்கு பிறகு லிபியாவின் நிலையில் பெரும் அளவு மாற்றம் ஏற்பட்டது. எந்தவிதமான தார்மீக நெறிகளுக்கும் அமெரிக்கா கட்டுப்படாது என்பதை இராக் யுத்தம் வெளிப்படுத்தி விட்டது. உலகநாடுகள் ஆதரவு இருந்தாலும் அமெரிக்கா நினைத்தால் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தவிர்க்க முடியாது என்று கடாஃபி உணர்ந்தார்.

படிப்பகம்

padippakam



எனவே, பேரழிவு ஆயுதங்களை அழிக்க முன் வருவதாக லிபியா அறிவித்தது. தனது நாட்டில் பேரழிவு ஆயுதங்களை சோதனை செய்வதற்கு ஐ.நா. ஆய்வுக்குழுவை அனுமதிக்க ஒப்புக் கொண்டது.

ஆயுத உற்பத்திகளை நிறுத்துவதாகவும் தன்னிடம் உள்ள பேரழிவு ஆயுதங்களை ஐ.நா. ஆய்வுக்குழுவிடம் ஒப்படைப்பதாகவும் லிபியா அறிவித்தது. 300 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை மட்டும் வைத்துக்கொள்ள லிபியாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதாவது லிபியாவால் இஸ்ரேல் மீது கூட ஏவுகணை தாக்குதல் நடத்த முடியாது.

லிபியாவில் தங்கி செயல்பட்ட அல்கொய்தா தீவிரவாதிகள் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகளை லிபியாவிலிருந்து வெளியேறும்படி பிரதமர் சுக்ரி உத்தரவிட்டார்.

மேற்கத்திய நாடுகளுடன் வெளிப்படையான உறவுகளை வைத்துக்கொள்ள இந்த நடவடிக்கைகள் உதவியாக இருந்தன.

2004-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமெரிக்காவின் போக்கில் சிறியமாற்றம் ஏற்பட்டது. லிபியாவுக்கு அமெரிக்கர்கள் பயணம் செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. அமெரிக்க நாடாளுமன்ற குழு லிபியா தலைநகர் திரிபோலிக்கு மார்ச் மாதம் வந்தது. அல்கொய்தாவுக்கு எதிராக லிபியா மேற்கொண்ட நடவடிக்கைக்கு இது பரிசு என்று அறிவிக்கப்பட்டது.

2004-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதி பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர் பயணம் செய்தார். கடாஃபியை அவருடைய பாலைவன ஓய்வுக்குடிலில் சந்தித்து கை குலுக்கினார். இது நீண்ட இடைவேளைக்கு பிறகு நடைபெற்ற முக்கியமான திருப்பமாக கருதப்பட்டது.

லிபியாவில் மேற்கத்திய நாடுகளின் முதலீடுகள் அதிகரித்தன. அந்த நாட்டின் எண்ணெய் உற்பத்தி மீண்டும் சுமுக நிலைக்கு திரும்பிக் கொண்டிருந்தது. ஐரோப்பிய யூனியனின் மாநாட்டின் பங்கேற்க கடாஃபிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. லிபியாவுடன் தூதரக உறவை மீண்டும் ஏற்படுத்த அமெரிக்கா விருப்பம் தெரிவித்தது.

படிப்பகம்

padippakam





**இத்தாலியில் நடைபெற்ற ஜி-8 மாநாட்டிற்கு வந்த ஒபாமா கடாஃபியுடன் கைகுலுக்கினார்**

மிகக் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தனது கனவுத் திட்டமான செயற்கை நதித் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார். 1989-ஆம் ஆண்டு அதாவது லாக்கர்பீ விமான விபத்து நிகழ்ந்த அடுத்த ஆண்டு அந்த திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்கள் நிறைவடைந்தன. 1997-ஆம் ஆண்டு அமெரிக்க பொருளாதார தடை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தடைகள் என்று எல்லாத் தடைகளையும் மீறி மூன்றாவது கட்டம் நிறைவேறியது.

கடாஃபியின் தலைமைப் பண்புக்கு இந்தத் திட்டங்கள் சாட்சிகளாக இருக்கின்றன. லிபியாவின் எண்ணெய் வளம் முழுவதையும் அந்த நாட்டு மக்களுடைய நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தினார். தடைகள் விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் ஐரோப்பாவுடன் லிபியா துண்டிக்கப்பட்டது. லிபிய மாணவர்கள் படிப்பதற்காக கூட ஐரோப்பா செல்ல முடியவில்லை. அமெரிக்கா செல்வது என்பது கனவாகி விட்டது.

இதையெல்லாம் சமாளித்து லிபியா இப்போது சர்வதேச நாடுகளுடன் சுமுகமான உறவை ஏற்படுத்தி கொண்டது.

ஆனால், பிரதமர் சுக்ரி புதிய திட்டம் ஒன்றை முன் வைத்தார்.

படிப்பகம்

padippakam



லிபியாவை பல கட்சி ஆட்சிமுறைக்கு மாற்றும் வகையில் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க விரும்பினார். அரசாங்க பொறுப்பில் இல்லாவிட்டாலும் கடாஃபி சொல்வதுதான் லிபியாவின் வேத வாக்காக கருதப்பட்டது. பல கட்சி ஆட்சிமுறை என்பது லிபியாவின் முன்னேற்றத்துக்கு இடையூறாக அமையும். அரசியல் குழப்பங்கள் முன்னேற்றத்தை திசை திருப்பிவிடும் என்று கடாஃபி நினைத்தார்.

அவருடன் புரட்சியில் பங்கேற்ற நண்பர்களும் அவருடைய கருத்தை ஆதரித்தனர். எனவே, பிரதமர் பொறுப்பிலிருந்து சுக்ரி நீக்கப்பட்டார். அவருக்கு பதிலாக அல்-பக்தாதி அலி அல்-மஹ்மூதி என்பவரை புதிய பிரதமராக நியமித்தார்.

லிபியாவின் பொருளாதார நிலை வேகமாக வளர்ச்சி அடைந்தது. அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களும் ஐரோப்பிய எண்ணெய் நிறுவனங்களும் முதலீடுகளை அதிகரித்தன. எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி பலமடங்கு அதிகரித்தது.

2007-ஆம் ஆண்டு மாபெரும் செயற்கை நதித் திட்டத்தின் நான்காவது கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது. இந்த திட்டத்தின் மூலம் லிபியா முழுவதும் அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்பட்டது. லிபியாவின் வடக்கு பகுதியில் 5 பிரமாண்டமான செயற்கை ஏரிகள் கட்டப்பட்டன. அவற்றில் சஹாரா பலைவனத்தில் அடியிலிருந்து பிரமாண்டமான குழாய்கள் மூலம் இந்த ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது.

நான்காவது கட்டம் நிறைவேறிய நாளில் கடாஃபி தனது அடுத்த திட்டத்தை அறிவித்தார்.

“சஹாரா பாலைவனத்தின் அடியில் உள்ள நன்னீர் கடலைப் பயன்படுத்துவோம். அந்தத் தண்ணீரால் சஹாரா பாலைவனத்தை விளைநிலங்கள் ஆக்குவோம். படிப்படியாக லிபியாவின் பச்சைக் கொடிபோல் சஹாரா பாலைவனத்தைப் பசுமையாக்குவோம்”

கடாஃபியின் இந்த அறிவிப்பு லிபிய மக்கள் மத்தியில் பெரும் ஆதரவை உருவாக்கியது. அவர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆனால், இது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி

படிப்பகம்

padippakam



நாடுகளுக்கு ஆனந்தம் அளிக்கவில்லை.

உலக வங்கியிடம் கடன் பெறாமல், எந்த நாட்டிடமும் கடன் பெறாமல் லிபியா உபரி வருமானத்தை சேமிக்கிறது. உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்ட எல்லா வசதிகளும் லிபியர்களுக்கு இலவசமாக கிடைக்கிறது. பாலைவனத்தை பசுமையாக்கும் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டால்?

முதலாளித்துவ நாடுகள் தங்களை மிஞ்சி ஒரு நாடு உருவாவதை எப்போதுமே விரும்புவதில்லை. தடை விதித்து ஒழிக்க முடியாத லிபியாவை உறவாடி ஒழிக்கத் திட்டம் வகுத்தன. லிபியாவுக்குள் நுழைந்து விட்டன. சிஐஏ கடாஃபியை தூக்கியெறிய சதிகளை வகுக்கத் தொடங்கியது.

இந்த நிலையில் லிபிய புரட்சியின் 39-ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. "லிபியாவில் வெளியுறவு, ராணுவம், நீதித்துறை, உள்துறை ஆகிய நான்கு அமைச்சரகங்கள் மட்டுமே செயல்படும். மற்ற அமைச்சரகங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுகின்றன" என்று கடாஃபி அறிவித்தார்.

எண்ணெய் உற்பத்தி மூலம் கிடைக்கும் அனைத்து வருமானமும் மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். ஆப்பிரிக்காவில் அங்கோலா, நைஜீரியா ஆகிய நாடுகளுக்குப் பிறகு எண்ணெய் உற்பத்தியில் மிகப்பெரிய நாடாக லிபியா மாறியிருந்தது.

"லிபிய மக்களின் ஒரே சொத்து எண்ணெய் வருமானம்தான். அதை அந்த மக்களுக்கே நேரடியாக பிரித்து அளிக்கும் விசயத்தில் வேறு பேச்சுக்கே இடம்மில்லை" என்று பிரதமர் மஹ்மூதியிடம் கடாஃபி உறுதியாக தெரிவித்து விட்டார்.

படிப்பகம்

padippakam






லிபிய அரசாங்கத்தில் கடாஃபிக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. கடைசிவரை கர்னல் கடாஃபி என்றே அழைக்க விரும்பினார். ஆனால், அரசாங்கம் அவருடைய யோசனைப்படியே இயங்கியது

படிப்பகம்

padippakam





கடாஃபியின் குதிரைச் சவாரி

# அமெரிக்கா 'உருவாக்கிய' எழுச்சி!

**வி**யட்னாமில் ஹோ-சி-மின், கியூபாவில் காஸ்ட்ரோ.

இருவருமே மாபெரும் தலைவர்கள். அமெரிக்காவை ஆட்டிப் படைத்து, பின்னங்கால் பிடறியில் இடிபட அமெரிக்காவை ஓட வைத்தவர் ஹோ-சி-மின். அமெரிக்காவின் மிக அருகில் இருந்து கொண்டு இன்னமும் அந்த நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவர் பிடல் காஸ்ட்ரோ.

இருவருமே அரசியல் ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் மக்களை புரட்சிக்காக தயார்படுத்தியவர்கள். நாடு மக்களுக்குரியது. நாட்டின் வளங்கள் மக்களுக்குரியவை என்ற சிந்தனையை வளர்த்தவர்கள்.

அந்த வகையில்தான் கடாஃபி லிபிய மக்களைத் தயார்படுத்தினார். புரட்சிக்கு முன் அவர் முன்வைத்த விவாதங்கள் அவரை தலைவராக ஏற்கும்படி செய்தன. அவருக்கு எத்தனையோ மூத்த ராணுவ அதிகாரிகள் அவருக்கு ஒத்துழைப்பு அளித்தனர். ஆனால், அவர்களையும் மீறி

படிப்பகம்

padippakam



சாதாரண லெப்டினண்ட் கர்னல் ஆக இருந்த அவர் லிபியாவின் புரட்சிகர குழுவின் தலைவராக தன்னை ஏற்கும்படி செய்தார்.

எகிப்து அதிபர் நாசரை தனது வழிகாட்டியாக கொண்டிருந்தார். மேற்கத்திய நாடுகளை அவர் நம்பவில்லை. சோவியத் யூனியனை அவர் நம்பினார். வியட்னாமுக்கு அவர் ஆதரவளித்தார். கியூபாவுடன் அவர் நல்லுறவு வைத்திருந்தார். ஆனால், லிபியாவைப் பொருத்தமட்டில் அவர் நாசரின் வழியை மட்டுமே பின்பற்றினார். ஆனால், அவரைவிட மிகத் தெளிவாக இருந்தார்.

கடாஃபி மேற்கத்திய நாடுகளின் ஆக்கிரமிப்பு மனப்பாண்மைக்கு எதிராகவே வளர்ந்தார். லிபியாவை மேற்கத்திய நாடுகளை பகைத்துக் கொண்டே வளர்த்தார். மக்களோடு மக்களாக இருக்கவே விரும்பினார். லிபியாவில் தனக்கென தனிப் பதவி எதையும் அவர் உருவாக்கவில்லை. கடைசிவரை 'கர்னல் கடாஃபி' என்றே தன்னை அழைக்கும்படி விரும்பினார்.

அதேசமயம் லிபிய அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கை களும் தனது விருப்பப்படியே இருக்கும்படி பார்த்துக் கொண்டார். அவர் மக்களுக்காக சிந்திக்கும் வேலையை மட்டும் சரியாக செய்தார்.

அதிகாரம் வேறு இடத்தில் மையம் கொள்ளும்படி அவர் விட்டுக் கொடுக்கவில்லை. அமெரிக்கா விரும்பியது லிபியாவில் ஜனநாயகம். அமெரிக்கா விரும்பும் ஜனநாயகம் என்ன?

பல கட்சி ஆட்சிமுறை.

ஒரு நாட்டின் மக்கள் தங்களுக்குள் பல கட்சிகளாக பிரிந்து கிடக்க வேண்டும். அங்கு அமையும் அரசாங்கம் எதிர்க்கட்சி களை சமாளிப்பதிலேயே காலம் கடத்த வேண்டும். ஆளும் அரசாங்கத்தின் எந்தவொரு நல்ல திட்டமானாலும் அதை எதிர்க்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சிகள் மாற வேண்டும். தங்கள் இஷ்டப்படி நிதியுதவி அளித்து அரசுக்கு எதிரானப் போராட்டங்களை வளர்முக நாடுகளுக்கு எதிராக நடத்த புதிய சக்திகளை உருவாக்க வேண்டும்.

படிப்பகம்

padippakam





மூத்த ராணுவ அதிகாரிகளும் இளைஞரான கடாஃபியை விரும்பினர்

இதுதான் அமெரிக்கா.

தொலைதூரத்தில் இருந்த சோவியத் யூனியனை அமெரிக்கா சிதறடித்தது. இரும்புத் திரை நாடு என்று அழைக்கப்பட்ட சோவியத் யூனியன் கோர்ப்பசேவ் என்ற ஜனாதிபதியை ஏற்றபோது, அமெரிக்காவுக்கு கதவைத் திறந்தது. அடுத்த சில ஆண்டுகளில் சோவியத் யூனியன் சிதைந்தது. தனக்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றத்துக்கு உதவிய சோவியத் யூனியன் சிதறடிக்கப்பட்டது.

உலகின் எந்தவொரு நாட்டிலும் ஆளும் கட்சிக்கோ, ஆள்பவருக்கோ எதிரான மக்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால், ஆள்பவர்கள் யார் என்பதை முதலாளிகள்தான் தீர்மானிப்பார்கள். முதலாளிகளுக்கு எதிரான அரசுகள் நீண்டநாட்கள் நீடித்ததாய் வரலாறு இல்லை.

முதலாளிகள் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும். அல்லது முதலாளிகள் நுழையமுடியாத நிலையை உருவாக்க வேண்டும். முதலாளிகளுக்கு சிறிது இடம் கொடுத்து விட்டாலும் அவர்கள் அந்த அரசாங்கத்தை தங்கள் பிடியில் கொண்டுவந்து விடுவார்கள். அல்லது தங்களுக்குப் பிடித்த அரசாங்கத்தை உருவாக்கி விடுவார்கள்.

படிப்பகம்

padippakam



சோவியத் யூனியன் உருவாவதற்கு முன்பு ஏகாதிபத்திய அரசாங்கங்கள் உலகநாடுகளை ஆட்டிப்படைத்தன. பிரிட்டன் தனது மேலாதிக்கத்தை உலகம் முழுவதும் திணித்து வந்தது. பிரிட்டனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் உலகம் முழுவதும் பூர்வ குடிகளை மிரட்டி அடிமைப்படுத்தின. அடிமைப்படுத்திய நாடுகளின் வளங்களையும் அந்த நாடுகளில் வசித்த மக்களுடைய உழைப்பையும் சுரண்டி தங்கள் சொந்த நாடுகளை வளம் கொழிக்கச் செய்தன.

அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்த பிறகு ஐரோப்பிய நாடுகள் நடத்திய அட்டூழியங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. வடஅமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் உருவாகி தழைத்திருந்த உலகின் மிகப்பெரிய நாகரிகங்களை ஐரோப்பியர்கள் அழித்தார்கள். அந்த நாகரிகங்களுக்கு சொந்தமான பூர்வ குடிமக்களை விலங்குகளைப்போல கொன்றுக் குவித்தார்கள்.

அந்த மக்கள் சேர்த்து வைத்திருந்த தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்களை ஐரோப்பாவுக்கு அள்ளிச் சென்றனர். பூர்வ குடிமக்களை அடிமைகளாக்கி உணவுகூட தராமல் சாகும்வரை வேலை வாங்கினார்கள். உழைத்து ஓடாய் தேய்ந்தவர்களை வெட்டவெளியில் சாகும்படி விட்டார்கள்.

ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து அமெரிக்க குடியேற்ற நாடுகள் விடுதலைப் பெற்றன. அதன் பிறகு வட அமெரிக்காவில் உருவான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்காவில் அமைந்த சுதந்திர அரசுகளை தனது இஷ்டப்படி ஆட்டுவித்து வந்தது.

சோவியத் யூனியன் உருவான பிறகு அமெரிக்கா ஆட்டுவித்து வந்த நாடுகளில் புரட்சி மனப்பான்மை மேலோங்கியது. விடுதலை வேட்கை கொண்ட மக்களுக்கு சோவியத் யூனியன் பக்கபலமாக இருந்தது.

1991-ஆம் ஆண்டு வரை மூன்றாம் உலகநாடுகளுக்கு சோவியத் யூனியன் பாதுகாப்பு அரணாக இருந்தது. தென் அமெரிக்காவிலும், மத்திய அமெரிக்காவிலும், ஆசியாவிலும் பல புரட்சிகர அரசாங்கங்கள் உருவாகின. அந்த நாடுகளில் இருந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு கிடைத்து வந்த வளங்கள் தடைப்பட்டன. வெனிசூலா நாட்டின் எண்ணெய்

படிப்பகம்

padippakam





வெனிசூலா ஜனாதிபதி சாவேஸுடன் கடாஃபி.

வளத்தை அமெரிக்கா முழுமையாக சுரண்டிக் கொண்டிருந்தது. ஆனால், அங்கு சாவேஸ் தலைமையில் சோசலிஸ்ட் அரசு அமைந்த பிறகு எண்ணெய் நிறுவனங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

அதன்விளைவாக, தனது எண்ணெய் தேவைகளுக்கு புதிய வழிகளைத் தேடியது. இராக் யுத்தம் எண்ணெய்க்காக நடந்ததுதான்.

சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. சோவியத் யூனியனை சிதைக்க எத்தனையோ முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டது. ஆனால், இரும்புத்திரை நாடாக இருந்த வரை சோவியத் யூனியனுக்குள் அமெரிக்காவின் சதித்திட்டங்கள் பலிக்கவில்லை.

1980களின் இறுதியில் கோர்ப்பசேவ் சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். அதன்பிறகு சோவியத் யூனியனில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. வெளியுலகினருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது. சோவியத் யூனியனில் இணைத்திருந்த பல்வேறு மாநிலங்களின் இன உணர்வையும் மத உணர்வையும் ஆதிக்க உணர்வையும் தூண்டி விட்டது.

படிப்பகம்

padippakam



தனித் தனி அரசுகளாக செயல்பட பல மாநிலங்கள் முடிவு செய்தன. அங்கு மக்கள் கிளர்ச்சிகளை அமெரிக்கா தூண்டிவிட்டது. இதையடுத்து சோவியத் யூனியன் 1991-ல் துண்டுத் துண்டாக சிதறியது. ரஷ்யாவை ராணுவ உதவியுடன் எல்ட்சின் கைப்பற்றினார். அதன்பிறகு அங்கு ஜனநாயக நாடு என்ற பெயரில் அவர் அடித்த கூத்துகளை பார்த்து உலகமே சிரித்தது.

சோவியத் யூனியன் சிதறும் வரை ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல நாடுகள் மேற்கத்திய நாடுகளை ஒதுக்கிவிட்டு நிம்மதியாக ஆட்சி நடத்தி வந்தன. சோவியத் யூனியனை ஆதரிக்கும் நாடுகளில் குழப்பம் ஏற்படுத்த அந்த நாடுகளில் எதிர் குழுக்களை உருவாக்குவது அமெரிக்காவின் வேலையாக இருந்தது.

அரபு நாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் அமெரிக்கா ராணுவப் புரட்சிகளை தூண்டிவிட்டு ஆட்சி மாற்றங்களை ஆதரித்து இருக்கிறது. இராக்கில் சதாம் உசேனை அமெரிக்காதான் வளர்த்துவிட்டது. அங்கு மன்னர் ஆட்சியை தூக்கி எறிந்துவிட்டு சதாம் உசேன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அமெரிக்காவின் கைப்பாவையாகச் செயல்படும் வரை சதாம் உசேன் நல்லவராக இருந்தார்.

ஆனால், அமெரிக்காவிற்கு எதிராக திரும்பிய உடன் அவர் சர்வாதிகாரி என்று அமெரிக்கா பிரச்சாரம் செய்தது. ஐ.நா. சபையை பயன்படுத்தி இராக் மீது பொருளாதார தடைகள், ஆயுத சோதனை என்று சதாம் உசேனை பணிய வைக்க பல நெருக்கடிகளை ஏற்படுத்தியது. அந்த நெருக்கடிகள் மூலம் இராக் அரசாங்கமும் ராணுவமும் பலம் இழந்தன. நெருக்கடிகளுக்கு காரணமான சதாம் மீது மக்களுக்கு வெறுப்பை உருவாக்கும் முயற்சிதான் இது.

தனக்கு பிடிக்கவில்லை என்றால் மனித உரிமைகள் மீறல், பேரழிவு ஆயுதங்கள் போன்ற ரெடிமேட் புகார்களை அமெரிக்கா பரப்பும். தடைகள் என்ற பெயரில் அந்த நாடுகளின் அரசுகள் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் வகையில் பிரச்சாரம் செய்யும். தனது பிரச்சாரத்திற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஐ.நா. சபையையும் துணைக்கு அழைத்துக் கொள்ளும்.

படிப்பகம்

padippakam





இதுதான் அமெரிக்காவின் பாணி.

அமெரிக்காவின் இந்த பாணியை சுக்குநூறாக உடைத்தவர் கடாஃபி.

அவர் கம்யூனிஸ்ட்டும் அல்ல. முதலாளித்துவ ஆதரவாளரும் அல்ல. அரேபிய சோஸலிஸ்ட் என்று தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். இஸ்லாமிய சட்டங்களை அமல்படுத்தினார். அதேசமயம், பெண்களுக்கு எல்லா உரிமைகளும் இருப்பதாக அறிவித்தார். தனது பாதுகாப்பு படையை பெண்களைக் கொண்டே அமைத்தார்.

லிபியாவின் வளங்கள் அனைத்தையும் லிபியர்களுக்கே பிரித்தளிப்பதில் உறுதியாக இருந்தார்.

மக்களுக்குத் தேவையான அனைத்தும் லிபியாவில் இலவசமாகவோ, மலிவான விலையிலோ கிடைத்தது. மக்களின் வாழ்க்கைத் தரம் உலக அளவில் மேம்பட்டிருந்தது.

இதுதான் அவருடைய பலம். மக்கள் ஆதரவுடன் அமெரிக்கா மற்றும் ஐ.நா.தடைகளை அவர் சமாளித்தார். அமெரிக்காவுக்கு அதன் பாணியிலேயே பதிலடி கொடுத்தார். தனது

padippakam



நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவுக்கும் ஐ.நா.சபைக்கும் எதிரான முடிவை சர்வதேச நாடுகள் எடுக்கும்படி செய்தார்.

ஆனால், இராக் மீதான போருக்குப் பிறகு அவருடைய அரசியல் முடிவுகளில் மாற்றம் ஏற்பட்டது. சதாம் உசேனை வீழ்த்திய அமெரிக்கா, லிபியாவையும் எளிதில் வீழ்த்த திட்டமிடும் என்று கடாஃபி நினைத்தார். லிபியாவுக்கு எதிராக அமெரிக்கா கூறிவந்த பிரச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினார். அதனால்தான் பேரழிவு ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்தார்.

சதாம் உசேனைப்போல இல்லாமல், கடாஃபி ஆப்பிரிக்காவில் நெல்ஸன் மண்டேலாவுக்கு அடுத்தபடியான தலைவராக மாறினார். ஆப்பிரிக்க நாடுகளை ஒருங்கிணைக்கும் அவருடைய யோசனை செயல்வடிவம் பெற்றது. எனவே, சதாமை ஒழித்ததுபோல ராணுவ நடவடிக்கையால் கடாஃபியை ஒழிக்க முடியாது என்பது அமெரிக்காவுக்கு புரிந்தது.

உடனிருந்தே அவருக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட வேண்டும். ஏதேனும் புதிய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று அமெரிக்கா நினைத்தது. கடாஃபிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி உருவாக வாய்ப்பு இருக்கிறதா என்று காத்திருந்தது.

கடாஃபிக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் உடனடியாக அவருக்குத் துணை வருவது யாராக இருக்கும்?

எகிப்தும், துனிஷியாவும் கடாஃபிக்கு ஆதரவாக வரக்கூடும். இரண்டுமே லிபியாவின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள நாடுகள். இரண்டு நாடுகளிலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே தலைவரின் கீழ் ஆட்சி நடைபெற்று வந்தது.


துனிஷியாவை முதலில் பார்ப்போம்.

இந்த நாடு 1957-ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. முதல் ஜனாதிபதியாக ஹபிப் பவ்ர்குய்பா பொறுப்பேற்றார். இவர் மேற்கத்திய நாடுகளின் ஆதரவாளராகச் செயல்பட்டார்.

படிப்பகம்

padippakam





**துனிஷியாவில் ஜனாதிபதி பென் அலியின் உருவப்படங்கள் கிழிக்கப்பட்டன**

*ஆனால், 1982-ஆம் ஆண்டு முதல் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைமையகம் செயல்படுவதற்கு அனுமதி அளித்தார்.*

*1985-ஆம் ஆண்டு துனிஷியாவில் உள்ள பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைமையகம் மீது இஸ்ரேல் கொடூரமான தாக்குதல் நடத்தியது. துனிஷிய ராணுவம் இஸ்ரேலின் தாக்குதலை முறியடிக்க முடியவில்லை. தலைமையகம் முற்றாக அழிந்தது. பாலஸ்தீன போராளிகளும், துனிஷியர்களும்தான் இறந்தார்கள். ஆனால், இந்த தாக்குதலைத் தொடர்ந்து அவருக்கு அமெரிக்காவின் ஆதரவு குறைந்து விட்டது.*

*பவ்ர்குய்பா ஆட்சிப் பொறுப்பேற்று 30 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருந்தது. அவருக்கும் வயதாகிவிட்டது. ஏற்கெனவே, ஆயுள் காலத்திற்கும் அவரை ஜனாதிபதியாக நீடிக்க வகைசெய்து அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருந்தது.*

*இந்நிலையில், 1987-ஆம் ஆண்டு துனிஷியாவின் பிரதமராக இருந்த பென் அலி சத்தமில்லாமல் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றினார். பவ்ர்குய்பாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று அறிவித்துவிட்டு, துனிஷியாவின் ஜனாதிபதியாக அவர்*

படிப்பகம்

padippakam



பொறுப்பேற்றார்.

தொடர்ந்து அந்த நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் ஒவ்வொருமுறையும் 90 சதவீதம் வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியாக நீடித்தார். லிபியாவுடனும், எகிப்துடனும் அவர் நல்லுறவு வைத்திருந்தார். லிபியா மீது தடைகள் விதிக்கப்பட்ட சமயத்தில் கடாஃபியின் முயற்சிகளுக்கு உதவியாக இருந்தார்.

கடாஃபி முயற்சியால் ஆப்பிரிக்க யூனியன் உருவானபோது அதில் இணைந்தார். அதைத் தொடர்ந்து அரபுநாடுகளின் கூட்டமைப்பு உருவானபோதும் அதில் துனிஷியா இணைந்தது.

2009-ஆம் ஆண்டு துனிஷியாவில் தேர்தல் நடைபெற்றது. அதிலும் 89 சதவீதம் வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியானார். தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி பொறுப்புக்கு 75 வயதுவரை போட்டியிடலாம் என்ற சட்டத்திருத்தத்தை கொண்டுவந்தார். அதற்கு பொதுமக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்தினார்.

70 வயதை நெருங்கிய பென் அலி தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்காகவே இந்த சட்டத்திருத்தத்தை கொண்டுவந்தார் என்று எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்தன. மக்கள் ஆதரவுடன்கூட ஒருவர் நீண்டகாலம் பொறுப்பில் இருப்பதை அமெரிக்கா விரும்புவதில்லை. துனிஷியாவில் எதிர்க்கட்சிகளுக்கு அது உதவிகளைச் செய்தது.

2009-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் செல்லாது என்று எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. ஆனால் அதற்கு போதுமான ஆதரவு இல்லை. ஆப்பிரிக்க யூனியனின் பார்வையாளர்கள் முன் நடைபெற்ற தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என்ற பிரச்சாரம் தொடர்ந்தது. தேர்தலை சர்வதேச பார்வையாளர்கள் முன்னிலையில் நடத்த துனிஷியா மறுத்ததாக அமெரிக்கா குற்றம் சுமத்தியது.

இந்நிலையில், தனது கடையை நகராட்சி அதிகாரிகள் அடித்து நொறுக்கி விட்டதாக இளைஞர் ஒருவர் தீக்குளித்து இறந்தார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கின. 200 பேர் நடத்திய அந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு சர்வதேச அளவில் மீடியாக்கள் முக்கியத்துவம் அளித்து ஒளிபரப்பின. அதையடுத்து

படிப்பகம்

padippakam





அரசு எதிர்ப்பாளர்கள் யாரையும் விட்டு வைக்கவில்லை. இவர்கள் அடிப்பார்களே என்று பயந்தவர்கள் கூட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்

துனிஷியா முழுவதும் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தன. இந்தப் போராட்டம் பென் அலிக்கு எதிராக திரும்பியது.

2009-ஆம் ஆண்டு நடந்த தேர்தலை ரத்து செய்துவிட்டு புதிய தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோஷம் எழுந்தது. போராட்டம் நீடித்த நிலையில் 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் துனிஷியாவில் நெருக்கடி நிலை அமுல்படுத்தப்பட்டது. துனிஷியாவின் பிரதமரான முகமது கன்னோவ்ச்சி தொலைக்காட்சியில் தோன்றி, துனிஷியாவின் ஜனாதிபதியாக தான் பொறுப்பேற்று இருப்பதாக அறிவித்தார். அடுத்த ஆறு மாதங்களில் துனிஷியாவில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

ஜனாதிபதி பென் அலி துனிஷியாவை விட்டு சவூதி அரேபியாவுக்கு சென்று விட்டதாக செய்திகள் பரவின.

புதிய ஜனாதிபதியாக கன்னோவ்ச்சி பொறுப்பேற்றது செல்லாது என்று துனிஸ் நீதிமன்றம் அறிவித்தது. ஆளும் கட்சிக்கு தடைவிதித்து, அந்தக் கட்சிகளின் சொத்துகளை முடக்க வேண்டும் என்ற புதிய கோரிக்கை எழுந்தது. இந்நிலையில் கன்னோவ்ச்சி பொறுப்பிலிருந்து விலகி, பெஜி கேய்ட் எஸெப்ஸி என்பவர் தற்காலிக ஜனாதிபதியாக

படிப்பகம்

padippakam



நியமிக்கப்பட்டார். பென் அலியையும் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளை தேடிக் கண்டுபிடிக்க இண்ட்டர்போல் உதவியை நாடியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

2011-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதி துனிஷியா நாடாளுமன்றத்துக்கு புதிய தேர்தல் அறிவிக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. அத்துடன் துனிஷியாவில் மக்கள் எழுச்சி முடிவுக்கு வந்தது. ஆனால், அங்கு தேர்தல் தள்ளி வைக்கப்படலாம். சுமுகமாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தும் சூழல் நிலவுகிறது என்று சர்வதேச பார்வையாளர்கள் உறுதி அளித்தபிறகுதான் துனிஷியாவில் தேர்தல் அறிவிக்கப்படும். அதாவது பென் அலியின் ஆதரவாளர்களை முற்றாக களையெடுத்த பிறகுதான் தேர்தல் நடத்தப்படும். இனி அங்கு அமெரிக்காவுக்கு ஆதரவான பொம்மை அரசு அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

**எ**கிப்திலும் இதே காலகட்டத்தில்தான் "மக்கள் எழுச்சி" உருவானது.

எகிப்தில் முடியாட்சியை தூக்கியெறிந்து மக்களுக்கான ஆட்சியை உருவாக்கியவர் கமால் அப்துல் நாசர். 1952-ஆம் ஆண்டு அங்கு குடியரசு மலர்ந்தது. 1970-ஆம் ஆண்டு நாசர் மாரடைப்பால் மரணம் அடைந்தார். அதையடுத்து அன்வர் சதாத் ஜனாதிபதியானார். அவர் 1987-ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார்.

அதைத் தொடர்ந்து, ஹோஸ்னி முபாரக் ஜனாதிபதியானார். தொடர்ந்து 30 ஆண்டுகள் தேர்தல் மூலமாகத்தான் அவர் ஜனாதிபதியானார். 2003-ஆம் ஆண்டு அவருக்கு எதிராக மக்கள் இயக்கத்தை எதிர்க்கட்சிகள் தொடங்கின. மாற்றம் வேண்டும் என்ற முழக்கத்தை அவர்கள் எழுப்பி வந்தனர்.

இந்நிலையில்தான் துனிஷியாவில் "மக்கள் எழுச்சி" காரணமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அங்கு ஜனாதிபதி பென் அலி, நாட்டை விட்டு வெளியேறியதை எகிப்து எதிர்க்கட்சிகள் உதாரணமாக பிரச்சாரம் செய்தன.

சர்வதேச மீடியாக்களின் உதவி தங்களுக்கும் கிடைக்கும் என்று நம்பினார்கள். கிடைக்காமல் எங்கே போகப்போகிறது?

படிப்பகம்

padippakam





துனிஷியாவில் என்ன நடந்ததோ அதுவே எகிப்திலும் நடந்தது

முபாரக்கிற்கு எதிராக போராட்டம் தொடங்கியது. துனிஷியாவில் போராட்டம் முடிந்திருந்த நிலையில் சர்வதேச மீடியாக்கள் எக்ப்தில் குவிந்தன. மீடியாக்களின் கேமராவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மட்டுமே பதிந்தனர். எகிப்து முழுவதுமே முபாரக்கிற்கு எதிராக திரும்பிவிட்டது போன்ற தோற்றத்தை அவை உருவாக்கின.

முபாரக் ஆதரவாளர்கள் அல்லது தேசிய உணர்வு மிக்கவர்களிடம் கருத்துக் கேட்பதை மீடியாக்கள் தவிர்த்தன. வெளிநாட்டுத் தலையீடு, குறிப்பாக அமெரிக்கத் தலையீடு இருப்பதை அவர்கள் அம்பலப்படுத்துவார்கள் என்பதால் அவர்களை மீடியாக்கள் தவிர்த்தன.

2011 ஜனவரி மாதம் 25-ஆம் தேதி முபாரக்கிற்கு எதிராக போராட்டம் தொடங்கியது. பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி முபாரக் தனது ராணுவத்திடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு எகிப்திலிருந்து வெளியேறினார்.

பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி எகிப்தின் அரசியல் சட்டமும், நாடாளுமன்றமும் கலைக்கப்படுவதாக ராணுவம் அறிவித்தது.

படிப்பகம்

padippakam





**எகிப்தில் முபாரக் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள்**

2011 செப்டம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. புதிய அரசியல் சட்டம் குறித்து 2011-ஆம் ஆண்டு பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ராணுவம் உறுதி அளித்தது.

இவை எதுவுமே நடக்கவில்லை என்பது 2011 நவம்பர் மாதத்து நிலை.

சர்வதேச மீடியாக்கள் தங்கள் திறமைகளை தங்களுக்குள் மெச்சிக் கொண்டு, அடுத்த அமெரிக்க விருப்பம் எது என்பதை அறிந்துகொள்ள ஆர்வமாகிவிட்டன.

துனிஷியாவும் எகிப்தும் அமெரிக்காவின் சதிக்கு சோதனைக் களங்கள். அங்கு நேட்டோ ராணுவ நடவடிக்கை இல்லாமலேயே ஆட்சி மாற்றங்கள் நடந்துவிட்டன.

இப்போது, அமெரிக்காவின் குறி லிபியா. மீடியாக்கள் குஷியாகிவிட்டன.

படிப்பகம்

padippakam





ஆப்பிரிக்க யூனியன் உருவாவதற்கு காரணமான கடாஃபி, ஆப்பிரிக்கக் கண்டத்தை பச்சையாக மாற்ற கனவு கண்டதுதான் தவறு

# இனி என்னாகும் லிபியா?

"பெரிய அளவில் சுதந்திரம் பெறுவதற்காக லிபியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும். துனிஷியாவிலும் எகிப்திலும் மக்கள் போராடி வென்றதைப் போல லிபியர்களும் போராட வேண்டும்"

எகிப்தில் கலவரம் கட்டுக்கடங்கவில்லை. அந்த நிலையில் லிபியாவில் எழுத்தாளர் ஒருவர் இணையதளம் ஒன்றில் லிபிய அரசுக்கு எதிராக போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்.

அவர் பெயர் ஜமால் அல்-ஹாஜி.

2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில் அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

பிப்ரவரி மாதம் முதல் தேதி அவரை லிபிய போலீஸார் கைது செய்தனர். மூன்றாம் தேதி அவர்மீது குற்றச்சாட்டு பதிவானது.

படிப்பகம்

padippakam



தனது காரை மோதி ஒருவரை காயப்படுத்தியதாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

உடனே, அவருக்கு ஆதரவாக சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனம் குரல் எழுப்பியது.

வன்முறையற்ற அரசியல் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததால்தான் அவரை லிபிய போலீஸார் கைது செய்ததாக அது குற்றம் சுமத்தியது.

இந்நிலையில், பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், மீடியா முக்கியஸ்தர்களை அழைத்துப் பேசினார்.

"லிபியாவில் அமைதியை சீர்குலைத்து துன்பங்களை உருவாக்க வேண்டாம்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஆனால், மீடியாக்கள் அவருடைய வேண்டுகோளை மிரட்டலாக மாற்றி வெளியிட்டன.

**2011-**ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி எகிப்தில் "மக்கள் எழுச்சி" முடிவுக்கு வருகிறது. அதாவது எகிப்து ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுகிறது.

அடுத்த இரண்டே நாட்கள்தான்.

2011 பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி.

லிபியாவின் பெங்காஸி நகரில் ஃபெதி டார்பெல் என்ற மனித உரிமை ஆதரவாளர், கடாஃபி அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

அது என்ன குற்றச்சாட்டு தெரியுமா?


1984-ஆம் ஆண்டு திரிபோலி மற்றும் பெங்காஸி பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் மத்தியில் கடாஃபி அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்த சில மாணவர்கள் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டனர். அந்தத் தண்டனை நிறைவேற்றம் லிபிய தொலைக்காட்சியில் அப்போது ஒளிபரப்பப்பட்டது.

இதைத்தான் கடாஃபிக்கு எதிராக ஃபெதி டார்பெல்

படிப்பகம்

padippakam





சுமத்தினார். சர்வேதச நீதிமன்றத்தில் அவர் மீது வழக்குத் தொடரப்போவதாக அறிவித்தார்.

இதையடுத்து, அவரை லிபிய போலீஸ் அதிகாரிகள் கைது செய்தனர். அவருடைய கைதைக் கண்டித்து அவருடைய ஆதரவாளர்கள் அல்லது கடாஃபி எதிர்ப்பாளர்கள் 200 பேர் பெங்காஸி நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அமைதியான ஆர்ப்பாட்டம் அல்ல. அரசுச் சொத்துகளை அவர்கள் அடித்து நொறுக்கினார்கள். அவர்களை அடக்க ராணுவம் வந்தது.

இந்தக் காட்சிகள் சர்வதேச மீடியாக்களில் ஒளிபரப்பானது. திரும்பத் திரும்ப ஒளிபரப்பானது.

இதைப்பார்த்த பைதா, ஜிந்தான் உள்ளிட்ட நகரங்களிலும் நூற்றுக்கணக்கான கடாஃபி எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அமைதியான ஆர்ப்பாட்டம் இல்லை. அரசுச் சொத்துகளை அடித்து நொறுக்கி தீ வைக்கும் ஆர்ப்பாட்டம். போலீஸார் கூட்டத்தைக் கலைக்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதில் 34 பேர் காயமடைந்தனர். இதுகுறித்து அல் ஜஸீரா தொலைக்காட்சிக்கு இத்ரிஸ் அல் மெஸ்மரி என்ற நாவலாசிரி

படிப்பகம்

padippakam



யர் பேட்டி அளித்தார். அவரையும் போலீஸார் கைது செய்தனர்.

ஜிந்தான் நகரின் மையப் பகுதியில் போராட்டக்காரார்கள் கூடாரங்களை அமைத்து அங்கேயே தங்கத் தொடங்கினர். இரண்டே நாள்களில் இந்தப் போராட்டம் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. அந்த அளவுக்கு மீடியாக்கள் செயல்பட்டன.

உடனடியாக கடாஃபி எதிர்ப்பு தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் திரண்டனர். அவர்களுக்கு ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன என்பது புரியாத புதிராக இருந்தது. போலீசையும் ராணுவத்தையும் ஆத்திரமூட்டும் வகையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பினருக்கும் இடையில் நடந்த மோதல்களை மக்களுக்கு எதிரான மோதல்களாக மீடியாக்கள் சித்தரித்தன.

லிபியாவில் இருந்து வெளியேறி வெளிநாடுகளில் தங்கிய கடாஃபி எதிர்ப்பாளர்கள் புதிய திட்டத்தை வகுத்தார்கள். போராட்டம் தொடங்கிய மூன்றாம் நாள் கடாஃபி அரசுக்கு எதிரான அனைவரும் பிப்ரவரி 17-ஆம் தேதி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தும்படி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

அவர்களுடைய இந்த வேண்டுகோள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டன. ஒரே சமயத்தில் நாட்டின் முக்கியமான நகரங்களான பெங்காஸி, அஜ்தாபியா, டெர்னா, ஜிந்தான், பைதா ஆகிய நகரங்களில் ஆயுதம் தாங்கிய கடாஃபி எதிர்ப்பார்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களை ஒடுக்குவதற்கு ராணுவம் சண்டையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பொதுமக்கள் மீது ராணுவம் தாக்குதல் நடத்தினால் மக்களைப் பாதுகாக்க நேட்டோ ராணுவம் தாக்குதல் நடத்தும் என்று அமெரிக்கா அறிவித்தது. ஆயுதம் ஏந்தியக் குழுவினரின் எண்ணிக்கை அதிகரித்தது. தலைநகர் திரிபோலியில் போராட்டக்காரர்கள் அரசு அலுவலகங்களுக்கு தீவைத்தனர்.

போராட்டக்காரர்களின் அட்டூழியங்களை மீடியாக்கள் ஒலிபரப்பவே இல்லை. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடப்பதாகவும் அப்பாவி மக்கள் மீது ராணுவம் தாக்குதல்

படிப்பகம்

padippakam





இஸ்லாமிய நாட்டின் தலைவர் ஒருவர் பெண் கமாண்டோக்களை தனது பாதுகாப்புக்காக வைத்திருப்பது பெரிய விஷயம் என்று கருதப்பட்டது

நடத்துவதாகவும் ஆயுதம் இல்லாத பொதுமக்களை ராணுவம் சுட்டுக் கொல்வதாகவும் மீடியாக்கள் பிரச்சாரம் செய்தன.

நேட்டோ அமைப்பின் விமானங்கள் திரிபோலி நகரின் மீது பறந்து குண்டுகளை வீசின. கடாஃபியின் அதிகாரப்பூர்வ மாளிகையின் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் கடாஃபியின் மாளிகை சேதமடைந்தது. ஆனால், கடாஃபி அப்போது அந்த மாளிகையில் இல்லை. நேட்டோ தாக்குதலை தொடர்ந்து ராணுவம் பின்வாங்கியது.

பெங்காஸி நகரில் கடாஃபி அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் ராணுவ அதிகாரிகள் இணைந்து மாற்று அரசாங்க குழு ஒன்றை உருவாக்கினார்கள்.

திரிபோலி, பெங்காஸி நகரங்கள் எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தன. கடாஃபி எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை. அவர் தனது சொந்தப் பிரதேசமான

படிப்பகம்

padippakam



சிர்ட்டேவுக்கு சென்றுவிட்டதாக செய்திகள் வெளியாகின. பல பகுதிகளில் ராணுவத்தை ஒருங்கிணைக்க சரியான உத்தரவுகள் கிடைக்கவில்லை. ராணுவத்தை குழப்பும் வகையில் மீடியாக்கள் தவறானச் செய்திகளை வெளியிட்டன.

லிபியாவில் கடாஃபி ஆதரவாளர்கள் மீடியாக்களால் புறக்கணிக்கப்பட்டனர். கடாஃபியை ஒழித்துக்கட்டுவதுதான் தங்களுடைய நோக்கம் என்று முடிவு செய்து அவை செயல்பட்டன. கடாஃபி எந்த நிலையிலும் லிபியாவை விட்டு வெளியேற மாட்டேன் என்று உறுதியாக அறிவித்தார். நேட்டோ ராணுவத்தின் விமானப்படை உதவியோடும் கடாஃபி எதிர்ப்பாளர்கள் முன்னேறினார்கள்.

பெங்காஸி நகரை எதிர்ப்பாளர்கள் கைப்பற்றுவதற்காக அந்த நகரின் மீது நேட்டோ விமானங்கள் குண்டுகளை வீசின. இந்த குண்டு வீச்சில் அங்குள்ள செயற்கை ஏரிக்கு நீர் கொண்டுவரும் பைப்லைன் சேதமடைந்தது. இது மக்கள் மத்தியில் மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியது. நேட்டோவின் தாக்குதலை நிறுத்த ராணுவம் முடிவெடுத்தது. உடனே அது நகரிலிருந்து வெளியேறியது.

துனிஷியாவைப்போல, எகிப்தைப்போல லிபியாவை சில நாட்களில் வீழ்த்த முடியவில்லை. கடாஃபி பயந்து டவுமில்லை. அவர் தனது சொந்த நகரமான சிர்ட்டேவில் மக்களோடு மக்களாக கலந்திருந்தார். சிர்ட்டே நகரை எதிர்ப்பாளர்கள் முற்றுகையிட்டார்கள். கடாஃபியின் ராணுவம் எதிர்ப்பாளர்களைத் தடுத்து நிறுத்தியது.

நேட்டோ குண்டு வீச்சின் கடாஃபியின் மகன் மற்றும் பேரக் குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். பிப்ரவரி மாதம் தொடங்கியப் போராட்டம் மாதக் கணக்கில் நீடித்தது. எதிர்ப்பாளர்கள் வசம் வந்த நகரங்களுக்கு நேட்டோ நாடுகளின் தலைவர்கள் பயணம் மேற்கொண்டார்கள். சிர்ட்டே நகரை இன்னமும் கைப்பற்றவில்லை.

கடாஃபியின் மனைவி, மகள், கடாஃபியின் இரண்டு மகன்கள் பக்கத்து நாடான அல்ஜீரியாவுக்கு தப்பிச் சென்றனர்.

2011-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி கடாஃபி எதிர்ப்பாளர்கள் நேட்டோ தலைவர்களை பாரீசில் சந்தித்தார்

படிப்பகம்

padippakam





**கடாஃபி தனது குடும்பத்தினருடன்**

கள். அதேநாளில் கடாஃபி ஒரு அறிக்கை வெளியிட்டார். லிபியாவில் அவர் தலைமையில் புரட்சி வெற்றி பெற்று 42 ஆண்டுகள் நிறைவடைவதை அவர் நினைவு கூர்ந்தார். தனது ஆதரவாளர்களை தொடர்ந்து சண்டை நடத்தும்படி அவர் உத்தரவிட்டார்.

இந்நிலையில் செப்டம்பர் 8-ஆம் தேதி லிபியாவின் இடைக்கால பிரதமராக மகமூத் ஜிப்ரில் பொறுப்பேற்றார். வெளிநாட்டில் தங்கியிருந்த அவர் தனது ஆதரவாளர்களால் திரிபோலி நகரம் கைப்பற்றப்பட்ட பிறகு முதன் முறையாக செப்டம்பர் 8-ஆம் தேதி அங்கு வந்தார்.

இடைக்கால அரசின் தலைவராக நியமிக்கப்பட்ட முஸ்தாபா அப்துல் ஜலில் முதன் முறையாக மக்கள் மத்தியில் பேசினார். சில ஆயிரம் பேர் மட்டுமே கூடியிருந்த அந்த கூட்டத்தை மீடியாக்கள் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பின.

இன்னமும் சிர்ட்டே நகரம் எதிர்ப்பாளர்களிடம் விழவில்லை. நகரத்தை முற்றுகையிட்ட எதிர்ப்பாளர்களுடன்

படிப்பகம்

padippakam



கடாஃபியின் ஆதரவாளர்கள் கடுமையான சண்டை நடத்தினார்கள். இதையடுத்து அவர்கள் பின்வாங்கினார்கள்.

இருந்தாலும் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுவிட்டது.

செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி கடாஃபியின் ஆதரவாளர்கள் நேட்டோ ராணுவத்திடம் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்தார். நாடு முழுவதும் கடாஃபியின் ஆதரவாளர்கள் நடத்திய சண்டைகளை மீடியாக்கள் மறைத்துவிட்டன. லிபியாவில் அமைதி ஏற்பட்டு விட்டது போன்ற தோற்றத்தை உருவாக்கின. மக்கள் புதிய அரசாங்கத்தை எந்த அளவுக்கு ஏற்கிறார்கள் என்பதை மீடியாக்கள் தெளிவுபடுத்தவில்லை.

அக்டோபர் மாதம் 18-ஆம் தேதி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் லிபியாவுக்கு வந்தார். அவர் என்ன சொன்னார் என்பது தெரியவில்லை. எதற்காக வந்தார் என்பதும் தெரியவில்லை. லிபியாவில் கடாஃபிக்கு எதிரான தீவிரவாதிகள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கூறியதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் அடுத்த இரண்டு நாட்களில் அதாவது, அக்டோபர் 20-ஆம் தேதி, சிர்ட்டே நகர் மீது நேட்டோவின் விமானப்படை உதவியுடன் தாக்குதல் நடத்த திட்டமிட்டது. இது கடாஃபிக்கு தெரிந்தவுடன் அங்கிருந்து அல்ஜீரியாவுக்கு தப்பிவிட முடிவெடுத்தார். லிபியாவில் அமைந்த புதிய அரசுக்கு அங்கீகாரம் அளிக்காத நாடாக அல்ஜீரியா இருந்தது. கடாஃபிக்கு அது ஆதரவாகவே இருந்தது. எனவே, முற்றுகையில் இருந்த சிர்ட்டே நகரை நேட்டோ கண்காணிக்கும் என்பது அவருக்குத் தெரியும். அங்கிருந்து தப்புவது எளிதல்ல என்பதும் அவருக்குத் தெரியும்.

இருந்தாலும் கடைசி முயற்சியாக அவருடைய ஆதரவாளர்கள் அவரை லிபியாவிலிருந்து அல்ஜீரியாவுக்கு கொண்டுபோய் விட்டுவிட விரும்பினார்கள். சிர்ட்டே நகரைச் சுற்றியிருந்த எதிர்ப்பாளர்களுடன் சரமாரியான மோதலில் ஈடுபட்டுக் கொண்டே அணிவகுத்த வாகனங்களில் ஒன்றில் கடாஃபி பயணத்தைத் தொடங்கினார்.

அவருடன் அவரது மகன்களில் ஒருவரான முடாஸ்ஸிம்,

padippakam





**கடாபியும் அவருடைய ஆதரவாளர்களும் அல்ஜீரியாவை நோக்கி சென்ற வாகனங்களின் மீது நேட்டோ விமானங்கள் குண்டுகளை வீசி தாக்கின**

லிபியாவின் ராணுவ அமைச்சர் அபு பக்கிர் யூனுஸ் உள்ளிட்ட முக்கியமான நபர்களும் சென்றனர். எதிர்ப்பாளர்களுடன் துப்பாக்கிச் சண்டை நடத்தியபடி வாகனங்கள் முன்னேறின. இதையடுத்தே நேட்டோ விமானங்கள் விரைந்தன. அவை கடாஃபி சென்ற வாகன வரிசை மீது சரமாரியாக குண்டுகளை வீசின.

இந்த குண்டுவீச்சில் கடாஃபியின் மகன்களில் ஒருவரான முடாஸ்ஸிம், லிபியாவின் ராணுவ அமைச்சர் அபு பக்கிர் யூனுஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

கடாஃபியும் அவருடைய நண்பர்கள் சிலரும் ஒரு குழாயில் ஒளிந்தார்கள். எதிர்ப்பாளர்கள் கடாஃபியை தேடி வந்தார்கள். கடைசியில் அவர்கள் இருந்த பகுதிக்குள் நுழைந்தனர்.

அங்கிருந்து கடாஃபியை எதிர்ப்பாளர்கள் பிடித்து இழுத்து வந்தனர். அவரைக் கொடூரமாகத் தாக்கினர்.

அவர் செய்த நல்லவை அனைத்தையும் மறந்தனர். கொஞ்சம்கூட ஈவிரக்கமில்லாமல் கொன்றனர்.

இப்படிப்பட்ட கொடுமைக்காரர்கள் பங்கேற்கும் புதிய அரசு எப்படி நல்ல அரசாக இருக்க முடியும்?

படிப்பகம்

padippakam



கடாஃபி கொல்லப்பட்ட விதம் உலக நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்தது.

ஆனால், லிபியா இனி மேற்கத்திய நாடுகளின் இன்னொரு அடிமை என்பதைத் தாண்டி வேறு நன்மை எதையும் பெறப் போவதில்லை.

மேற்கத்திய பாப் இசை பாடல்களையும், இண்டர்நெட்டில் ஆபாசப் படங்களைப் பார்ப்பதையும், டிஸ்கொதேக்களில் டான்ஸ் ஆடுவதையும் மட்டுமே பெரிய சுதந்திரம் என்று கருதிவிட்ட லிபிய இளைஞர்களில் ஒரு பிரிவினரை தூண்டிவிட்டு, அங்கு அமெரிக்கா ஜனநாயகத்தை காப்பாற்றி இருக்கிறது. அந்த ஜனநாயகம் அங்கு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?

லிபியாவில் எல்லா குடிமக்களுக்கும் மின்சாரம் இலவசம். அங்கு மின்கட்டணம் செலுத்த வேண்டியதே இல்லை.

வங்கிகள் அனைத்தும் நாட்டுடைமை என்பதால் குடிமக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வட்டியே இல்லை.

எல்லோருக்கும் வீடு என்பது லிபியாவின் மனித உரிமை பிரகடனம்.

புதிதாக திருமணம் செய்யும் தம்பதிகள் அனைவருக்கும் தங்களுடைய முதல் குடியிருப்பை வாங்குவதற்காக 24 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

கல்வியும், மருத்துவ சிகிச்சையும் எல்லோருக்கும் இலவசம். கடாபி தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கு முன் லிபியாவில் 25 சதவீதம் பேர் மட்டுமே கல்வி அறிவு பெற்றிருந்தனர். இப்போது அங்கு 83 சதவீதம் பேர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

விவசாயத்தை மேற்கொள்ள விரும்பும் லிபியருக்கு இலவச விளைநிலம் வழங்கப்படும். அத்துடன் பண்ணைவீடு, விவசாய சாதனங்கள், விதைகள், கால்நடைகள் என எல்லாமும் இலவசமாக வழங்கப்படும்.

தாங்கள் விரும்பும் கல்வி அல்லது மருத்துவ வசதி

padippakam





**இந்த பாலத்தின் பைப்லைனுக்குள்தான் கடாஃபியை அவருடைய ஆதரவாளர்கள் மறைத்து வைத்திருந்தனர்**

லிபியாவில் இல்லை என்றால், அவர்களுக்கு வெளிநாடு சென்று படிக்கவும் மருத்துவ வசதி பெறவும் பண உதவி செய்யப்படும். அதுமட்டுமின்றி, வெளிநாட்டில் அவர்கள் தங்குவதற்கும் காரில் செல்வதற்கும் மாதம் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

லிபியர் ஒருவர் சொந்தமாக கார் வாங்கினால் கார் விலையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

லிபியாவில் பெட்ரோல் விலை 6 ரூபாய் மட்டுமே.

இவ்வளவு செய்தும் அந்த நாட்டுக்கு வெளிநாட்டுக் கடன்கள் எதுவுமே இல்லை.

பட்டப்படிப்பு முடித்தபிறகு வேலை இல்லை என்றால், வேலை கிடைக்கும்வரை, அவருக்குரிய வேலைக்கு தகுந்த சம்பளம் இலவசமாக வழங்கப்படும்.

லிபியாவின் எண்ணெய் விற்பனையில் கணிசமான பகுதி லிபிய குடிமக்கள் பெயரிலான கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

படிப்பகம்

padippakam





குழந்தை பெறும் தாய்மாருக்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

லிபியாவில் 40 ரொட்டித் துண்டுகளின் விலை சுமார் 7 ரூபாய் மட்டுமே.

25 சதவீத லிபியர்கள் பல்கலைக் கழக பட்டம் பெற்றவர்கள்.

கடாபியின் சாதனைகளை வேறு எந்த நாட்டினரும் செய்ததில்லை.

தனது பாலைவன தேசத்தை பசுமையான சோலையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு தலைவனையே இப்படி கொடூரமாகக் கொன்றிருக்கிறார்கள்.

இலவசமே இருக்கக் கூடாது. உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டே தனது பொருளாதார நிலையை ஒரு நாடு தீர்மானிக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிற அமெரிக்கா லிபியாவை விட்டு வைக்குமா?


லிபியாவின் எண்ணெய் வளத்தை அது சுரண்டத்தான் செய்யும். புதிய அரசின் பொறுப்பாளர்கள் அமெரிக்காவை எஜமானனாகக் கருதி செயல்படப் போகிறார்கள். முதலாளிகள் இல்லாத சமூகத்தை அமைத்த கடாஃபியின் பெருமையை, அமெரிக்க முதலாளியின் அடக்குமுறைகள் விரைவிலேயே லிபியர்களுக்கு புரிய வைக்கும்?

ஏனென்றால் அமெரிக்கா என்பது ஒரு ஆக்டோபஸ்.

படிப்பகம்

padippakam





# ஒபாமாவின் யோக்யதை

"எல்லா அரசுகளும் பொய் சொல்கின்றன. அவை சொல்வது எதையும் நம்ப முடியாது"

ஐ.எப்.ஸ்டோன் என்ற அரசியல் அறிஞர் சொன்னது இது.

இரண்டாம் உலகப் போர் சமயத்திலிருந்து எத்தனையோ நாடுகள் மீது அமெரிக்கா போர் புரிந்திருக்கிறது. அந்த நாடுகளை ஜெயிக்க வேண்டும் என்று நினைப்பதெல்லாம், அவற்றிலிருந்து பலன்களை அடையத்தான்.

அமைதியைக் காப்பாற்றப் போகிறேன் என்று அமெரிக்கா சொன்னால் அந்த அரசாங்கத்தை அச்சுறுத்துகிறது என்று அர்த்தம். ஒரு நாட்டில் அது தனது வேலையை முடித்தால், அந்த நாடு அமெரிக்காவுக்கு அடிமை என்று பொருள்.

புதிய புதிய எதிரிகளை அமெரிக்கா கண்டுபிடித்துக் கொண்டே இருக்கும். போரும் தொடர்ந்து கொண்டே

படிப்பகம்

இருக்கும். அது அமைதியை நிலைநாட்டுவதாக சண்டை நடத்திய நாடுகள் பலவற்றில் இன்னும் சுமுகமான சூழ்நிலையே உருவாகவில்லை. இப்போதும் ஆண்டுக்கணக்கில் சண்டை நடந்து கொண்டேதான் இருக்கிறது.

அமெரிக்காவின் யுத்தங்கள் அனைத்தும் அதிகாரத்திற்காகவும், வளங்களுக்காகவும் நடத்தப்படுபவை. ஒடுக்கப்பட்ட மக்களை விடுவித்து, அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகிறேன் என்பதோ, மனித உரிமைகளைப் பாதுகாக்கப் போகிறேன் என்பதோ வெறும் கண்துடைப்பு வார்த்தைகள்.

போர்களில் தனக்கு விருப்பம் இல்லை என்று கூறித்தான் ஒபாமா பதவிக்கு வந்தார். ஆனால், புஷ்சை விட இருமடங்கு போர்வெறி கொண்டவராக மாறிவிட்டார்.

இராக்கிலிருந்து அமெரிக்க ராணுவத்தை வாபஸ் பெறுவதாக உறுதி அளித்தார். ஆனால், இராக்கிலும், ஆப்கானிலும் அமெரிக்கத் தாக்குதலை அதிகரித்தார். பாகிஸ்தான் மீது திடீர் தாக்குதல் நடத்தி பின்லேடனைக் கொல்ல உத்தரவிட்டார். லிபியா மீது தாக்குதல் நடத்தினார். இவை அனைத்துமே புஷ்சின் தொடர்ச்சிதான்.

இவை நேரடி யுத்தங்கள். ஆனால், சோமாலியா, மத்திய ஆப்பிரிக்கா, ஏமன், பஹ்ரைன், ஹெய்தி, ஹோண்டுரஸ், கொலம்பியா ஆகிய நாடுகளில் அரசுகளுக்கு எதிரான கலவரங்களை ஊக்குவித்து வருகிறார் ஒபாமா. உள்நாட்டிலோ, முஸ்லிம்களை பாடாய் படுத்துகிறார். லத்தின் அமெரிக்காவிலிருந்து குடியேறியவர்களை துன்புறுத்துகிறார். வேலை செய்யும் அமெரிக்கர்களையும் அவர் விட்டு வைக்கவில்லை.

இப்போது, முன்னெப்போதும் இல்லாத வகையில் அமெரிக்கா தனக்கு பிடிக்காத நாடுகளை ஒழித்துக் கட்டுவதில் புதிய உத்திகளை கையாளுகிறது. அரசுகளுக்கு எதிராக கருத்தை உருவாக்க முதலாளித்துவ மீடியாக்களை பயன்படுத்துகிறது.

எந்த ஒருநாட்டிலும் அந்த நாடு முன்னேறும் வகையிலான திட்டங்களை தடுப்பதற்கும், தாமதப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. பயங்கரவாதத்துக்கு நிதி உதவி அளிப்பதை குற்றம்

padippakam





என்று அமெரிக்கா கூறும். ஆனால் ஒரு நாட்டின் வளர்ச்சியை சீர்குலைக்க போராட்டங்களை நடத்துவதற்கு அதுவே நிதி உதவியும் அளிக்கும்.

ஒபாமா தன்னை வித்தியாசமானவராக விளம்பரப்படுத்தி ஆட்சிக்கு வந்தார்.

நம்பிக்கை, மாற்றம், அமைதி, ஜனநாயகத்தின் மதிப்பு ஆகியவற்றை காப்பாற்றுவேன். குவாண்டநாமோ சிறையை ஒரே ஆண்டில் மூடுவேன். துன்புறுத்தல்களையும், சட்டவிரோத மாக உளவு பார்ப்பதையும், விசாரணை இல்லாமல் கைது செய்து சிறையில் அடைப்பதையும் முடிவு கட்டுவேன்.

வெளிப்படையான நிர்வாகத்தை நடத்துவேன். அமைதிப் படையை இருமடங்காக ஆக்குவேன். ஒரே ஆண்டில் குடியேற்றச் சட்டத்தை சமத்துவ அடிப்படையில் மாற்றுவேன்.

இணையதள சேவைகளை சுதந்திரமாகவும் வெளிப்படை யாகவும் மாற்றுவேன். உண்மையான சுகாதார பாதுகாப்பு, நிதித்துறை சீர்திருத்தங்களை அமுல்படுத்துவேன்.

அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு ஆதரவளிப்பேன்.

ஈரான், சிரியா, வெனிசூலா, கியூபா, வட கொரியா ஆகிய நாடுகளின் தலைவர்களை சந்திப்பேன்.

படிப்பகம்

padippakam



*50 ஆயிரம் டாலர்களுக்கு குறைவாக சம்பாதிக்கும் மூத்த குடிமக்களுக்கு வருமான வரியை ஒழிப்பேன்.*

*இராக்கிலிருந்தும் ஆப்கனிலிருந்து அமெரிக்க படைகளை திரும்பப் பெறுவதுதான் எனது முதல்வேலை. புதிய யுத்தம் இருக்காது.*

*இப்படியெல்லாம் சொல்லிவிட்டு பதவிக்கு வந்தார் ஒபாமா. ஆனால், தனது எல்லா உறுதிமொழிகளையும் காற்றில் பறக்கவிட்டார்.*

*தனிப்பட்ட ஒபாமா ஆசைப்படலாம். ஆனால், அமெரிக்கா தனது ஏகாதிபத்திய லட்சியத்தில் இருந்து எப்படி விலக முடியும்? அவர் பொறுப்பேற்ற சமயத்தில் அமெரிக்காவில் பல லட்சக்கணக்கான மக்கள் வறுமையை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பங்குச் சந்தை வீழ்ச்சி அடைந்திருந்தது. கார்பரேட் நிறுவனங்கள் கடனில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தன.*

*அமெரிக்கர்களின் கவனத்தை மட்டுமின்றி அமெரிக்காவின் கிழிந்துபோன முகத்தை உலகம் பார்த்துச் சிரிப்பதை தவிர்க்கவும் ஏதேனும் செய்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*

*"அமெரிக்காவின் ராணுவயிஸமும், ஏகாதிபத்திய அரக்கத்தனமும், சுய அழிப்புத் தன்மையும் கட்டுப்பாட்டை இழந்து வருகிறது. இது அமெரிக்காவை கடும் நெருக்கடியில் தள்ளப் போகிறது. வெறுமனே சீர்திருத்தங்கள் மட்டும் அரசாங்கத்தை காப்பாற்றாது"*

*என்று சாமெர்ஸ் ஜான்ஸன் எச்சரித்திருந்தார்.*

*அமெரிக்கர்களுக்கு தங்களுடைய மேலாதிக்கத்தை காட்டும் நடவடிக்கைகள் மிகவும் பிடிக்கும். அதற்காக லிபியாவை ஏன் தேர்ந்தெடுத்தார் ஒபாமா? இத்தனைக் காலம் கழித்து இப்போது ஏன்?*

*2003 ஆம் ஆண்டிலேயே லிபியா மேற்கத்திய நாடுகளின் நண்பனாகி விட்டது. பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர், கார்டன் பிரவ்ன், பிரான்ஸின் சர்கோஸி, இத்தாலியின் சில்வியோ பெர்லுஸ்கோனி, அமெரிக்க வெளியுறவு அமைச்சர்*

padippakam





கண்டோலிஸா ரைஸ் உள்ளிட்ட தலைவர்களுடன் கடாஃபி நல்ல விவாதங்களை நடத்தியிருக்கிறார்.

2009-ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற ஜி-8 நாடுகளின் மாநாட்டில் ஆப்பிரிக்க யூனியனின் தலைவராக கடாஃபி பங்கேற்றார். அப்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்து கைகுலுக்கினார்.

இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைக்கு 2009-ஆம் ஆண்டு கடாஃபி சொன்ன தீர்வு,

"ஒரே நாடாக இருவரும் வாழ்வதுதான் அமைதிக்கு வழி"

கடாஃபியின் பேட்டி நியூயார்க் டைம்ஸ் இதழில் பெரிய தலைப்பிட்டு வெளிவந்தது.

2006-ஆம் ஆண்டிலேயே லிபியாவுடன் முழுமையான அரசாங்க உறவுகளை அமெரிக்கா ஏற்படுத்தியது. பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் பட்டியிலில் இருந்து லிபியாவை நீக்கியது.

"லிபியா ராணுவரீதியாக பலமிக்க நாடாக மாறுவதை விட பொருளாதார ரீதியாக பலமிக்க நாடாக மாற விரும்புகிறது" என்று நியூயார்க் டைம்ஸ் எழுதியிருந்தது. இதுதான் அமெரிக்காவைப் பாதித்தது.

படிப்பகம்

padippakam





சொந்த நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வந்த நிலையில் லிபியா பலமிக்க பொருளாதார நாடாக மாறுவதை அமெரிக்கா எப்படி வேடிக்கை பார்க்கும்? 34 ஆண்டுகள் மேற்கத்திய நாடுகள் கொடுத்த உலகளாவிய தொல்லைகளை மீறி, ஆப்பிரிக்காவுக்கே வழிகாட்டும் தலைவராக கடாஃபி உருவானால் அதை ஒபாமா எப்படி தாங்குவார்?

உள்நாட்டில் அவருடைய செல்வாக்கு படுவேகமாக சரிந்து கொண்டிருந்த நிலையில், அதிலிருந்து அமெரிக்கர்களின் கவனத்தைத் திருப்ப லிபியாவைப் பயன்படுத்திக் கொண்டார்.

இதற்கு லிபியா மக்கள் பலிகடாகியுள்ளனர்..

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

719



உள்ளூர் வங்கி முதல் உலகவங்கி வரை, அண்டை நாடு மட்டுமல்ல எந்த நாட்டிடமிருந்தும் ஒரு ரூபாய்கூட கடன் வாங்காமல், லிபியாவை வளம் கொழிக்கும் தேசமாக்கிய அதிபர் கடாஃபியின் வாழ்க்கை வரலாற்றை அற்புதமாக தந்துள்ளார் அண்ணன் ஆதனூர் சோழன். உலகமயமாக்கல் -சந்தைப் பொருளாதாரம் -வல்லரசுகளின் கலாச்சாரப் படையெடுப்பால் வளமான தேசத்தை சிக்கலுக்குள்ளாக்கி, கடாஃபியை எப்படி வீழ்த்தியது அமெரிக்கா என்பதை ஓங்கி ஒலித்து சொல்லியிருக்கிறார் ஆதனூர் சோழன்.

-நக்கீரன் கோபால்

5.90

ISBN: 978-93-81020-94-4

படிப்பகம்